கோகுலம்

Gokulam

மே '91 ரூ. 3/-




MAGGI CLUBBERS FUN LOVERS
MAGGI CLUB
மேகி கிளப்
பரிசுகள், இலவசம்.
வனவிலங்குகளுடன்
பெறுவீர், உல்லாசம்!
குழந்தைகளே! மேகி கிளப்பில் சேருங்கள். வருடம் பூராவும் கொண்டாட்டம் பெறுங்கள். நியூஸ் லெட்டர்கள், பரிசுகள், விளையாட்டுகள் இன்னும் நீங்கள் செய்வதற்கு எத்தனை எத்தனையோ!
இந்த சின்னத்தை மேகி நூடுல்ஸ் 5 காலி உறைகளின் முன்பக்கத்திலிருந்து வெட்டி எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள். உங்கள் பெயர், விலாசத்துடன் உங்களுக்குப் பிடித்த பரிசையும் குறிப்பிட்டு எழுதுங்கள். நீங்கள் மேகி கிளப் உறுப்பினராக இருந்தால் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிட மறந்துவிடாதீர்கள். இதுவரை உறுப்பினர் ஆகவில்லை என்றால் இப்போது ஆகலாம்.
மேலே குறிப்பிட்ட விவரங்களை அனுப்பும்போது, உறுப்பினர் ஆக விரும்புவதாகவும் எழுதுங்கள். நாங்கள் உங்கள் பரிசுப் பொருளுடன் இலவச மேகி கிளப் உறுப்பினர் அட்டையையும் அனுப்புவோம்.
எங்கள் விலாசம் :
மேகி கிளப்
தபால்பெட்டி எண் : 5788,
புது டில்லி-110 055.
KING OF THE JUNGLE
TO LET
Archie
ஆர்ச்சி காமிக்
MAGGI 2-minute noodles
EASY TO COOK! GOOD TO EAT!
Name:
Membership no.:
HTA 7105 TAM

கோகுலம்



1991 மே மாத இதழ்
மலர் : 9 இதழ் : 4



அருமைச் சிறுவர் சிறுமியரே!

இந்த இதழ் கோகுலம் உங்கள் கைகளில் தவழும் போது பலருக்கும் தேர்வுகள் முடிந்து விடுமுறை ஆரம்பமாகியிருக்கும். விடுமுறை என்பது முழுக்க முழுக்க விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலும் செலவிட அனுமதிக்கப்பட்ட நாட்கள் என்று பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். புதிய வகுப்பில் புதிய சூழ்நிலைகளில், புதிய பாடங்களைச் சந்திக்க உங்களை நீங்கள் தயார் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கும் நாட்களே இவை என்று எண்ணி, அதற்கேற்பத் திட்டமிட்டுச் செயல்பட்டால் உங்களை வெல்ல யாரால் முடியும்?

புதிய பகுதிகளைப் பாராட்டிப் பலரும் எழுதியிருக்கிறார்கள். 'கோகுலம் சிறுவர் சங்கத்தைத்தான் செயல்படாமல் செய்துவிட்டீர்கள். நாங்கள் நடத்தி வரும் சிறுவர் சங்கத்தின் செய்திகளையாவது போடக் கூடாதா?'' என்று பலரும் கேட்டு எழுதுகிறார்கள். இவர்களது குறையைப் போக்கச் சிறுவர் சங்கச் செய்திகளுக்கென இரண்டு பக்கங்களை அடுத்த இதழிலிருந்து ஒதுக்க எண்ணியிருக்கிறோம். நீங்கள் நடத்திவரும் சிறுவர் சங்கத்தின் பெயர், முகவரி, தலைவர், துணைத் தலைவர், செயற்குழு உறுப்பினர்களது பெயர்கள், சங்கத்தின் குறிக்கோள் எவ்வளவு ஆண்டுகளாக நடந்து வருகிறது ஆகியவற்றை எழுதி, உங்கள் பெற்றோர் அல்லது பள்ளி ஆசிரியரது கையொப்பத்துடன் அனுப்பி வையுங்கள். இதற்கென யாரும் கோகுலத்தின் சார்பில் சந்தா வசூல் செய்யக் கூடாது. இதற்கும் 'கோகுலம்' பத்திரிகைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை மறந்து விடவேண்டாம். உறையின் மேல் 'சிறுவர் சங்கச் செய்தி' என்று குறிப்பிடவும்.

படம் இங்கே பாடலெங்கே போட்டிக்கு வந்த பாடல்களைப் பார்க்கும் போது பிரமிப்பாக இருந்தது! அவ்வளவு அற்புதமான பாடல்கள் வந்திருந்தன. மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.

இந்த இதழில்

பிறந்த நாள் கவியரங்கம்

அறிவீரோ இவரை...

இவரைப் பற்றி உங்களுக்கே
எடுத்துச் சொல்லவா? — நீங்கள்
ஏற்கெனவே இவரை நன்றாய்
அறிவீர் அல்லவா?

அரவிந்த மகரிஷியின்
அன்பைப் பெற்றவர் — இவர்
அமரகவி பாரதியின்
நட்பும் கொண்டவர்
அருளியலில் கனிந்து கவி
யோகியானவர் — இவை
அத்தனைக்கும் மேலேமெய்
அடக்கம் மிக்கவர்.

இயல், இசை, நாடகமாம்
மூன்று தமிழிலும் — இவர்
எத்தனையோ நல்ல நூல்கள்
செய்து தந்தவர்.
அயல்மொழிப் புதினங்களைத்
தமிழில் ஆக்கியே — நம்
அன்னைத்திரு முடிக்கு மேலும்
அழகு சேர்த்தவர்!

பலமொழிகள் தாய்மொழிபோல்
பயின்றிருந்தவர் — மனப்
பக்குவத்தால் பதினெட்டாண்டு
மௌனம் காத்தவர்.
உலகநாடு பலப்பலவும்
சென்று வந்தவர் — ஆனால்
உள்ளத்திலே பச்சைப்பசும்
குழந்தை போன்றவர்.

இவரைப் பற்றி இன்னும் இன்னும்
விரித்துச் சொல்லவா? — உங்கள்
இதயத்திலே என்றும் இவர்
உள்ளார் அல்லவா?
கவியோகி சுத்தானந்த
பாரதி என்றால் — கருங்
கல்லும்கூடக் கனிந்துருகிப்
பணிந்து போற்றுமே!

— ரா. பொன்ராசன்.



யாரும் கிடையாது !



நாட்டு விடுதலை போருக்கே
வீட்டைப் பாசறை யாக்கிடவே
'ஆனந்த பவன' மாளிகையை
அளித்தார் 'சுயராஜ்ய பவனமெ'ன!

''அந்நிய நாட்டுப் பொருள் மோகம்
அடிமைத் தனத்தின் சின்னம்'' என
அண்ணல் காந்தி சொன்னதனால்
அழித்தார் தீயில் அருந்துணிகள்!

காச நோயில் படுத்தாலும்
காலன் மடியில் கிடந்தாலும்
''கண்டிட வேண்டும் விடுதலையை''
கனவிலும், நினைவிலும் கருத்திதுதான்!

கரடு முரடுக் கல் சிறையில் — மகன்
கை, தலை வைத்துப் படுப்பானே,
பிறகெனப் பஞ்சணை தனக்கென்று — அவர்
பாழும் தரையில் கிடப்பாராம்!

பொன்னொடு பொருளைச் சேர்த்தாலும்
புகழினை ஈட்டச் செய்வதுவே
மன்னிடு கடனாம் தந்தைக்கு
மணிமொழிக் குறளின் குரலிதுதான்!

மோதிலால் போலொரு தந்தையினை
மேதினி காண முடியாது;
நேருவைப் போலொரு மகன் தந்தார்
நேமியில் யாருங் கிடையாது!

— ரா. பா. சாரதி.

பேசப் பேச வளருமே!

வீரம் செறிந்த மண்ணில் பிறந்த
விந்தை மனிதர் கோகலே!
ஈர நிலத்தில் பதிந்த தடம்போல்
இதயம் நிறைந்த தலைவராம்!

வாட்டும் வறுமை தன்னில் கூட
வருந்த வில்லை அவர்மனம்
நாட்டின் அடிமைத் தனைநினைந்து
நாளும் நொந்த பொன்மனம்!

நினைத் திருந்தால் தம் தொழிலில்
நிறை பொருளைத் தேடலாம்!
அனைத்தும் விட்டு எளியவராய்
ஆன தென்ன காரணம்!

எங்கள் அன்னை நாட்டைப் பிறர்
ஆள்வ தற்கு விடுவதோ!
சிங்கம் போல வலிமை கொண்டோர்
சிறுநரி யாய்ப் போவதோ!

பொறுத்த தெல்லாம் போதுமினிப்
புலியைப் போல மாறுவோம்!
கருத்தில் ஒன்றிக் கைகள் கோத்துக்
களத்தில் வாகை சூடுவோம்!

என்று சொல்லிக் காங்கிரஸின்
தலைமை ஏற்ற பெரியவர்
இன்றும் என்றும் நமது அன்பு
வணக்கத் துக்கே உரியவர்!

உரிமைக் காகக் குரல் கொடுத்து
உடல் மறைந்த தலைவரின்
பெருமை மிக்க வீர காதை
பேசப் பேச வளருமே!

— வெற்றியூர் கப. திருஞானம்.



உலகிடை ஏற்றியவர்!



வங்கம் என்னும் பூமியில் பிறந்து
வான்புகழ் தன்னை ஈட்டியவர் — நெஞ்சில்
தொங்கும் தாடி, மீசையில் சிங்கத்
தோற்றத்தைக் கண்முன் காட்டியவர்!

பள்ளிப் பருவம் முதலே கவிகள்
படைத்துப் பெருமை கூட்டியவர் — நன்கு
அள்ளிப் பருக அனைத்துக் கலைக்கும்
ஆர்வக் கரத்தை நீட்டியவர்!

சலசல சலவெனும் அருவியின் ஓசையில்
''ஜககண மன,'' கவி தீட்டியவர் — பொங்கிச்
சிலுசிலு சிலுவெனக் குருதியில் ஓடிடத்
தேசிய உணர்வினை ஊட்டியவர்!

''சாந்தி நிகேதனம்,'' எனும்ஓர் கல்விச்
சாலையை நிலைபெற நாட்டியவர் — அண்ணல்
காந்தி மகானுக்கு, 'மகாத்மா' என்கிற
காவியப் பெயரினைச் சூட்டியவர்!

'நோபெல்' பரிசினைக் 'கீதாஞ் சலி'யெனும்
நூல்பெற அரும்பணி ஆற்றியவர் — சாயாத்
தீபச் சுடரெனத் தாகூர் இந்தியத்
தேசத்தை உலகிடை ஏற்றியவர்!

— தளவை. இளங்குமரன்.

சாதனைக்கு ஒரு சசாங்கன்!

புல்லாங்குழல் மேதை அமரர் மாலி என்ற மகாலிங்கத்திடம் நண்பர்கள் பலரும் வந்து ஒரே மாதிரிக் கூறினர். ''ஏழு வயதுச் சிறுவன் எவ்வளவு அற்புதமாக உங்களைப் போலவே புல்லாங்குழல் வாசிக்கிறான் தெரியுமா?''

மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்று எண்ணிய மாலி, சிறுவனின் வாசிப்பைக் கேட்டதும் உண்மையாகவே பிரமித்துப் போனார். அவருடைய வாசிப்பாகவே இருந்தது அவன் இசைத்தது! மாலியால் மட்டுமே வாசிக்க முடியும் என்று முத்திரை குத்தப்பட்டிருந்த பல கஷ்டமான இராகங்களை அந்த ஏழு வயதுச் சிறுவன் மிக எளிதாகத் தனது குழலில் வாசித்துக் காட்டினான்! மாலி நெகிழ்ந்து தன்னையே மறந்தார்.

சிறுவனின் தந்தையை அழைத்துப் பையனைப் பற்றி விசாரித்தார் மாலி. அந்தச் சிறுவன்தான் சசாங்கன்.

சசாங்கனின் தந்தை சுப்பிரமணியன் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். அவரைக் கண்டு பேசினோம்.

''என் மகன் ஒரு பிறவி மேதை என்பதை அவனுக்கு ஒரு வயதாகு முன்பே அறிந்து கொண்டோம். அவன் ஒன்பது மாதக் குழந்தையாக இருந்த போது ஒரு திருமணத்திற்குப் போனோம். திடீரென்று குழந்தையைக் காணவில்லை! போலீசில் புகார் கொடுத்து விட்டுத் திரும்பினோம். 'உங்க குழந்தை நாதஸ்வர வித்வானின் மேடைக்குப் பின்னால் இருக்கிறது. தூக்கினால் அழுகிறது!'' என்று சிலர் நல்ல செய்தியைக் கூறினார்கள். சென்று பார்த்தோம். ஒன்பது மாதக் குழந்தை சசாங்கன் நாதஸ்வர வித்வான் வாசித்ததைத் தலையசைத்துக் கேட்டுக் கொண்டிருந்தான்!''

சசாங்கனின் தந்தை சுப்பிரமணியன் தொடர்ந்தார்.

''இசையை ரசிப்பதோடு, ராகங்களைக் கண்டுபிடிக்கும் அபூர்வ ஆற்றலும் அந்த முக்கால் வயதிலேயே அவனுக்கு இருப்பதை அறிந்து கொண்டோம். இரண்டரை வயதுக்குள் அவனுக்கு நூறு ராகங்களை இனம் கண்டு சொல்லும் திறமை வளர்ந்து விட்டது! வர்ணங்களையும் கீர்த்தனைகளையும் பாடிக் காட்டுவான்.''

''குடும்பத்தில் வேறு யாருக்காவது இசை ஞானம் இருந்திருக்கிறதா?'' என்று கேட்டேன்.

''யாருக்குமே இல்லை. நாங்கள் விவசாயக் குடும்பம். ஆனால், நான் புல்லாங்குழல் வாசிப்பேன். சசாங்கனுக்கு பிறவிலேயே இசை ஞானமும் ஆர்வமும் இருப்பதைக் கண்டு வயலின் சொல்லி வைத்தேன்,'' என்றார் சுப்பிரமணியம்.

''அப்படியா!'' என்று வியப்பைத் தெரிவித்தேன்.

''ஆமாம். ஆனாலும், வயலின் கற்றுக் கொண்டிருந்தாலும் சசாங்கனின் ஆர்வம் புல்லாங்குழலில் இருப்பதைப் பின்னால் அறிந்து கொண்டேன். அவன் என்னுடைய வாசிப்பைக் கவனித்து வந்திருக்கிறான். அது எனக்குத் தெரியவில்லை. ஒரு முறை வயலின் ஆசிரியர் வீட்டில் கிடைத்த புல்லாங்குழலை எடுத்து வைத்துக் கொண்டு திடீரென்று தானே அதை வாசிக்கத் தொடங்கி விட்டான். எங்களால் அதை நம்பவே முடியவில்லை. அதற்கப்புறம்தான் வயலினை நிறுத்தி விட்டு,புல்லாங்குழலைச் சொல்லித் தர ஆரம்பித்தேன். ஆனாலும் கற்றுக் கொடுத்ததை விட, அவன் தானாகக் கற்றதே அதிகம். பிறவி ஞானம் உள்ளவன் என்ற என் சந்தேகம் உறுதியானது'' என்றார் சுப்பிரமணியம்.

அவரே தொடர்ந்தார்.

''பெரிய வித்வான்கள் யாராவது பாடினால், உடனே அதை அப்படியே புல்லாங்குழலில் வாசித்துக் காட்டுவான். அதோடு தானாகவேயும் வாசித்துக் காட்டுவான். இதெல்லாம் ஐந்து வயதுக்குள். அதனால் என் மகன் எப்படியாவது புல்லாங்குழல் மேதை மாலியிடம் கற்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.''

சுப்பிரமணியம் மறுபடி தொடர்ந்தார்.

''அயல்நாட்டிலிருந்து மாலி இந்தியா

வுக்கு வந்திருந்த போது பையனை அவரிடம் அழைத்துச் சென்றேன். அதற்கு முன்பே நண்பர்கள் மூலம் சசாங்கனைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார் மாலி. அவனது வாசிப்பைக் கேட்டதும் திகைத்துப் போனார். என்னை அழைத்தார். இவன் ஒரு பிறவி மேதை. இவனை யாரிடமும் புல்லாங்குழல் கற்க அனுப்பாதீர்கள். ஆசிரியரின் 'பாணி' அப்படியே படிந்து விடும். தானாகவே கற்றுத் தேர்ச்சி பெறும் திறமை இவனுக்கு உண்டு. ஆசிரியர் அவசியமே இல்லை. இசை நுணுக்கங்களைத் தெரிந்து கொள்ள இவனுக்கு வாய்ப் பாட்டு மற்றும் கற்றுக் கொடுங்கள். புல்லாங்குழலில் இவன் தானாகவே தேர்ச்சி பெற்று முன்னணிக்கு வந்து விடுவான் என்றார் மாலி.''

''அப்படியானால் சசாங்கனுக்கு புல்லாங்குழல் வாசிப்பில் குருவே இல்லையா!' என்று கேட்டேன்.


''இல்லை. அவன் தானாகத்தான் கற்று வருகிறான்.''

1985 ஆம் ஆண்டில் சசாங்கனுக்கு ஏழு வயதான போது புல்லாங்குழல் மேதை மகாலிங்கம் கூறியது பொய்யாகவில்லை. இசைக்காக வாய்ப்பாட்டைக் கற்று, தானாகவே புல்லாங்குழலை இசைத்து முன்னேறி வரும் சசாங்கன் இன்று முன்னணி இசைக் கலைஞர்களுள் ஒருவனாகத் திகழ்கிறான்! கஷ்டமான கன ராகங்களைக் கூட மிக எளிதாக இசைத்து சீனியர் கலைஞர்களைத் திகைக்க வைக்கும் இந்தச் சிறுவனின் வெற்றிக்கு மூன்று காரணங்கள். முதலாவது இவன் ஒரு பிறவி மேதை. இரண்டாவது, இவனுடைய முன்னேற்றத்திற்காக மாதம் ஐந்தாயிரம் சம்பளம் வரக்கூடிய தனது (மைசூர் பல்கலைக் கழகத்தின்) பேராசிரியர் பதவியை உதறித் தள்ளி விட்டு சென்னைக்கு வந்து நிழலாக மகனைக் காத்து வரும் தந்தை சுப்பிரமணியத்தின் இலட்சியம். மூன்றாவது, நாளொன்றுக்கு எட்டு மணி நேரத்திற்கு மேல் சாதகம் செய்து குழல் வாசிப்புக்கு மெருகூட்டி வரும் சசாங்கனின் அயராத உழைப்பு.

சசாங்கனின் வீட்டில் ஒரு ட. வி. கூட இல்லை! அவன் இதுவரை ஒரு சினிமாக் கூடப் பார்த்ததில்லையாம்! மற்ற இசைகளின் தாக்கம் மகனுக்குப் படிந்து விடும். அல்லது 'ஒரிஜினாலிடி' போய் விடும் என்ற அச்சமே காரணம்! தற்பொழுது சென்னை வித்யோதயா பள்ளியில் 7 வது படிவத்தில் படித்து வருகிறான் சசாங்கன். படிப்பிலும் முன்னணியில் நிற்கிறான்.

இவனுடைய முன்னேற்றத்திற்கு கர்நாடக அரசும் இந்திய அரசும் ஆதரவளித்து வந்திருக்கிறது. இசைக் கலைஞர்களை ஊக்குவித்து வரும் திரு. டி. டி. வாசுவின் உதவியும் இவனுக்குக் கிடைத்துள்ளது. தற்பொழுது இசைத் துறையில்

* யூனிசெஃப் நிதி உதவிக் கச்சேரியில்— ஜூனியர்மோஸ்ட் கலைஞனை சீனியர்மோஸ்ட் கலைஞர் பாராட்டுகிறார்!




பெருமை பெற்ற கலைஞரான பாலக்காடு கே. வி. நாராயணசாமி அவர்களிடம் வாய்ப் பாட்டுக் கற்று வருகிறான். சீனியர் கலைஞர்கள் பலரும் இவனுக்குப் பக்க வாத்தியம் வாசித்து உற்சாகப்படுத்தி வருகிறார்கள். கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவுக்குச் சென்று முழு நேரக் கச்சேரிகள் பலவற்றை நடத்தி விட்டுப் புகழோடு திரும்பியிருக்கிறான். பதினோராவது பிறந்த நாளை அங்கேதான் கொண்டாடினானாம்! இசைக்கு சங்கப் பலகையான 'மியூசிக் அகாடமி' மேடையும் இவனுக்குக் கடந்த டிசம்பரில் இடமளித்துச் சிறப்பித்துள்ளது. தனது பள்ளியின் வளர்ச்சிக்காக உதவிக் கச்சேரி செய்து கணிசமான தொகையைச் சேர்த்துத் தந்திருக்கும் இவனை, தெலுங்கு அகாடமியும் இந்த யுகாதி நன்னாளில் கௌரவித்துள்ளது. யுனெஸ்கோவின் 'யுனிசெஃப் அமைப்புக்காகவும் சமீபத்தில் வாசித்து நிதி உதவி செய்துள்ள இந்த 'ஜூனியர் மோஸ்ட்' கலைஞனை, 'சீனியர் மோஸ்ட்' கலைஞரான செம்மங்குடி சீனிவாச ஐயர் வாழ்த்திப் பரிசளித்திருக்கிறார்.

சசாங்கனுக்குப் பொழுதுபோக்குக்கு நேரமில்லை. இருந்தாலும் தபால் தலை சேகரிப்பதில் ஆர்வமுடையவன். காதுகளில் புளியங்கொட்டை அளவு கடுக்கன் அணிந்து, தலையை அசைத்து அசைத்து இவன் குரல் வாசிக்கும் போது நம்மையே மறந்து விடுகிறோம்.

தன் மகனது முன்னேற்றம் ஒன்றையே எண்ணி வாழ்ந்து வரும் பெற்றோரையும், அவர்களது கனவை நனவாக்கி வரும் சசாங்கனையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவன் இதுவரை சுமார் 250 கீர்த்தனைகளைக் கற்று வைத்திருக்கிறான். இது போல் இன்னும் இரண்டு பங்கு கற்க வேண்டும் என்கிறார் சுப்ரமணியன். சசாங்கன் செய்யக் கூடியவனே.

கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டி வாழ்த்தி விட்டு வந்தேன். — ரே.

அட்டைப்படம்: **உத்ரா**



கூடி வாழ் தம்பி!

விண்மணி ஆழியில் தெரியுது — தம்பி
வியத்தகு செயல்கள் செய்திடு!
பௌர்ணமி திங்கள் தெரியுது! — தம்பி
பலரும் போற்றிட வாழ்ந்திடு!

அறிவியல் வளர்ச்சி பெருகுது! — தம்பி
ஆக்கத்தில் மனத்தைச் செலுத்திடு!
கடலும் மலையும் தெரியுது! — தம்பி
கடவுள் படைப்பென்று தெளிந்திடு!

தொலைவில் வானம் தெரியுது — தம்பி
தொல்லையின் ஆசையை அகற்றிடு!
கோடைக்காலம் வருகுது — தம்பி
கூடி ஒன்றாய் மகிழ்ந்திடு!

— ஆர். நாகப்பன், சென்னை — 106.



பெரிய செல்வம்!

சொல்லட்டுமா, சொல்லட்டுமா,
ரகசியத்தைச் சொல்லட்டுமா?
பள்ளி செல்லும் பாலகனே!
படிப்பைப் பற்றிச் சொல்லட்டுமா?


செல்வத்தில் சிறந்த செல்வம்,
சிறப்புடைய பெரிய செல்வம்,
கல்விச் செல்வம் அல்லாமல்,
காண மாட்டாய் நல்ல தம்பி!

ஆடி மாதம் விதைவிதைக்க,
அருமையான மாதம் என்பர்;
கல்வி கற்க உன் பருவம்,
கனபொருத்தம் நீ உணர்வாய்!

காசு பணம் இருந்தாலும்
கப்பல் தொழில் நடந்தாலும்,
கற்றவரின் முன்னிலையில்,
கல்லாதார் பெருமையிலார்!

கற்றவரே கண்ணுடையார்,
கல்லாதார் புண்ணுடையார்,
உற்றமொழி உணர்ந்திடுவாய்,
ஊக்கத்துடன் படித்திடுவாய்!

— பெ. சின்னசாமி, கருப்பூர்.



மலை வாழ்க!

நீண்ட வானைத் தீண்ட வேண்டி,
நீளு கின்ற கரங்கள்.
தோண்டும் போது இரும்பு தந்து
தொழில்வ ளர்க்கும் இதயம்.

இயற்கைக் கொத்தன் எழுப்பியுள்ள
எஃகு போன்ற அரண்கள் —
வியக்க வைக்கும் சிகரம் பெற்று
மயக்கு கின்ற மலைகள்.

களைப்பி ரிக்கும் சிலைசெ துக்க
கல்லு டைக்க உதவி,
உலக னைத்தும் பரவ வேண்டி
உருவம் தேயும் தியாகி.

உலவு கின்ற மேகம் சற்று
ஓய்வெ டுக்கும் விடுதி.
குலவு கின்ற குளிர்ந்த தென்றல்
சுருத்த ரிக்கும் அருவி.

மாதம் மூன்று மழை கொடுக்கும்
மலைகள் பெற்ற மரங்கள்.
வாதம் போன்ற நோயும் தீர்க்கும்
மூலி கைத்தா வரங்கள்.

இன்றும் அன்றும் என்றும் வென்று
நின்று வாழும் தமிழாய்
என்றதற்கு ஈடிலாமல்
ஓங்கி நிற்கும் மலைகள்.

— சி. விநாயகமூர்த்தி, ஸ்ரீவில்லிபுத்தூர்.



கோழி அழைத்தது!

ஒரு காலத்தில் சீனத் தேசத்தில் ஹான்சி என்று ஒரு சிறிய கிராமம் இருந்தது.

அந்தக் காலத்தில் ஒன்பது சூரியர்கள் ஆகாயத்தில் ஒளி வீசிக் கொண்டு இருந்தன. அவற்றன் வெப்பம் சகிக்க முடியாததாக இருந்தது. கிராமத்துப் பெரியவர் ஒருவர் ஓர் யோசனை கூறினார். "நான் போய் "உர்ப்பு போலோ" என்ற அரக்கனை அழைக்கிறேன். அவன் வந்து இந்த சூரியர்களையெல்லாம் கொன்றுவிடட்டும்" என்றார் அவர்.

உர்ப்புபோலோ அழைத்து வரப்பட்டான். ஒன்பது சூரியர்களில் ஒருவன் மட்டும், எப்படியோ தப்பி, ஒரு மலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டான். அந்த அரக்கன் மற்ற எட்டு சூரியர்களையும் கொன்றுவிட்டான்.

சூரிய வெளிச்சம் இல்லாததால் ஹான்சி கிராமம் எப்போது பார்த்தாலும் இருட்டில் மூழ்கி இருந்தது. இருட்டாக இருப்பதால் கிராம மக்களால் வாழவே முடியவில்லை.

மீண்டும் கிராமத்துச் சபை கூட்டப்பட்டது. எல்லாருமாய்ச் சேர்ந்து, ஒளிந்து கொண்டு இருக்கும் சூரியனிடம், வெளியில் வந்து ஒளி தருமாறு கேட்டுக் கொண்டார்கள். சூரியன் வெளியில் வரவில்லை.

அங்கு இருந்த எல்லாப் பறவைகளையும், சூரியனை நோக்கி வேண்டுமாறு கிராம மக்கள் கேட்டுக்கொண்டனர். அப்படியும் சூரியன் வெளியே வரவில்லை.

கிராமத்தில் ஒரு கிழவன் இருந்தான். அவன் சூரியனை முன்பு மக்கள் எதிர்த்த போது, அவர்களுடன் சேராமலிருந்தான். "சூரியர்களைக் கொல்ல வேண்டாம்" என்று கூட யோசனை சொன்னான்.


அவன் தனது சேவலைக் கொண்டு வந்து, கூவச் செய்தான். ஒளிந்து கொண்டிருந்த சூரியன், கிழவன் மீது பரிதாபப்பட்டான். மறைந்திருந்த இடத்திலிருந்து வெளியே வந்தான்.

அன்று முதல், தமது எஜமானர்களின் ஆணைப்படி சேவல்கள் சத்தம் போட்டுக் கேட்டுக் கொள்வதால், சூரியன் தவறாமல் தோன்ற ஆரம்பித்தான்!

— சேலம் சக்திக்கொடி

வெட்டி ஒட்டுங்கள்

போட்டி முடிவு



வரவர கோகுலத்தில் போட்டி வைப்பதற்கே பயமாக இருக்கிறது! காரணம் உங்களுடைய பங்கு கொள்ளும் உற்சாகம் தான்! இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? இரண்டாயிரத்திற்கு மேல்! இணை அடித்து விட்டீர்கள்! எல்லோருமே சரியாக ஒட்டியிருந்தீர்கள். அதனால் குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்கும்படி ஆயிற்று.

ரூ. 10/— பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

1. அ. முகம்மது யூசுப், கோட்டுச்சேரி, காரைக்கால்.
2. க. பூங்குழலி, அம்பல், நன்னிலம்.
3. ஜி. சையத், ஷீராஜ், சென்னை — 59.
4. வி. திவ்யா, சோழவந்தான்.
5. ஏ. தஸ்நோவாஸ் அமிர்தராஜ், பூதலூர்.
6. பி. டயானா, நெய்வேலி — 2.
7. ஆர். லட்சுமணன், ஈரோடு — 2.
8. கே. சிவப்பிரகாஷ், பெங்களூர் — 8.
9. எஸ். தீபன், பெங்களூர் — 16.
10. ஆர். இளங்கோ, அகமதாபாத்—26.

பரிசு பெற்றவர்களுக்குக் கோகுலம் வாசகர்கள் சார்பில் பாராட்டுக்கள்.

நீயேவா வரைந்தே?

எஸ். அமுதா

அன்று திங்கள் கிழமை. ஆறாம் வகுப்பு மாணவியர் குதூகலமாய் இருந்தனர். ஒவ்வொருவரும் தங்களுடைய அறிவியல் நோட்டைப் பிரித்து அதில் தாங்கள் வரைந்து கொண்டு வந்திருந்த படத்தினை மற்றவரிடம் காண்பித்தனர்.

''என் படம்தான் நல்லா இருக்கு. மிஸ் 'குட்' போடுவாங்க'' என்றாள் கீதா.

''என் படத்துக்கு 'வெரிகுட்' போடுவாங்க'' என்று கூறி மகிழ்ந்தாள் ப்ரியா.

ஐந்தாம் வகுப்புவரை அவர்களுக்கு அறிவியல் பாடத்தில் படம் போடும்வேலைஇல்லை. ஆறாம்வகுப்பில்தான் அறிவியல் நோட்டில் படம் வரைய வேண்டும். முதன் முதலாக அறிவியல் டீச்சர் வெள்ளிக்கிழமை அன்று சில படங்களை வரைந்துவரும்படி 'வீட்டு வேலை' கொடுத்திருந்தார். இன்று திங்கள். அனைவரும் படம் வரைந்து நோட்டை எடுத்து வந்திருந்தனர்.


அதில் உள்ள படங்களைத்தான் மற்றவரிடம் காட்டி மகிழ்ந்து கொண்டிருந்தனர். மாலினி மட்டும் பேசாமல் இருக்கக் கண்டு ''ஏய், மாலினி, நீ படம் போடலையா? எங்கே உன் நோட்டைக் காட்டு'' என்று அவள் நோட்டை வாங்கிப் பார்த்தனர்.

நேர்க் கோடு அழுத்தம் இல்லாமலும், வளைவுகள் அவ்வளவு சீராக அமையாமலும், புள்ளிகள் பிசிறாகவும், சுமாராகத்தான் மாலினி படம் போட்டிருந்தாள்.

''ஐய்யே, என்னடி உன் படம் இப்படி இருக்கு! எங்க நோட்டை எல்லாம் பாரு. எப்படி ஜோரா இருக்கு'' என்றாள் மெர்சி.

''உன்னை மிஸ் நல்லாவே திட்டப் போறாங்க'' என்றாள் ஆனந்தி.

மாலினி அமைதியாகவே இருந்



தான். ஆசிரியை வரவும் அரவம் அடங்கிற்று. அட்டென்டென்ஸ் எடுத்து முடித்ததும் "அறிவியல் நோட்ல எல்லோரும் படம் வரைஞ்சுக்கிட்டு வந்தீங்களா?" என்று கேட்டார்.

"வரைஞ்சிட்டோம் மிஸ்" என்றனர் மாணவிகள் கோரஸாக.

"சரி. எல்லோரும் ஒவ்வொருவரா நோட்டைக் கொண்டு வாங்க" என்றார் ஆசிரியை. ஒவ்வொரு நோட்டாகப் பார்த்து அனுப்பினார்.

மாலினி முறை வந்ததும் நோட்டைப் பார்த்துவிட்டு மாலினியைப் பார்த்தார். மாலினி நன்றாகத் திட்டு வாங்கப் போகிறாள் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர்.

"ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. ஆசிரியை மாலினியின் நோட்டை மேஜை மீது வைத்துக் கொண்டு, "நீ போகலாம். அடுத்தது?" என்றார். அனைவரின் நோட்டையும் பார்த்து முடித்ததும், "அவரவர் நோட்டில் நீங்களே படம் வரைந்தீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம் மிஸ்" என்றனர் எல்லோரும் கோரஸாக.

"உண்மையாகக் கூறுங்கள். நிச்சயமாய் நீங்கள்தான் வரைந்தீர்களா?"

வகுப்பில் அழுத்தமான அமைதி நிலவியது.

"சொல்லுங்க! கீதா, உனக்கு வரைந்து கொடுத்தது யார்?"

"எங்க பக்கத்து வீட்டு அக்கா."

"அந்தப் பக்கத்து வீட்டு அக்கா பரீட்சையில வந்து உனக்கு வரைந்து தருவாளா?" என்று கேட்டார் ஆசிரியை.

கீதா எதுவும் பேசத் தெரியாமல் நின்றாள்.

"மெர்சி, உனக்கு யார் வரைந்து கொடுத்தது?" என்று ஆசிரியை வினவினாள்.

"நான்தான் மிஸ் வரைஞ்சேன்," என்றாள் நடுக்கத்துடன் மெர்சி.

"சரி. அப்படியானால் போர்டில் புத்தகத்தைப்பார்த்து அந்தப் படத்தை அப்படியே வரை."

மெர்சி மெல்ல வந்து சாக்பீசை எடுத்து போர்டில் புக்கைப் பார்த்து வரையத் தொடங்கினாள். நேர்க்கோடு அப்படியே கோணலாய் வந்தது! படத்தின் கால் பகுதிக்கே கால் மணி நேரம் கடந்தது. அப்படியும் பிரயோஜனமில்லை.

"நோட்ல வரைஞ்சது உண்மையாகவே நீயா இருந்தல் ஏன் போர்டில் வரையலே? உண்மையைச் சொல், யார் வரைந்தது?" என்றார் ஆசிரியை.

"எங்க அண்ணன் மிஸ்," என்று கூறவே, ஆசிரியை கோபத்தோடு திட்டியபின் மாலினியை, "உனக்கு வரைந்தது யார்?" என்றாள். மாலினி தான் தான் வரைந்தது என்று கூறவும் அவளை போர்டில் வரையும்படி கூறினார்.

அவளும் வரைய ஆரம்பித்தாள். சிறிது நேரத்திலேயே சுமாராக முழுப் படமும் வரைந்து விட்டாள்!

"குட், மாலினி ஒருத்திதான் உண்மையாகத் தானே நோட்டில் வரைந்து வந்து இருக்கிறாள். அவளும் நினைத்து இருந்தால் வேறு யாரையும் வரையச் சொல்லி வாங்கி வந்து இருக்கலாம். ஆனால் படிப்பின் ஆர்வம் காரணமாகத்தானே சுமாராக இருந்தாலும் பரவாயில்லை என்று வரைந்து இருக்கிறாள். எனவே, அவள் படத்துக்குத்தான் 'வெரிகுட்' போடுகிறேன்."

"மற்ற அனைவரும், நோட்டின் அடுத்த பக்கத்தில் அதே படத்தை நீங்களே உண்மையாக வரைந்து எடுத்து வர வேண்டும்" என்று கூறிச் சென்றார், ஆசிரியை.

மாலினியைத் தவிர மற்ற அனைவரும் தலை குனிந்தனர்.

"போஸ்ட்மேன் எப்படி விழுந்தார்?"

"'தபால்'னு!"

— ஏ. ஹரிகிருஷ்ணன், எலவனாசூர்.



லெனினைக் கவந்தவர்!



ஜானகிமணாளன்

“இங்கே பாரும்மா தம்பியை...!” என்று உரக்க அபயக் குரல் எழுப்பினாள் அக்கா.

“ஓடு... ஓடு... வேகமாய் ஓடு...” என்று அக்காவை மண்டி போட வைத்து, முதுகில் ஏறிக் குதிரை ஓட்டினான் தம்பி! அவனுடைய இடது கையில் அக்காளின் இரட்டைச் சடை! அதுதான் குதிரை லகான்! வலது கையில் சிறு குச்சி. அது சாட்டை!

இப்படி அடிக்கடி நடக்கும். பிறகுதான் அவனுக்குத் தான் செய்தது தவறு என்று விளங்கும். சாட்டையால் அடித்து விட்டோமே என்று வருந்துவான். அதற்குப் பரிகாரமாக ஏதாவது தின்பண்டத்தைக் கொடுப்பான். அதெல்லாம் கண நேரம் தான். உடனே வேதாளம் முருங்கை மரம் ஏறியது போன்று, அவனது இயற்கைக் குணம் தலைதூக்கி விடும்!

அந்தத் தின்பண்டத்தைத் தனது அழுக்குப் பிடித்த கைகளால் எடுத்துக் கொடுப்பான். அவர்கள் அதை அப்படியே வாங்கிக் கொண்டு தின்ன வேண்டும். இல்லாவிட்டால் அடிப்பான். இவையெல்லாம் அந்த வீட்டில் தினசரி நடப்பவை.

இப்படி எதற்கெடுத்தாலும் அவனிடம் ஒரு முரட்டுத்தனம். பிடிவாதப் போக்கு!

அவனுடன் பிறந்தவர்கள் ஏழு பேர். இரண்டு ஆண். ஐந்து பெண். அவர்களில் நான்கு பேர் சிறு வயதிலேயே காசநோயால் இறந்து விட்டனர். காசநோய் அந்த வீட்டின் குடும்பச் சொத்து! எஞ்சியது இரண்டு பெண்ணும் அவனும்தான்.

துவக்கப் பள்ளிப் படிப்புக்குப் பின், ட்ரியர் என்ற அவர்களின் சொந்த ஊரிலேயே உயர்நிலைப் பள்ளியில் அவன் சேர்க்கப்பட்டான். அப்போது அவனுக்குப் பன்னிரெண்டு வயது. லத்தீன், கிரீக், ஜெர்மன், பிரெஞ்சு போன்ற பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தான். வகுப்பில் கட்டுரைகள் எழுதும் போது, அவற்றில் அவன் சொந்தமாகத் தனது பொருள் பொதிந்த நுட்பமான கருத்

துக்களை வெளியிடுவான். ஒரு தடவை மகிழ்ச்சியான வாழ்வு என்பது பற்றி எழுதும் போது இப்படி எழுதினான்: 'தொழிலைத் தேர்ந்தெடுக்கும் போது மனித சமுதாயத்துக்கு அதிக நன்மை தரக்கூடிய தொழிலை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் உலக வாழ்க்கை நமக்கு ஒரு சுமையாகத் தோன்றாது. நமது சுமையால் பலருக்கு நன்மை ஏற்படும். அவர்கள் மகிழ்ச்சியில் வாழ்வார்கள். பலர் மகிழும்படி வாழ்வதுதான் நமக்கு மகிழ்ச்சி தரும் வாழ்வு ஆகும்!

ஆசிரியர்கள் பிரமித்துப் போவார்கள். பிற்காலத்தில் உலகுக்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்வான் என்று புகழ்ந்துரைப்பார்கள். அவை பொய்யாகவில்லை. பிற்காலத்தில் அவன் ஓர் அறிவுச் சுரங்கமாக விளங்கினான். புதிய புதிய தத்துவங்களைக் கண்டுபிடித்தான். அச்சிறுவன்தான் கார்ல் மார்க்ஸ்!

சென்ற மாதக் கோகுலத்தில் லெனின் பற்றிப் படித்தீர்கள் அல்லவா? அந்த லெனின் கார்ல்மார்க்ஸின் கொள்கைகளால் பெரிதும் கவரப்பட்டார். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், லெனின் கார்ல் மார்க்ஸின் கொள்கைகளைப் பின்பற்றித்தான் ருஷ்ய நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி வெற்றி கண்டார்.

கார்ல் மார்க்ஸின் முழுப் பெயர் 'கார்ல் ஹைன்ரிக் மார்க்ஸ்'. 1818 ஆம் ஆண்டு மே 5 ஆம் நாள் ஜெர்மனியில் உள்ள 'ட்ரியர்' என்ற ஊரில் பிறந்தார். தந்தை ஹைன்ரிக் மார்க்ஸ். தாய் ஹென்ரிட்டே! இவர்கள் யூத மதத்தைச் சேர்ந்தவர்கள். அம் மதத்தின் மீது விதிக்கப்பட்ட கொடுமையான தடைகளைப் பிடிக்காமல் அவர்கள் தமது ஏழு குழந்தைகளுடனும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர்.

பள்ளி வாழ்க்கை முடிந்ததும், மார்க்ஸ் மேற்படிப்புக்காக 'பான்' நகரப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். கல்லூரிக்கு அருகிலேயே வாடகைக்கு அறை எடுத்துத் தங்கினார். கல்லூரியில் சேரும் போது கல்வியில் இருந்த கவனம், போகப் போக அவரிடம் குறைந்தது. எனவே தந்தை இவரை ஒரே வருடத்தில் கல்லூரியிலிருந்து நிறுத்தி விட்டார்.

ட்ரியர் நகரில் மார்க்ஸின் பக்கத்து வீட்டில் ஒரு பணக்காரக் குடும்பம் வசித்து வந்தது. அவர்களுக்கு ஒரு மகள். பெர்த்தா ஜூலியா ஜென்னி என்று பெயர். மார்க்ஸும் ஜென்னியும் ஒருவரை ஒருவர் மிகவும் நேசித்தனர். பொருளாதார ஏற்றத் தாழ்வு மட்டுமல்ல; வயதிலும் கூட ஜென்னி மார்க்சை விட நான்கு வயது மூத்தவள். அவளுக்காக அவர் படிப்பைத் தொடர்ந்து டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பினார். அதுவரையில் ஏழு ஆண்டுகள் ஜென்னி அவருக்காகக் காத்திருந்தாள்! மணந்து கொண்டனர். பாரிசில் குடியேறினார்கள்.

பாரிசில் அவர் பத்திரிகை ஒன்றை வெளியிட்டார். 'ஜெர்மன் — பிரெஞ்சு மலர்' என்று பெயர். அவர் எழுதிய கருத்துக்களை அரசு ஏற்கவில்லை. எனவே அதன் முதல் இதழே கடைசி இதழும் ஆகிவிட்டது. காரணம் அரசின் தடைதான். ஏற்கெனவே அவர் 'ரைன்லாந்து கெஜட்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக இருந்திருக்கிறார். அதுவும் அரசினால் தடைக்கு ஆளானது. ஜெர்மனி — பிரான்சு நாடுகளில் வசிக்க முடியாத நிலை. நாடு கடத்தப்பட்டார். எனவே பெல்ஜியம் போனார். அங்கும் இதே கதைதான். மீண்டும் பாரிஸ் சென்றார். அங்கு அப்போது புரட்சி நடந்து

அப்படியே நம்புகிறார்கள்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புதுவையில் ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். "நம் மக்களுக்குச் சுயபுத்தி அதிகமாய் இருப்பதில்லை. சொந்தமாகச் சிந்தித்துச் செயல்படுவதில்லை. யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி வாழ்க்கையில் செயல்படுகிறார்கள். அவ்வாறு மற்றவர்கள் கூறுவது சரிதானா? இல்லையா? என்று யோசிப்பதே இல்லை."

இவ்வாறு பேசிக் கொண்டிருந்த புரட்சிக் கவிஞர், திடீரென கூட்டத்தினரைப் பார்த்து, பரபரப்பான குரலில், கை விரலால் ஓர் இடத்தைச் சுட்டிக் காண்பித்

தார். "அதோ, அங்கே பாருங்கள். என்ன அற்புதமான காட்சி!" என்று கூறினார்.

உடனே, அவர் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் பரபரப்படைய புரட்சிக் கவிஞர் காண்பித்த திசையில் பார்த்தனர். அங்கே எந்தவிதக் காட்சியும் தென்படவில்லை. திகைப்போடு திரும்பிப் பார்த்த மக்களை நோக்கி, "இப்போது என்ன நடந்தது என்று யோசியுங்கள். அங்கே பாருங்கள் என்று நான் சொன்னவுடன் நீங்கள் கொஞ்சமும் யோசிக்காமல் அந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தீர்கள் அல்லவா? இப்படித்தான் சிந்தனையே இல்லாமல் மக்களுள் பெரும்பகுதியினர், குருட்டுப் போக்கில் செயல்படுகிறார்கள்" என்று கூறினார்.

— நல்லாலம் காசிதாசன்,
கீழ்கொவளவேடு.

கொண்டிருந்தது. மீண்டும் பத்திரிகைத் தொழில். தொடர்ந்து அரசு எதிர்ப்பு. அவர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். அங்கிருந்து இங்கிலாந்து சென்று லண்டன் மாநகரில் குடியேறினார். இறுதி வரை அங்கு வாழ்ந்தார்.

லண்டனிலும் அவர் ஒரு பத்திரிகை நடத்தினார். அதுவும் விரைவில் நின்று போயிற்று. அத்துடன் வறுமை வேறு. மனைவி ஜென்னியும் நோய் வயப்பட்டாள். வீட்டு வாடகையைக் கூட அவரால் கொடுக்க முடியவில்லை. அழுக்கும் துர்நாற்றமும் சூழ்ந்த ஒரு பேட்டையில் ஆறு ஆண்டு காலம் வசித்தார். அவரது குழந்தைகள் அடுத்தடுத்து வறுமையின் பிடியில் சிக்கி இறந்து போயின. அடக்கம் செய்யச் சவப்பெட்டி வாங்கக் கூடப் பணம் இல்லை. இத்தகைய வறுமையிலும் கூடக் கணவனுக்கேற்ற நல்ல மனைவியாக வாழ்ந்து தானும் வறுமையில் வாடினாள் ஜென்னி. ஜென்னி இல்லையேல் கார்ல் மார்க்ஸ் இல்லை. இது குடும்ப வாழ்வில். இதே போல் பொது வாழ்வில் கார்ல் மார்க்சுக்கு ஒரு நண்பர்; பெயர் பிரெடரிக் ஏஞ்செல்ஸ். இருவருக்கும் இடையே நிலவிய நட்பு மிகவும் ஆழமானது.

லண்டனில் மார்க்ஸ் வறுமையில் வாடிய போது ஏஞ்செல்ஸ் பலவிதங்களில் உதவி செய்தார். அவர் உதவி மட்டும் இல்லாதிருந்தால் மார்க்ஸ் உயிருடனேயே இருந்திருக்க முடியாது. அத்தனை சிரமங்களுக்கும் இடையில் மார்க்ஸ் இரவு பகலாக நூலகங்களில் அமர்ந்து ஏராளமான நூல்களைப் படித்தார். குறிப்பெடுத்து விவரங்களைத் தொகுத்தார். அந்தக் குறிப்புகளில் மீது ஆராய்ந்து புதுப் புதுக் கொள்கைகளை வகுத்து ஒரு பொருளாதார நூலை உருவாக்கினார். அந் நூலுக்கு 'காபிடல்' என்று பெயர். 'தாஸ்காபிடல்' என்பார்கள். அதற்கிடையில் மார்க்சுக்கு இன்னொரு நண்பர். 'வில்லியம் உல்ஃப்' என்று பெயர். அவர் இறப்பதற்கு முன்பு 800 பவுனை மார்க்சுக்கு நன்கொடை எழுதி வைத்து விட்டுப் போனார். அப் பணம் மார்க்சின் வறுமை நீங்கப் பெரிதும் உதவியது. எனவே மார்க்ஸ் தனது 'காபிடல்' நூலை அந்த நண்பருக்குச் சமர்ப்பணம் செய்து வெளியிட்டார். அதன் பிறகுதான், அவருடைய கடைசி பத்து வருட வாழ்க்கை அதிகத் தட்டுப்பாடு இன்றிக் கழிந்தது.

1873 ஆம் ஆண்டு வாக்கில் அவருடைய உடல்நலம் வர வரச் சீர் கெட்டது. காபிடலின் இரண்டாம் பகுதிக்காக உழைத்தார். மார்க்சின் இறுதிக் காலம் நோயிலும் துக்கத்திலுமே கழிந்தது. 1881 டிசம்பரில் ஜென்னி இறந்தாள். அதற்குப் பிறகு மார்க்ஸ் பதினைந்து மாதங்களே உயிர் வாழ்ந்தார். மகளின் இறப்பும் சேர்ந்து கொண்டது. 1883 மார்ச் 14 ஆம் நாள் உலகை விட்டுப் பிரிந்தார்.

மார்க்ஸ் இறந்து விட்ட பிறகும், மார்க்ஸ் பற்றி வெளியுலகுக்கு எடுத்துக் கூறி, அவர் புகழை நிலைநிறுத்திய பெருமை ஏஞ்சல்சையே சாரும்! மார்க்ஸ் இல்லையேல் ஏஞ்செல்ஸ் இல்லை.

கார்ல் மார்க்ஸ் யூதராகப் பிறந்தார். கிறிஸ்தவராக வாழ்ந்தார். மனிதராக இறந்தார். அவருடைய கொள்கைகளை அப்படியே நடைமுறைப்படுத்தியவர் லெனின். அது இன்று உலகம் முழுதும் தழைத்தோங்கி வளர்ந்துள்ளது. இவ்வுலகில் பாட்டாளிகள் உள்ள வரையில் கார்ல் மார்க்சின் புகழ் நிலைத்திருக்கும்.

படிப்பவர்களின் ஆவலைத் தூண்டிப் பார்க்கும் சுவையான புதிய தொடர்கதை...!

மலைக் கோட்டை மர்மம்!

வீரவசந்தன்



ஏ வி எம் அறக்கட்டளையின்
தங்கப் பதக்கம்
பரிசு பெற்றது

ஜூன் இதழில்
ஆரம்பமாகிறது



ஆலும் தென்னையும்

குழந்தை இலக்கிய முன்னோடிகள்

மு. வ. என்று இலக்கிய அன்பர்களால் செல்லமாக அழைக்கப்பட்ட அமரர் டாக்டர் மு. வரதராசனார் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்தவர். எண்ணற்ற நாவல்களின் ஆசிரியர். இன்று ஒளிவீசித் திகழும் தமிழ்ப் பேரறிஞர்களில் பெரும்பாலோர் இவரது மாணவர்களே. புகழ் பூத்த இத்தமிழ் அறிஞர் ஒரு குழந்தை எழுத்தாளர் என்பது குழந்தைகளுக்காக எழுதுவோரை நிமிரச் செய்யும் உண்மை. 1961 ஆம் ஆண்டு வெளியான இக்கதை, அனுமதி பெற்று இங்கு உங்களுக்காக வெளிவிடப்படுகிறது.

ஊரின் எல்லையில் ஆலமரமும் ஒரு தென்னை மரமும் இருந்தன. பல ஆண்டுகளாகவே அந்த இரண்டு மரங்களும் அடுத்து அடுத்து இருந்து வந்தன. ஆலமரம் அகலமாய்ச் செழித்து வளர்ந்து நீண்ட விழுதுகளும் விட்டிருந்தது. தென்னை ஆரமரத்தைவிட இரண்டு பங்கு உயரம் ஓங்கியிருந்தது.

ஒரு நாள் மாலை இருள் சிறிது பரவியபின் இளைஞன் ஒருவன் கையில் வெட்டரிவாளுடன் ஆலமரத்தில் ஏறினான். நீண்ட கிளைகள் இரண்டை வெட்டினான். அவற்றை எடுத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான். அவன் தலை மறைந்தவுடன் தென்னை களுக்கென்று சிரித்தது.

''ஏன் சிரிக்கிறாய்?'' என்று ஆலமரம் கேட்டது.

''வேறு ஒன்றும் இல்லை. யாரோ ஒருவன் வந்தான். இரண்டு கிளைகளை வெட்டினான். பேசாமல் எடுத்துக் கொண்டு போகிறான். நீ வாய் மூடிக் கை கட்டிக் கிடக்கிறாய். நீயும் என்னைப்போல் உயரமாக வளர்ந்திருந்தால் உனக்கு இந்தக் கதி வந்திருக்காது. அதற்காகத்தான் சிரித்

அமரர் டாக்டர் மு. வரதராசனார்

தேன்!'' என்றது தென்னைமரம்.

அப்பொழுது காற்று இல்லை. ஆலமரம் சோர்ந்து நின்றது. ''வெட்டிக் கொண்டு போனால் போகட்டும். எப்படியாவது மற்றவர்கள் பயனடைந்தால் போதும். நான் மண்ணின் வயிற்றில் அடங்கி இருந்தபோது ஒரு சான்றோர் வந்தார். அவர் அப்போது சொன்ன அறிவுரையை நான் இன்றும் மறக்கவில்லை. யார் என்ன பறித்தாலும், என்ன தீமை செய்தாலும் பொறுமையுடன் இருக்குமாறு அவர் சொல்லிவிட்டுச் சென்றார். அதனால் அந்த இளைஞன் என்னை வெட்டிய போதிலும் தடுக்காமல் இருந்தேன்; பொறுமையுடன் இருந்தேன். அதற்காக நீ என்னைப் பார்த்துச் சிரிக்கலாமா?'' என்றது ஆலமரம்.

இதைக் கேட்டுத் தென்னைமரம் மறுபடியும் சிரித்தது: ''என்னைப் போல் உயரமாக வளர உன்னால் முடியாது. முடியாது என்பதை மறைத்துவிட்டுப் பொறுமை பொறுமை என்று பேசுகிறாய்!''

ஆலமரம் சிறிது நேரம் அசையாமல் நின்றது. அப்போது ஒரு காற்று வந்தது. மரம் புதிய ஊக்கமும் புதிய சிந்தனையும் பெற்றது. இரக்கத்தோடு தென்னைமரத்தைப் பார்த்தது: ''நீ உயரமாக வளர்ந்ததன் காரணத்தை மறந்துவிட்டாய். நீ சிறிது காலம் என் நிழலில் இருந்தாய். அப்போது உனக்குப் போதுமான வெயிலும் காற்றும் கிடைக்கவில்லை. என்னைப் போல் சுற்றுப்புறத்தில் உணவு தேட உன்னால் முடியவில்லை. அதனால் தான் நேராக வானத்தை நோக்கி உயர்ந்து சென்றாய். உணவுப் பஞ்சத்தால் உனக்கு ஏற்பட்ட நெருக்கடி அது. அதையே நீ பெருமையாகப் பேசுகிறாய்!''

தென்னைமரம் உடனே அதை மறுத்தது. ''எனக்குப் போதுமான உணவு கிடைக்கிறது. அப்படி ஒன்றும் பஞ்சம் இல்லை. நீதான் ஆயிரம் கைகளோடு வளர்ந்திருந்தும் உணவு போதாமல், விழுதுகள் விட்டு இன்னும் உணவு தேடுகிறாய். நான் அளவோடு சாப்பிட்டு அளவோடு வாழ்கிறேன். உனக்கு அளவே தெரியவில்லை!'' என்று ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்தது.

ஆலமரம் சிறிது தளர்ந்து வாடியது. அப்போது அங்கே இருவர் வந்தார்கள். அவர்களில் ஒருவர், ''அன்று



பகல். நாங்கள் இங்கே வந்த போது நல்ல வெயிலாக இருந்தது. முப்பது பேருக்கும் இந்த ஆலமரம்தான் நிழல் கொடுத்து உதவியது. இது எங்களுக்கு ஒரு பெரிய வீடுபோல் இருந்தது. இதன் நிழலில் எப்போது பார்த்தாலும் இந்த ஊரார் கூடியிருக்கிறார்கள். வழிப்போக்கர்களும் தங்கிவிட்டுப் போகிறார்கள். மரத்திற்கு என்ன வயது ஆனதோ தெரியவில்லை!'' என்றார். அப்போது அங்கே வந்த ஊர்க்கிழவர் ஒருவர், ''இது என்னுடைய பாட்டன் வைத்த மரமாம். எனக்கே தொண்ணூறு வயது ஆகிறது. இதற்கு என்னைவிட இரண்டு பங்கு வயது இருக்கலாம்'' என்றார். மறுபடியும் அவரே, ''எங்களுக்கு இந்த மரம்தான் ஒரு பெரிய மண்டபம் போல உதவியாய் இருக்கிறது. இங்கே எத்தனையோ முறை ஊர் கூடியிருக்கிறது. எவ்வளவோ திருமணக் கூட்டங்களையும், எவ்வளவோ வழக்குகளையும் இந்த மரம் பார்த்திருக்கிறது; கேட்டிருக்கிறது. நான் பையனாக இருந்தபோது வாத்தியாரிடத்தில் படித்ததும் இந்த மரத்தடியில்தான். மழை வந்தால் தான் வாத்தியார் வீட்டுத் திண்ணைக்குப் போவோம்'' என்றார்.

அப்போது வந்தவர்களில் ஒருவர், ''இந்தத் தென்னை மரத்துக்கு என்ன வயது இருக்கும்?'' என்று கேட்டார்.


உடனே அந்தக் கிழவர், ''இதுவா? என் மகன் கலியாணத்திற்குப் பிறகு வளர்ந்த மரம். இது உதவாத மரம். நிழலும் இல்லை. அவ்வளவாகக் காயும் இல்லை'' என்றார்.

ஆலமரத்திற்குப் புதிய ஊக்கம் ஏற்பட்டது. மரத்திலிருந்த நூற்றுக் கணக்கான காக்கைகள் எப்படியோ கலைந்து எழுந்து அதை வாழ்த்துவன போல், 'கா கா கா' என்று சுற்றிச் சுற்றிக் கரைந்தன. இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தென்னை மரம் தன் மகிழ்ச்சி அடங்கி வாடி நின்றது. வந்தவர்களெல்லாம் போன பிறகு மறுபடியும் அதற்குச் செருக்குத் தோன்றியது. ''ஏ ஆலமரமே! அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டு ஏமாந்து விடாதே! பிச்-



சைக்காரப் பயல்கள் சத்திரத்தைப் புகழ்வது போல அவர்கள் உன்னைப் புகழ்ந்து பேசினார்கள். நீயே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு வாழ முடியாத போது ஊருக்கும் உலகத்துக்கும் உதவி செய்கிறாயாமே! எல்லாம் வீண் பெருமை! நீயும் என்னைப் போல் உயரமாக வளர்ந்திருந்தால் உன்னுடைய கிளைகளெல்லாம் நெடுகப் போய் எவ்வளவோ உயரமாக இருப்பாய்! ஒரு பயலும் அப்போது உன்னிடம் அணுக மாட்டான். நீ கிளைகளை அகலமாகப் பரப்புவதால்தான் நிழல் கிடைக்கிறது என்று எல்லோரும் அங்கே வந்து கூடி ஆரவாரம் செய்கிறார்கள். உன்னால் என்னுடைய அமைதியும் கெடுகிறது. நீயும் என்னைப் போல் கணக்காக இருந்தால் உதவாத மரம் என்று என்னை எவனும் பழிக்கடமாட்டான். உன் பக்கத்தில் நான் இருப்பதே தவறாக இருக்கிறது'' என்று கடிந்து பேசியது.

சிறிது நேரத்தில் வானத்தில் வடகிழக்கு மூலையில் மின்னல் தோன்றியது. மேகங்கள் திரண்டு வந்தன. குளிர்காற்று வீசியது. இடி முழக்கம்



மழைக்கும், புயலுக்கும் தானே இயங்கும்!

● மழை தடுப்பான் (Rain Guard) என்ற சாதனத்தை ஜெர்மனியில் கண்டுபிடித்திருக்கிறார்கள். இது மழை பெய்தால் கண்ணாடி ஜன்னலைத் தானே அடைத்துக் கொள்ளும். புயல் அடித்தால் காற்றுத் திரையால் அடைத்துக் கொள்ளும்.

— கணேசன், கடையநல்லூர்.

கேட்டது. தூரல் தொடங்கியது. பெரு மழை ஆயிற்று. மரத்தடியில் நான்கு பேர் வந்து ஒதுங்கினார்கள்.

''டேய்! மழையும் இடியுமாக இருக்கும்போது மரத்தடியில் தங்கலாமா? ஊருக்குள் ஓடிப் போவோம்'' என்றான் ஒருவன்.

''ஆலமரத்தடியில் அவ்வளவு பயம் இல்லை. மரம் அகலமாகப் பரந்து இருப்பதால் பெரும்பாலும் இதன் மேல் இடி விழுவதில்லை'' என்றான் ஒருவன்.

''அடடே! இங்கே ஒரு தென்னை மரமும் இருக்கிறது. உயரமாகவும் இருக்கிறது. இப்படி உயரமாக இருக்கும் மரங்களின் மேல்தான் இடி விழுவது வழக்கம். இதனால் ஆல மரத்துக்கும் ஆபத்து. இந்த ஊரார் இதை வெட்டிப் போடக் கூடாதா? இதை ஏன் ஆலமரத்தின் பக்கத்தில் விட்டு வைத்திருக்கிறார்கள்?'' என்றான் மற்றொருவன்.

''உண்மைதான். நாம் இங்கே இருக்கக் கூடாது. இடி முழக்கம் மிகுதியாகிறது. சின்ன இடி விழுந்தால் கூடப் போதும். இந்தத் தென்னை மரத்தின் வாழ்வு போச்சு. ஆனால் ஆலமரத்தில் தப்பித் தவறி இடி விழுந்தாலும், நாலு கிளை போனால் நாற்பது கிளை வாழும். அடிமரமே போனாலும் விழுதுகள் காப்பாற்றும்'' என்று இன்னொருவன் சொல்லிக் கொண்டே ஊருக்குள் ஒரு திண்ணையை நோக்கி ஓடினான். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் ஓடினார்கள்.

தென்னை மரம் செருக்கு அடங்கி ஏக்கத்தோடு நின்றது.

இயற் பெயர் என்ன? — போட்டி

புகழ்பெற்ற பல தலைவர்களுக்கும், மேதைகளுக்கும் இயற்பெயர் வேறாகவும், மக்களிடையே பிரபலமாகியுள்ள பெயர் வேறாகவும் இருப்பதைக் காண்கிறோம். அத்தகைய பிரபல தலைவர், அறிஞர் பெருமக்களில் சிலரது இயற்பெயர் கீழே தரப்பட்டுள்ளது. எந்தப் பெயரால் அவர்கள் அழைக்கப்பட்டார்கள் என்பதை எதிரே எழுதியனுப்புங்கள். பரிசு கண்டிப்பாக உண்டு. கூப்பனோடு அனுப்ப வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி ஆசிரியர், கோகுலம், ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி—32.

1. ராம் மோகன் ....
2. ஹெலன் ஆடம்ஸ் ....
3. பிரான்காய்ஸ் மாரியா அரோவெட் (சிந்தனையாளர்) ....
4. சித்தார்த்தன் ....
5. அக்னஸ் கான்ஷா பெஜாட்சு ....
6. கான்ஸ்டென்டைன் ஜோசப் பெஸ்கி ....
7. நரேந்திரன் ....
8. பீமராவ் ....
9. முகமத் குர்ரம் ....
10. ஜலாலுதீன் முகமது ....
11. கதாதர் ....
12. விளாடிமீர் இல்விச் உலியனாவ் ....
13. விநாயக் நரஹரி பாவே ....
14. மயில்வாகனன் (இலங்கை) ....
15. வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் ....

எந்தப் பெயரால் அழைக்கப்பட்டனர்? — போட்டி

பெயர் : ....

முகவரி : ....

....

....

பின்கோடு ....

முடிவு தேதி: 15.5.91

புரட்சிக் கனலில் ஓர் அன்புப் புனல்!



ஹரிசிங்

நகரம் தீப்பற்றி எரிவது நன்கு தெரிந்தது. இடையிடையே குண்டு வெடிக்கும் சத்தமும் கேட்டுக் கொண்டே இருந்தது.

பிரஞ்சு அரசியார் மேரி அன்டாய்னெட் எதையுமே கவனிக்காது சித்திரத் தையல் போடுவதில் ஆழ்ந்திருந்தார். அவரது அருமை நாய் தோஷ்பி அவரது காலடியில் சுருண்டு கண் மூடிப் படுத்துக் கிடந்தது.

கதவைத் திறந்து கொண்டு பரபரப்போடு உள்ளே வந்தாள் ஒரு பணிப் பெண். ஊசியோடு நூலை இழுத்துக் காதுவரை கொண்டு சென்ற அரசியார், நிமிர்ந்து பணிப் பெண்ணை மிக அமைதியாக நோக்கினார்.

''மகாராணி, வெளியே நகரம் தீப் பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது. கலகக்காரர்களுக்கு ஈடு கொடுக்க முடியாது,எப்பொழுது அரண்மனை விழுந்து விடுமோ என்று இருக்கிறது. இந்த நிலையிலும் கூட, சற்றும் பரபரப்படையாமல் எப்படி உங்களால் இவ்வளவு அமைதியாக இருக்க முடிகிறது; பூத் தையலில் மனம் செலுத்த முடிகிறது!'' என்று வியப்போடு கேட்டாள் பணிப் பெண்.

''நான் பரபரப்படைவதால் என்ன நேர்ந்துவிடப்போகிறது பிராஸ்த்வா? இன்னும் கூறப்போனால், இந்த நிலைமையை நான் எதிர் பார்த்தேன். மக்கள் அரைவயிறு உணவுகூட இல்லாமல் அவதிப் படுகிறார்கள். நமது அரச ஆடம்பரச் செலவுகளுக்காக அவர்களை மேலும் மேலும் கசக்கிப் பிழிவது, எரி மலையைக் கிளறி விடுவதாகும். வரிச்சுமையைக் குறையுங்கள். அரண்மனை ஆடம்பரச் செலவைக் குறையுங்கள் என்று கெஞ்சினேன் அரசரிடம். ஆனால், துதி பாடும் பிரபுக்கள் கூட்டம் மன்னரைச் சிந்திக்கவே விடவில்லை. ஒடுக்கப்பட்டு அவதிப்படும் மக்கள் எத்தனை காலம்தான் பொறுப்பார்கள்? இப்பொழுது பொங்கி விட்டார்கள். எந்த நிலையையும் எதிர் பார்த்து, எல்லாவற்றிற்கும் தயாராக நான் காத்திருக்கிறேன்'' என்று அமைதியாகச் சிரித்தார் அரசியார்.

''உனக்குத் தெரியுமா பிராஸ்த்வா?'' நானும் கூட ஒரு காலத்தில் மன்ரை விட ஆடம்பரமானவளாகத்தான் வாழ்ந்தேன். ஆனால், மக்களது துன்பத்தை நேரில் கண்டறியும் அவசியம் ஏற்பட்ட பிறகு, என் அறிவும் மனிதாபிமானமும் விழித்துக் கொண்டு விட்டன. நான் என்னை முழுவதுமாக மாற்றிக் கொண்டு விட்டேன். ஆனால், அரசர் மட்டும் பிடிவாதமாக மாற மறுக்கிறார். அதன் விளைவுதான் இந்தக் கலகம்; புரட்சி எல்லாம்.


கதவு திறந்தது. பரபரப்போடு ஓடி வந்த ஒரு படை வீரன், ''மகாராணி, அரண்மனைக் கதவுகள் தகர்க்கப்பட்டு விட்டன. மன்னர், தம் குடும்பத்தோடு தப்பியோட முடிவெடுத்து விட்டார். இளவரசர்கள் இருவரும் அங்கேயே இருக்கிறார்கள். நீங்கள் மட்டும் எதாவது இன்றியமையாத ஓரிரு பொருளை எடுத்துக் கொண்டு என்னோடு வாருங்கள். தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் ஆபத்துதான் என்று அவசரப் படுத்தினான்.

தன் காலடியில் சுருண்டு கிடந்த தன் அருமை நாய் தோஷ்பியைக் குனிந்து இரு கைகளாலும் அள்ளிக் கொண்ட அரசியார், "நான் தயார். போகலாம்" என்றாள்.

பணிப் பெண்களும் படை வீரரும் அரசியாரைத் திகைப்புடன் நோக்கினர்.

"இந்தத் தோஷ்பி என் பிறந்த வீட்டுப் பரிசு. போன பிறந்த நாளின் போது என் அண்ணன் அளித்த அன்புப் பரிசு இந்த நாய். இது என் மேல் உயிரையே வைத்திருக்கிறது. நானும் அப்படித்தான். இதைவிட உயர்ந்த பொருள் எனக்கு ஏதும் கிடையாது" என்று சிரித்துக் கொண்டே கிளம்பினார் அரசியார்.

பிரபுக்களின் ஆதிக்கத்திற்கும்



மன்னரின் கொடுங்கோலாட்சிக்கும் எதிராக பிரஞ்சு மக்கள் புரட்சி செய்து எழுந்த காலம் அது. மக்கள் எழுச்சியைத் தாக்குப் பிடிக்க முடியாது பிரஞ்சு மன்னர் லூயி, தன் மனைவி இளவரசர்களோடு தப்பி ஓட முடிவெடுத்தார். ஆனால், அந்தத் திட்டம் வெற்றி பெறவில்லை. அவர்கள் பிடிக்கப்பட்டு சிறைக்குக் கொண்டுவரப்பட்டனர். புரட்சி மக்கள் மன்றத்தைக் கூட்டி அவர்களை விசாரணை செய்து தண்டனை கொடுக்க முடிவு செய்யப் பட்டது. அதுவரை அவர்களைச் சிறையிலடைக்க உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.


சிறை அதிகாரி எல்லோரையும் தனித்தனிச் சிறையில் அடைத்தார். அரசியாரின் அருமை நாய் தோஷ்பியைக் கூட அவர்கள் விடவில்லை! அரசியாரிடமிருந்து அதையும் பிரித்து அதைக் கூடத் தனிச் சிறையில் வைத்தனர்!

''நீங்களெல்லாம் பாதிக்கப் பட்டவர்கள். அதனால் உங்களுக்கு எங்களைப் பழிவாங்கும் ஆத்திரம் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், இந்த நாய் உங்களுக்கு என்ன தீங்கு செய்தது? இதை ஏன் என்னிடமிருந்து பிரிக்கிறீர்கள்? இது அன்புக்காகத் தவிக்கும் நன்றி மிக்க எளிய ஜீவன். இது என்னிடத்தில் உயிரையே வைத்திருக்கிறது. நானும் அப்படித்தான். நான் அருகே இல்லாவிட்டால் இது சாப்பிடாது. தயவு செய்து கருணைகாட்டி, என் தோஷ்பியை என்னோடு இருக்க அனுமதியுங்கள்'' என்று அதிகாரியிடம் கெஞ்சினார் அரசியார்.

கல் நெஞ்சக்காரர்கள் மனம் இரங்கவில்லை.

மூன்று நாட்கள் ஓடின. தனக்கு வைத்த உணவை அரசியார் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சிறை அதிகாரி வந்து நேரில் கேட்டுப் பார்த்தார்.

''மனித அன்புக்காக ஏங்கும் என் அருமை நாய் எப்படியிருக்கிறதோ? அது இல்லாமல் நான் உணவருந்த மாட்டேன். பட்டினி கிடந்து நான் செத்தாலும் சரி. என் நாயை என்னிடம் கொண்டு வந்து கொடுத்





தால்தான் நான் சாப்பிடுவேன்'' என்று அரசியார் பிடிவாதமாக மறுத்து விட்டார்.

அடுத்த நாள் மாலை. கண்கள் இருளடைந்து போன நிலையில் குற்றுயிராகக் கிடந்தார் அரசியார். ஏதோ முனகல் சத்தம் அவரை நிமிர வைத்தது.

சிறைக் கதவுக்கு மறுபுறம், தோஷ்பியைக் கைகளில் ஏந்தி சிறை அதிகாரி நின்றிருந்தார்.

''மகாராணி, என்னை மன்னித்து விடுங்கள். என்னைக் காணாவிட்டால் என் நாய் உணவருந்தாது என்று நீங்கள் கூறியதை மிகைப் படுத்திக் கூறுவதாக எண்ணிக் கொண்டேன். ஆனால், உண்மையை நேரில் கண்டேன். நீங்களாவது மனித இனம். துக்கம் காரணமாக சாப்பிட மறுத்தீர்கள் என்று எடுத்துக்கொள்ளலாம். ஆனால், இந்த ஐந்தறிவு ஜீவன், நான்கு நாட்களாக எந்த உணவையும் தொடக்கூட மறுத்து வருகிறதே! இதை அன்புப் பிணைப்பு என்று அல்லாமல் எப்படி எடுத்துக் கொள்வது? இந்த நிலை நீடித்தால், எங்கே இது உயிரை விட்டுவிடுமோ என்றுதான் நானே எடுத்து வந்தேன். இதோ உங்கள் அருமை நாய். ஏற்றுக் கொள்ளுங்கள். நான் தோற்று விட்டேன்'' என்று தோஷ்பியைக் கீழே விட்டார் சிறை அதிகாரி.

உடல் சோர்வடைந்த நிலையிலும் தோஷ்பி அரசியாரைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில், ஆனந்த முனகல் முனகி, வாலை ஆட்டியது! கம்பிகளுக்கு இடையே புகுந்து, அரசியாரிடம் வந்தது. அவரது நீட்டிய கரங்களில் புகுந்தது. மடியில் ஏறிப் படுத்துக் கொண்டு, கண்மூடி, அந்த மகிழ்ச்சியை முனகலாக வெளிப்படுத்தி வாலை ஆட்டியது!

தொடாமல் மூடிவைக்கப்பட்டிருந்த உணவுத் தட்டை அரசியார் தம் அருகே இழுத்தார். தானே அதை எடுத்து தோஷ்பிக்கு ஊட்டினார். தானும் உண்டார். ''தோஷ்பி, மரணம் ஒன்றினால்தான் நம்மைப் பிரிக்க முடியும்'' என்று அழுதார்.

புரட்சி மக்கள் மன்றம் நடத்திய விசாரணை முடிவில் மன்னருக்கும், அரசியாருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனையை நிறைவேற்ற அரசியாரை அழைத்துச் செல்ல வந்தார்கள் அதிகாரிகள்.

''உங்கள் கடைசி விருப்பம் ஏதாவது இருக்கிறதா?'' என்று கேட்டார் உயர் அதிகாரி.

''நான் இறந்தபிறகு என் அருமை நாய் தோஷ்பி அனாதையாகிவிடும். அதைக் கவனிக்கும் பொறுப்பை யாராவது ஒருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று வேண்டினார் அரசியார்.

''அது என் பொறுப்பு மகாராணி'' என்று வாக்களித்தார் சிறை அதிகாரி.

தண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு, கட்டுக் காவல்களை மீறி எப்படியோ வந்து விட்டது தோஷ்பி! தண்டனை நிறைவேற்றப்படுவதைப் பார்த்தது. அதற்குப் பிறகு அதற்கு ஒருவிதமான ஏக்கம் பிடித்தது.


கொடுத்த வாக்கை நிறைவேற்ற சிறை அதிகாரி தோஷ்பியைத் தன் வீட்டுக்கு எடுத்துச் சென்றார். அவரது மனைவி, குழந்தைகள் எல்லோரும் அதன் மீது அன்பைச் சொரிந்தனர். ஆனால், அதன் ஏக்கம் விலகவில்லை. கடும் பட்டினி கிடந்தது அது! குழந்தைகள் அதைக் கட்டாயப்படுத்தி, பலவந்தமாகப் பாலைப் புகட்டினர்.

அடுத்த நாள் காலை. தோஷ்பி மேசை மேல் ஏறியது. நகர்ந்து நகர்ந்து ஜன்னலுக்குச் சென்றது. குழந்தைகள் கூக்குரலிட்டு அழைத்தனர். தோஷ்பி திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. கண்களை மூடியபடி ஐந்தாவது மாடியிலிருந்து கீழே குதித்தது!

''அரசியாரே! நான் மறுபடி தோற்று விட்டேன்!'' என்று மண்டியிட்டு சிலுவை போட்டுக் கொண்டு விம்மினார் சிறை அதிகாரி.

அதிசய அன்டார்க்டிகா

ஆழி



பூமியின் தென் துருவத்தைச் சுற்றியுள்ள நிலப் பகுதிக்கு அன்டார்க்டிகா என்று பெயர். 99 சதவீதம் பனி மூடிய பிரதேசம். 14 மில்லியன் சதுர கி.மீ. பரப்பு. 2 கி.மீ. ஆழத்திற்கு பனிக்கட்டி தான்!

அன்டார்க்டிகா மிகப்பெரியதொரு கண்டம். ஆஸ்திரேலியாவைவிடப் பெரியது. இந்தியாவைப் போல் 4 மடங்கு பெரியது. பனியும் குளிரும் அதிகம். பனிச் சூறாவளி தொடர்ந்து வீசும். எங்கு பார்த்தாலும் பனிக்கட்டிகளும் பனிமலைகளும்தான். தரையையே பார்க்க முடியாது. கோடைக்காலத்திலும் நீர் உறைந்து பனிக்கட்டியாகவே இருக்கும். குளிர் காலத்தில் வெப்ப நிலை சென்டிகிரேட் அளவுப்படி பூஜ்யத்துக்குக் கீழே 56 டிகிரி.

உலகில் உள்ள பனிக்கட்டிகளில் 90 சதவீதம் அன்டார்க்டிகாவில்தான் இருக்கின்றன. இந்தப் பனிக்கட்டிகள் உருகினால், உலகில் உள்ள சமுத்திரங்களின் நீர்மட்டம் 77½ மீட்டர் உயர்ந்துவிடும்! இதனால் உலக நிலப்பரப்பின் வடிவமே மாறிவிடும்! அன்டார்க்டிகாவில் பல மலைகள் உள்ளன, இந்தப் பனிமூடிய சிகரங்களில் எரிமலைகள்கூட இருக்கின்றன. இவை சில சமயம் வெடித்து நெருப்பைக் கக்குவதும் உண்டு!






அன்டார்க்டிகாவில் 6 மாதம் தொடர்ந்த பகல்; 6 மாதங்களும் சூரியன் தெரிந்து கொண்டேயிருக்கும்! அடுத்த 6 மாதம் தொடர்ந்த இரவு; சூரியனே தெரியாது! உலகில் சூரிய வெளிச்சத்தில், நேரத்திற்கு நேரம், நிழலின் நீளம் வேறுபடும். ஆனால், அன்டார்க்டிகாவில், நிழலின் நீளம் ஒரே அளவில்தான் இருக்கும். இங்கே, வானம் பச்சை நிறமாகத் தெரியும்! பனிக்காற்று மணிக்கு 96 கி.மீ. வேகத்தில் வீசுவதால், பனித்துளிகள் மின்சக்தி பெற்று அதை வெளிவிடுவதால், வானம் பச்சையாகத் தெரியும்!

உலகில், ஈக்களே இல்லாத இடம் இதுதான்! இங்கே கிருமிகளும் கிடையாது. அதனால் உணவுப் பொருள்கள், ஆண்டுகள் கணக்கில் கெட்டுப் போவதில்லை!




அன்டார்க்டிகாவில் மனிதர்கள் வாழ முடியாது. சிறு பூச்சிகளும், பாசிகளும், காளான்களும் வாழ்கின்றன. ஆனால், இந்தக் கடுங்குளிரிலும் பெங்குவின் பறவை வாழ்கிறது!

அன்டார்க்டிகாவைச் சூழ்ந்துள்ள சமுத்திரங்களில் திமிங்கிலம், சீல் முதலிய விலங்குகள் வாழ்கின்றன!




இங்கே எல்லாமே வலப் பக்கமிருந்து இடப்பக்கமாக இயங்குகின்றன! எல்லா உயிரினங்களும் இடப்பக்கமாகவே திரும்பிச் செல்லுகின்றன. பனி உருகி, வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கமாக ஓடுகிறது!




இங்கேயுள்ள உயிரினங்களின் இரத்தத்தில் உள்ள ஒருவித ரசாயனப் பொருள்தான் இவ்வளவு குளிரிலும் இரத்தம் உறைந்து விடாமல் பாதுகாக்கிறது என்று கருதுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

அன்டார்க்டிகாவில் நிலக்கரி கிடைக்கிறது. ௨7 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, இங்கே மரங்களும் செடிகளும் வளர்ந்திருந்தன என்றும், அவை இப்போது ௨5 அடி கனத்தில் நிலக்கரியாகப் படிந்திருக்கின்றன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்!



இங்குள்ள உயிரினங்களின் மேல், பனிப்படலம் படிந்துவிட்டாலும், அவை, 70 ஆண்டுகள் கழித்துப் பனிப்படலம் நீங்கியதும் உயிர்த்து எழுந்துவிடும் சக்தி கொண்டவை!






1895-இல், கிறிஸ்ட்டென் ஜென் என்னும் நார்வே நாட்டுக்காரர் அன்டார்க்டிகாவில் முதன் முதல் அடியெடுத்து வைத்தார்!

1911-ஆம் ஆண்டில், ஆமுண்ட்சென் என்னும் நார்வே நாட்டுக்காரர் முதன் முதல் அன்டார்க்டிகாவில் தென் துருவத்தை அடைந்தார்.






1929-ஆம் ஆண்டு, ஃபைர்டு என்னும் அமெரிக்கர், அன்டார்க்டிகாவை விமானம் மூலம் பறந்து கடந்தார்!



1957 முதல், உலகின் பல பாகங்களிலிருந்தும் விஞ்ஞானிகள் அன்டார்க்டிகாவுக்கு வந்து ஆராய்ச்சி செய்கிறார்கள்.

அன்டார்க்டிகா யாருக்குச் சொந்தம்?



ஒட்டகச் சிவிங்கிக்கு குரல் உண்டா?

மை விழி கண்ணாத்தாளைக் கண் கலங்க நோக்கியது.

"இம் முறையும் என் குட்டி பிறந்ததுமே இறந்து விட்டது கண்ணாத்தா' மை விழி விசும்பியது.

'நீயும் நானும் இதுக்கு அழ ஆரம்பிச்சால், விடிவே கிடையாது. போன முறைக்கு முந்தின முறை உனக்குப் பிறந்த குட்டியாவது உயிரோடு இருக்கிறது. உன் குழந்தை என்று உன் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் பாவம், அந்த மூன்று கொம்பிக்கு ஆறு வருஷமா, குட்டிங்க பிறந்ததும் இறந்து விடுகின்றன. இப்படி நம்ப மந்தையிலே இருக்கிற பெண் ஒட்டகச்சிவிங்கிகள் எல்லாத்துக்கும் தீராத துக்கம் இருக்கு. இதுக்குப் போய் இப்படி அழலாமா?'' என்று பரிவோடு கேட்டது கண்ணாத்தா.

''ஒட்டகச் சிவிங்கிகளுக்கு என்ன குறைச்சல்? ஏழு மீட்டர் உயரம் இருக்குங்க. பகை விலங்குக வந்தால் எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி பழுப்பு நிறப் பட்டைகளும் வெள்ளைக் கோடுகளும் கலந்த உடம்பு. யாருமே சீண்டாத; போட்டிக்கு வராத முள் நிறைந்த கருவேல மர இலை உணவு. முள் கூடக் குத்த முடியாதபடி இரண்டு அங்குல கனத்துக்குத் தோல். சிங்கத்தைக் கூட நடுங்க வைக்கும் வலிமை மிக்க கால்கள். விரோதிகளாலும் கூட விரட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு மணிக்கு முப்பத்தைந்து கிலோ மீட்டர் வேக ஓட்டம் என்று மற்ற விலங்குகளெல்லாம் நம்மைப் பார்த்து ஓயாமல் பொறாமைப்படுகின்றன. ஆனால், நமக்குப் பிறக்கும் குட்டிகளில் பல உடனே இறந்து நாம் தாய்ப் பாசத்தால் படும் மன வேதனை மற்ற விலங்குகளுக்கு எப்படித் தெரியும்?'' என்று கண்ணீர் சிந்தியது மை விழி.

மரக் கிளைகள் அசையும் சத்தம் கேட்டது. எல்லா ஒட்டகச் சிவிங்கிகளும் திரும்பிப் பார்த்தன. கண்களில் நீர் வழிய அழுதபடி புள்ளியம்மா நின்று கொண்டிருந்தது.

''என்ன குட்டி புள்ளியம்மா? ஆணா பெண்ணா?'' என்று ஆவலோடு கேட்டது ஒரு சிவிங்கி.


''பெண் குட்டி அக்கா. குட்டி பிறந்ததும், விழுந்த அதிர்ச்சி தாங்காது இறந்துவிட்டது''—புள்ளியம்மா விசும்பியது.

''பிறந்ததும், விழுந்த அதிர்ச்சியைத் தாங்காது நம் இனம்தான் இப்படிக் குட்டியைப் பறிகொடுக்கிறது. நமக்குப் பெருமையளிக்கும் அதே உயரம்தான், நமக்குப் பிறக்கும் குட்டிகள் உடனே இறந்து விடவும் காரணமாக இருக்கிறது!''

''அப்படியாவது மற்ற விலங்குகளுக்கும் பிறப்பது போல், நான்கைந்து குட்டிகள் பிறக்கிறதா? ஒரே ஒரு குட்டி! அதுவும் கூட நம் உயரத்தின் அதிர்ச்சியைத் தாங்காது, பிறந்த உடனே உயிரை விட்டு விடுகிறது. ஒட்டகச் சிவிங்கியாக மட்டும் பிறந்து விடக் கூடாது.''

பெண் ஒட்டகச் சிவிங்கிகள் தங்கள் மனவேதனையைக் கொட்டித் தீர்த்துக் கொண்டன.

சூறாவளிக் காற்று மணலை அள்ளிக் கொண்டு வீசியது. சிவிங்கி



கள் மரங்களோடு நெருங்கி நின்று கொண்டன. குட்டை வாலி, காற்றின் வேகத்தைத் தாங்காது தும்மியது.

''என்ன குட்டைவாலி! என்ன ஆச்சு உனக்கு? இந்தக் காற்றைக் கூடவா உன்னால் தாங்க முடியவில்லை?'' என்று வியந்து கேட்டது மை விழி.

''இல்லை அக்கா. முந்தா நேற்று என் குட்டிக்கு இலக்கு வைத்து ஒரு சிங்கம் தொடர்ந்து வந்தது. ஒரு முட்டு முட்டினேன். சிங்கத்துக்குப் பொறி கலங்கிப் போச்சு. அது விழுந்து, குட்டிக்கரணம் போட்டு, தப்பினோம் பிழைத்தோம்னு ஓடியே போய் விட்டது. சிங்கத்தை முட்டிய முட்டலில் என் மூக்கில் உள் காயம் ஏற்பட்டு விட்டது போல் இருக்கு. மூக்கு சவ்வை மூடிக்க முடியலே! வலியான வலி! அதனால், காற்றோடு மண்ணும் உள்ளே போகுது. தும்மல் வருது'' என்று மறுபடி தும்மியது குட்டைவாலி.

மரத்தில் அமர்ந்தபடி பைனாகுலரை வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர் சுபாவும் சோமுவும்.

''எவ்வளவு அழகான கண்கள்! அப்படியே மை இட்டது மாதிரி இருக்கே!'' என்று வியந்து கொண்டாள் சுபா.

''பாரேன்! தலையைத் திருப்பாமலேயே கண்களால் முன்னும் பின்னும் பார்க்கிறதே!'' என்று வியந்து கொண்டான் சோமு.

அவர்களுக்கு வழிகாட்ட வந்திருந்த லூலூ சாக்லேட்டைப் பிரித்துக் கொடுத்தபடி, ''கண்கள் அழகானவை மட்டுமல்ல. கூர்மையான பார்வையும் உடையவை'' என்றான்.

''சிலவற்றிற்கு மூன்று கொம்பு கூட இருக்கே!''

''மூன்று என்ன...? நாலு கூட இருக்கும். ஆனால் அவை உண்மையில் கொம்புகள் அல்ல. கொம்பு வடிவில் அமைந்திருக்கும் எலும்புகள்'' என்று விளக்கினான் லூலூ.

''காற்றில் அசைந்த போது, கருவேல முள் இலேசாக உடம்பில் குத்தியதையே எங்களால் தாங்க முடியலையே! இந்தச் சிவிங்கிகள் எப்படி முள் நிறைந்த கருவேல மர இலையைக் கடித்துக் கடித்துத் தின்கின்றன? உதட்டில் முள் குத்தினால் வலிக்காதா?'' என்று கேட்டாள் சுபா.

''வலிக்காது. ஏன்னால் உதடுகள் கனமாக; உறுதியாக இருக்கும். எந்த

முள்ளாலும் ஊடுருவிக் குத்த முடியாது'' என்றான் லூலூ.

''அப்பாடி! எத்தனை பெரிய நாக்கு?'' என்று வியந்தான் சோமு.

''லூலூ. எல்லாச் சிவிங்கிகளும் நாம் இருக்குமிடத்தைத் திரும்பிப் பார்க்கின்றனவே!'' என்று அச்சம் கலந்த வியப்போடு கேட்டாள் சுபா.

லூலூ சிரித்தான்.

''இவைகளுக்கு மோப்ப சக்தி மிக அதிகம். நீங்க பிரிச்சுத் தின்ன சாக்லேட் வாசனைதான் அவைகளைக் கவர்ந்திழுத்திருக்கு.''

''இப்ப என்ன செய்யலாம்? எல்லாம் நாம் இருக்கிற பக்கமா வருதுங்களே! கூட்டமா வந்து தாக்குமா?''

''தங்களுக்கு ஆபத்து வந்தால் தான் தாக்கும். ஆனாலும் பயமாக இருந்தால் ஜீப்பில் போய் உட்கார்ந்து கொள்ளலாம்'' என்றான் லூலூ.

மூவரும் இறங்கி ஜீப்பில் உட்கார்ந்து கொண்டனர்.

ஒட்டகச் சிவிங்கிகள் கழுத்தை அசைத்து அசைத்து, நீட்டி நீட்டி கம்பீரமாக அழகு நடை போட்டு நெருங்கின. ஜீப்பையும் அதிலிருந்த மூவரையும் அவை துளியும் பொருட்படுத்தவில்லை. தங்கள் பாட்டுக்குக் கருவேல மரத்தின் உச்சிக் கொழுந்துகளை நாக்கை நீட்டி நீட்டிச் சுவைத்தபடி மெதுவாக நகர்ந்தன. சில அசை போட்டபடி நின்றன.

சிவிங்கிக் கூட்டங்களைத் தொடர்ந்து காட்டு ஆடுகளும் மான் கூட்டமும் வந்து சேர்ந்தன.


இலைக் கொழுந்தைச் சுவைத்துக் கொண்டிருந்த மை விழி திடீரென்று பரபரப்படைந்து கூட்டத்தினருக்கு ஏதோ சமிக்ஞை கொடுத்தது. அடுத்த வினாடி எல்லாம் ஓடத் தொடங்கின. குச்சம் வைத்த வேடிக்கையான வாலை, ஸ்பிரிங் மாதிரி வளைத்துச் சுருக்கிக் கொண்டு, நீண்ட கால்களைப் பூமியில் உதைத்து உதைத்து மேலெழுப்பிக் கொண்டு அவை ஓடியது திகைப்பூட்டும் அற்பு



தக காட்சியாக இருந்தது.

சிவிங்கிகள் ஓடத் தொடங்கிய துமே அவைகளோடு சேர்ந்து, மான் களும் ஆடுகளும் ஓடத் தொடங்கின!

''ஏதோ பகை விலங்கு வருவதைச் சிவிங்கிகள் கவனித்திருக்க வேண் டும். அதனாலேயே இவை இப்படி ஓடுகின்றன. இவை ஓடுவதைப் பார்த்து 'ஏதோ ஆபத்து' என்பதை உணர்ந்து மான்களும் ஆடுகளும் ஓடு கின்றன'' என்று விளக்கினான் லூலூ.



தூரத்தில் சிங்கத்தின் கர்ஜனை கேட்டது. லூலூ ஜீப்பை ஓட்டிக் கொண்டு சிவிங்கிகளைப் பின் தொடர்ந்தான். சிவிங்கிகள் போய்க் கொண்டே இருந்தன.

மாலை நேரம் நெருங்கிக் கொண் டிருந்தது.

''அந்தக் குட்டையில் கொஞ்சம் நீர் இருக்கிறது. தாகமா இருக்கிற வங்க குடியுங்க'' என்றது மை விழி.

''எனக்கு இப்போ அவசிய மில்லே. இப்பத்தான் பதினைந்து நாட்களுக்கு முன் தண்ணீர் குடித் தேன்'' என்றது கண்ணாத்தா.



குரல் சாதனை

● ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர் 'சீனிவாஸ்' என்ற இளைஞர். பல குரலில் பேசுவது இவரது பொழுதுபோக்கு. இவர், பல தலைவர்கள் போன்று பேசியும், பறவைகள், விலங்குகள், வாகனங்கள் போன்று ஒலி எழுப்பியும் சாதனைபுரிந்துள்ளார். இவ்வாறு பல குரலில் தொடர்ந்து 32 மணி நேரம் பேசி இவர் செய்த சாதனை விரைவில் கின்னஸில் இடம்பெறப் போகிறது. கில்லாடிதான் என்கிறீர்களா?

— குமணன், கல்லிடைக்குறிச்சி.

''நான் பத்து நாளாச்சு''

''ரெண்டு வாரம் முன்னால்தான் நான் குடிச்சேன்''

''சரி, அப்போ எனக்குத்தான் முன்னுரிமை போலிருக்கு. நான் குடிச்சு இருபது நாளாச்சு. கிடைக்கும் போது குடிச்சு வைக்கிறேன்'' என்று கூறிய மைவிழி குட்டையை நெருங்கியது.

''சிவிங்கிங்க தண்ணி குடிக்கிறது வேடிக்கையான காட்சி, பாருங்க'' என்று கூறினான் ஹூஹூ.

மைவிழி தனது முன் கால்கள் இரண்டையும் அகலப் பரப்பியது. கூடவே பின் கால்களும் பரந்தன. நீண்ட கழுத்தை மிகவும் கஷ்டப்பட்டுக் குனிய வைத்தது. நீரைக் குடித்தது!

ஜீப்பிலிருந்து இறங்கிய ஹூஹூ அந்த வேடிக்கைக் காட்சியைப் புகைப்படமெடுத்தான்.

ஜீப்புக்குள் சோமுவும் சுபாவும் இருந்தனர்.

''பாவம், விலங்குகளிலேயே உயரமான சிவிங்கிக்குக் குரல் இல்லையாமே! இதற்கு மட்டும் குரல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?''

''இதை 'டம்ப் அனிமல்' என்கிறார்களே! என்று வருத்தப்பட்டுக் கொண்டான் சோமு.

''அதோட இது நின்று கொண்டேதான் தூங்குமாம். நான் புத்தகத்தில் படித்திருக்கிறேன்'' என்றாள் சுபா.

''ஜீப்புல இருக்கிற பசங்க பேசியதைக் கேட்டியா? நாம்ப ஊமை விலங்காம். நின்று கொண்டேதான் தூங்குவோமாம்!'' என்று கண்ணாத்தாவிடம் கூறிச் சிரித்தது மைவிழி.


''நமக்கும் குரல் உண்டு. மற்ற விலங்குகளைப் போல் எல்லோருக்கும் நன்கு கேட்கும்படி நம்மால் பலமாகக் கத்த முடியா விட்டாலும், ஆட்டுக்குட்டி கத்தும் அளவுக்கு நம்மால் மெதுவாகக் கத்த முடியும் என்ற உண்மை இந்தப் படித்த பிள்ளைகளுக்குக் கூடத் தெரியவில்லையே!'' என்று வியந்து கொண்டது கண்ணாத்தா.

நாமும் கால்களைப் பரப்பி, கழுத்தைத் தரையில் வைத்து இவங்களைப் போலத்தான் தூங்குவோம்கறதை இவங்களுக்கு எப்படித் தெரிய வைக்கிறது?'' என்று கூறிச் சிரித்தது குட்டைவாலி.

அறிவியல் உண்மைகள் :

- ஒட்டகச் சிவிங்கியின் கால்கள் வலுவானவை. சிங்கத்தைக் கூட உதைத்து ஓட வைக்கும்.
- ஒரு முறைக்கு ஒரு குட்டிதான் போடும். சுமார் 3 மீட்டர் உயரத்திலிருந்து குட்டிகள் பிறந்து தரையில் விழுவதால் பல குட்டிகள் பிறந்த உடனேயே இறந்து விடும்.
- இதற்கு மூன்று கொம்புகள் கூட உண்டு. இவை எலும்புகளே.
- நீரில்லாது வாரக் கணக்கில் கூட காலந் தள்ளும்.
- இதற்குக் குரல் உண்டு. ஆட்டுக் குட்டி கத்துவது போல் மெதுவாகக் கத்தும். ஊமை அல்ல.
- நின்று கொண்டுதான் தூங்கும் என்பது உண்மையல்ல. படுத்து நன்கு கால்களைப் பரப்பித் தலையைச் சாய்த்துத் தூங்கும்.
- இதன் தோலின் கனம் 2 அங்குலம்!
- மோப்ப சக்தி மிக அதிகம். செவிப் புலன் கூர்மையானது.
- ஓடும் போது வால் சுருண்டு கொள்ளும்.
- மூக்குத் துளை புயல், மணல் காற்றடிக்கும் போது மூடிக் கொள்ளும் அமைப்புடையது.


சிரிப்...
எஸ். குருமூர்த்தி
வெளியே புறப்பட்டியே, ஏன் திரும்பி வந்துட்டே!....
சகுனமே சரியில்லை, புறப்படும் போது 'பூனை' குறுக்கே வந்துடுச்சு!....
ஏன் கவலையா இருக்கே?....
எல்லாம் என் பையனைப்பத்திதான்... கொஞ்ச நாளா அவன் பழக்க வழக்கங்களே சரியில்லை... 'குரங்கு' மாதிரி சேஷ்டை பண்றான்!
எல்லோரும் கும்பலா எங்கே போறீங்க?....
வண்டலூர் ஜூவுக்கு....
நீங்க துணிக்கடை வச்சிருக்கீங்களா!?....
எப்படிக் கண்டு புடிச்சீங்க?....
உங்க பையனை 'டூ பை டூ' எவ்வளவுடான்னு கேட்டா, 'மீட்டர் முப்பது ரூபா'ன்னு சொல்றான்!....
எங்கப்பா எலக்ட்ரிக் ட்ரெயின்-ல டிரைவராயிருக்காரு!....
ப்பூ! இதென்ன பிரமாதம்! எங்கப்பா 'டீஸல்' ட்ரெயின்ல டிரைவர், தெரியுமா?
செ



சூரியன் பட்ட கடன்

முன்காலத்தில் மிருகங்கள், பறவைகள், சூரியன், சந்திரன் எல்லாம் ஒன்றோடொன்று பேசிக் கொள்ளுமாம். ஒரு சமயம் சூரியன், பருந்திடம் தன் அவசரத்திற்குப் பணம் கடன் வாங்கியது. ஒரு மாதம் கழிந்தும் பணம் வராததால் சூரியனிடம் சென்று பணத்தைத் திருப்பித்தரும்படி கேட்டது பருந்து.

சூரியன், "நான் உச்சி வானத்திலிருக்கிறேன். பணமோ என் வீட்டிலிருக்கிறது. தயவு செய்து நான் வீட்டிலிருக்கும் போது வா" என்றது. 'சரி' என்று கூறித் திரும்பியது பருந்து.

மறுநாளும் கிளம்பத் தாமதம் ஆகிவிட்டது பருந்துக்கு. சூரியனின் வீட்டுக்குப் போன போது அவன் ஆகாயத்தில் இருந்தான். பல தடவை சென்றும் சூரியனைச் சந்திக்க முடியவில்லை. ஒருநாள் தன் நண்பன் சேவலைச் சந்தித்து விவரத்தை எடுத்துக் கூறியது. "நான் உதவுகிறேன். என்னோடு இரவு தங்கு. சூரியனைப் போல அதிகாலையில் நான் எழுந்து விடுவேன். உன்னை விடியலில் எழுப்பி விடுகிறேன். நீ விரைந்து போய் சூரியனை வீட்டில் பிடித்து விடலாம்" என்றது சேவல்.

அதன்படி அன்றிரவு சேவலின் வீட்டிலேயே தங்கியது பருந்து. அதிகாலையில் சேவல் 'கொக்கரக்கோ' எனக் கூவி பருந்தை எழுப்பி, சூரியனிடம் அனுப்பியது.

சூரியன் வீட்டை நோக்கிப் பருந்து பறந்தது. சூரியன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தான். "சூரியனாரே! எழுந்திரும்... பொழுது விடியப் போகிறது. என் கடனைக் கொடுத்து விட்டுக் கிளம்பும்" என்றது பருந்து.

"காலை வணக்கம்... என்று கூறியபடி கண் விழித்துக் கொண்டது சூரியன். "இவ்வளவு சீக்கிரம் வந்தால்தான் என்னை வீட்டில் காண முடியுமென்று உனக்குக் கூறியது யார்?" என்று கேட்டது சூரியன். பருந்து பதில் கூறவில்லை. "பதில் கூறவில்லையென்றால் பணம் கிடைக்காது" என்று பயமுறுத்தியது சூரியன்.

பருந்து உண்மையைக் கூறியது. சூரியனுக்குச் சேவல் மேல் கோபமான கோபம் வந்தது. "சேவல் இதற்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். அதன் குழந்தை எல்லாம் நீயே உணவாக்கிக் கொள்ளுவாய்!" என்று சாபமிட்டது சூரியன். அன்று முதல் கோழிக் குஞ்சைப் பருந்து பாய்ந்து தின்னுவது வழக்கமாகி விட்டது.

— ஆப்பிரிக்க நாடோடிக் கதை.
ஏ. ஹரிகிருஷ்ணன், மேலபாளையம்.



• வெள்ளிக்கிழமை அன்று யாரும் இறைச்சி சாப்பிடக்கூடாது. அப்படி யாராவது சாப்பிட்டால் கண்டிப்பாக மரண தண்டனை என்று பகிரங்கமாக அறிவித்தார் 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எட்டாம் ஹென்றி மன்னன்.

— ஆறுபாதி. புகழேந்தி.



செல்வத்தின் பயன்..

ஓர் ஊரில் மூன்று சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் இளைஞர்கள். மிகவும் ஏழைகள். உழைத்துச் சம்பாதித்தனர். இந்த உலகத்தில் தங்களுடைய சொத்து என்று சொல்லிக் கொள்வதற்கு அவர்களிடம் ஒரே ஓர் ஆப்பிள் மரம் மட்டும் இருந்தது. வேறு எதுவும் இல்லை. ஆகவே, அந்த ஆப்பிள் மரத்தை அவர்கள் கண்ணை இமை காப்பதைப் போலக் காத்தனர்.

உரிய காலத்தில் மரம் பூத்தது. காய்த்தது. பழங்களை ஏந்தி நின்றது. பழங்கள் சேதமடையாமல் இருப்பதற்காக, மூன்று சகோதரர்களில் ஒருவன் மரத்திற்குக் காவலாக இருப்பான். மற்ற இருவரும் வேலை தேடிப் போவார்கள்.

இப்படி அவர்கள் தங்களுக்குள்ளேயே மாறி மாறி ஓர் ஏற்பாடு செய்து கொண்டனர்.

அவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு உழைத்தாலும், கிடைத்த வருமானம் சாப்பாட்டிற்கே போதவில்லை. வறுமையால் வாடினர். ஒரு முறை வன தேவதை அந்த ஊர் வழியாகப் போக நேர்ந்தது. அவள் நல்லவள்; இரக்கம் மிகுந்தவள். ஆகவே, அந்தச் சகோதரர்களின் வறுமை நிலையைக் கண்டு அவள் மனம் உருகினாள்; அவர்களுக்கு உதவி செய்ய எண்ணினாள். பிச்சைக்காரியைப் போல வடிவம் எடுத்துக் கொண்டு அவர்களிடம் போனாள். மூத்த சகோதரன் இருந்தான். தேவதை பிச்சை கேட்டாள். உடனே அவன் தன் பங்கிற்குரிய ஆப்பிள் பழங்களைப் பறித்து அவளுக்குக் கொடுத்தான். அவள் நன்றியோடு பழங்களை வாங்கிக் கொண்டு போனாள்.

இரண்டாவது நாளும் அதே வேடத்துடன் வன தேவதை வந்தாள். பிச்சை கேட்டாள். அப்போது இரண்டாவது சகோதரன் காவலாக இருந்தான். அவனும் தன் பங்கிற்குரிய ஆப்பிள் பழங்களைப் பறித்து அவளுக்குக் கொடுத்தான்.

மூன்றாவது நாளும் அந்த நிகழ்ச்சி நடந்தது. தேவதை மாறுவேடத்துடன் வந்து பிச்சை கேட்டாள்.

இமாசலப் பிரதேசக் கதை
தமிழில்: வாமனன்

அப்போது இருந்த மூன்றாவது சகோதரனும் தன் பங்கிற்குரிய பழங்களைப் பறித்து, அவனுக்குச் சந்தோஷமாகக் கொடுத்தான்.

மரத்தில் பழம் ஒன்றும் மீதம் இருக்கவில்லை. ஆகவே, அடுத்த நாள் காலை மூன்று சகோதரர்களும் வயலில் வேலை செய்வதற்காகப் புறப்பட்டனர். அப்பொழுது அவர்கள் எதிரே அந்த அழகிய வனதேவதை ஒளிமயமாகத் தோன்றினாள்.

''இளைஞர்களே! உங்களைச் சோதிக்க விரும்பினேன். நான்தான் பிச்சைக்காரியாகி யாசித்தேன். நீங்கள் அன்பு காட்டினீர்கள். உங்களுக்கு உதவி செய்ய விழைகிறேன். நீங்கள் நிறையச் செல்வங்களைப் பெற்று, சந்தோஷமாக வாழ வரங்கள் தருகிறேன். வாருங்கள்!'' என்று சொல்லி, அவர்களை அழைத்தாள்.

வயல்களைக் கடந்து, ஊர் எல்லையைக் கடந்து, அவர்களை ஒரு காட்டுக்குள் அழைத்துப் போனாள் அந்த வனதேவதை. ஓர் ஆறு குறுக்கிட்டது.

வனதேவதை முதல் சகோதரனைப் பார்த்து, ''உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்!'' என்று கேட்டாள். வெகுதூரம் நடந்து வந்த களைப்பு. தொண்டை வறட்சி. ஆகையால், முதல் சகோதரன் கொஞ்சங்கூட யோசிக்கவில்லை. வனதேவதை கேட்ட உடனேயே அவன், ''இந்த ஆறு முழுவதும் இனிய சர்பத்தாக மாற வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டான்.

வனதேவதை தன் மந்திரக் கோலை அசைத்தாள். என்ன ஆச்சரியம்! சாதாரண நீராக இருந்த அந்த ஆறு இனிப்பான சர்பத் ஓடும் ஆறாக மாறியது! ''தம்பி! உன் ஆசையை நிறைவேற்றி விட்டேன். இதைக் கவனமாகப் பயன்படுத்திக் கொள்!'' என்று சொன்னாள்.

மற்ற இரண்டு சகோதரர்களையும் அழைத்துக் கொண்டு வனதேவதை தொடர்ந்து நடந்தாள். காட்டைக் கடந்து பச்சைப் பசேலென்று விரிந்து பரந்து காணப்பட்ட புல்வெளியை அடைந்தனர். புல்வெளியில் ஏராளமான புறாக்கள் அழகாகத் திரிந்து பறந்து கொண்டிருந்தன.

வனதேவதை இரண்டாவது சகோதரனைப் பார்த்து, ''உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்!'' என்றாள். அவன் சில நொடிகள் யோசித்தான். பிறகு, ''உழவே சிறந்த தொழில் என்று சொல்வார்கள். ஆகவே, நான் ஓர் உழவனாக இருக்க விரும்புகிறேன். இந்தத் திறந்த வெளியை வயல்களாகவும், இங்கு திரியும் புறாக்களை எல்லாம் ஆடுகளாகவும் மாற்றி எனக்கு அளியுங்கள்!'' என்று அவன் வேண்டினான். வனதேவதை தன் மந்திரக்கோலை அசைக்க, வெட்டவெளி வயலாக மாறியது. வெள்ளைப் புறாக்கள் வெள்ளாடுகளாக மாறி, அவனைச் சூழ்ந்து கொண்டன.

வனதேவதை மூன்றாவது சகோதரனுடன் நடந்தாள். ''உனக்கு என்ன வரம் வேண்டும்?'' என்று வனதேவதை அவனிடம் கேட்டாள். ''நான் ஓர் இளவரசியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்'' என்று அவன் சொன்னான்.

அருகிலிருந்த ஒரு நாட்டுக்கு வனதேவதை அவனை அழைத்துப் போனாள். அந்த நாட்டு அரசனுக்குத் திருமண வயதில் ஒரு பெண் இருந்தாள். தகுந்த மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுப்பதற்காக அவ்வரசன் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்திருந்தான்.

சபை கூடியது. இளவரசியை மணப்பதற்காக வந்திருந்த அரசகுமாரர்கள் நகைகளையும் காசுகளையும் விலையுயர்ந்த வைரக் கற்களையும், பொன் நகைகளையும் காணிக்கையாக வைத்தனர். வனதேவதை மூன்றாவது சகோதரனுக்காக ஒரு கூடை நிறைய எளிமையான காட்டுப் பழங்களைக் காணிக்கையாக வைத்தாள்.

அரசன் கோபம் அடைந்தான். ''நான் அருமையாக வளர்த்த பெண்ணை வசதிகளே இல்லாத அழுக்கு ஆடைகளை அணிந்துள்ள ஓர் ஏழைப் பிள்ளைக்குக் கல்யா



ணம் செய்து வைக்க மாட்டேன்! ஆகவே, நீங்கள் போகலாம்!'' என்றான்.

ஆனால் அரசகுமாரி, ''அப்பா! நம்மிடம் நிறையச் செல்வம் உள்ளது. மீண்டும் எதற்காகப் பேராசைப்பட வேண்டும்? வசதி மிகுந்த ஒரு சுயநலக்காரனுக்கு மாலையிடுவதைவிட, அன்பும், உறுதியும்கொண்ட ஒரு நல்லஏழைக்கு மாலையிடுவதையே நான் விரும்புகிறேன்!'' என்று தந்தையிடம் சொன்னாள். அரசன் குழம்பினான். அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

வனதேவதை அரசனைப் பார்த்து, ''அரசே! நான் ஒரு யோசனை சொல்கிறேன் கேளுங்கள். இளவரசியை மணக்க விரும்பும் ஒவ்வொருவரின் கையிலும் திராட்சைக் கொடியின் நாற்று ஒன்றைக் கொடுங்கள். அதை அவர்கள் மண்ணில் ஊன்றி நட்டு வைக்கட்டும். 'மூன்றே நாட்களுக்குள் யாருடைய நாற்று வளர்ந்து பழங்களைத் தந்து பயன் அளிக்கிறதோ, அவரே இளவரசியை மணக்கலாம்!' என்று அறிவியுங்கள்!'' என்று யோசனை கூறினாள். அரசன் சந்தோஷமாக ஒப்புக்கொண்டான்.

இளவரசியை மணக்க வந்த எல்லோருக்கும் ஒரு சின்ன திராட்சை நாற்று தரப்பட்டு, அவர்கள் அதை நட்டனர்.

முதல் இரண்டு நாட்களும் எந்த வித மாறுதலும் தெரியவில்லை. மூன்றாவது நாள் ஓர் ஆச்சரியம் காத்திருந்தது. அந்த ஏழையான மூன்றாவது சகோதரன் நட்ட நாற்று செழிப்பாகப் படர்ந்திருந்தது. அதில் கொத்துக் கொத்தாக அழகிய திராட்சைக் குலைகள் தொங்கின.

ஆகவே, அந்த ஏழைக்கே அரசன் ராஜகுமாரியைத் திருமணம் செய்வித்தான். காட்டில் ஒரு சிறு குடிசை அமைத்துக் கொண்டு அந்த இளைஞனும், அவன் மனைவியும் இனிது வாழ்ந்தனர்.

ஒரு வருஷம் ஓடியது. வனதேவதை அந்த மூன்று சகோதரர்களையும் மறுபடியும் சோதிக்க விரும்பினாள். முதிய பிச்சைக்காரியைப் போல மாறி, முதல் சகோதரனிடம் போனாள்.

''தம்பி! ரொம்பத் தாகமாக இருக்கிறது. கொஞ்சம் சர்பத் கொடேன்!'' என்று வேண்டினாள்.



"பிச்சைக்காரர்களுக்குக் கொடுக்க இங்கு ஒன்றும் இல்லை. போ, போ!" என்று கடுமையாகச் சொல்லி, அவன் அவளை விரட்டினான்.

பிச்சைக்காரி அங்கிருந்து நகர்ந்தாள். உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது. இனிய சர்பத்தாகப் பாய்ந்து கொண்டிருந்த அந்த ஆறு பழையபடி சாதாரணத் தண்ணீராக மாறியது! மூத்த சகோதரன் தான் செய்த தவற்றை உணர்ந்தான்.

"ஆறு நிறையச் சர்பத் இருந்தும் கூட, இன்னொருவரின் தாகத்திற்கு உதவி செய்ய மறுத்து விட்டேனே! எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டேன்!" என்று வாய்விட்டுச் சொல்லிக் கதறினான். தன்னை மன்னிக்குமாறு வனதேவதையிடம் வேண்டினான்.

"கிடைத்த பொருளை மற்றவர்களுக்குப் பயன்படும்படி சரியாகப் பயன்படுத்தத் தெரியாதவர்களிடம் சர்பத் ஆறு இருக்கக் கூடாது. பிறரிடம் அன்பு காட்டத் தெரிந்து கொள்!" என்று சொல்லி விட்டு வனதேவதை மறைந்தாள்.

இரண்டாவது சகோதரனிடம் கிழவியாக வேடமணிந்து போனாள். பசிக்கு உணவு கேட்டாள். அவனிடம் ஏராளமான உணவு தானியங்கள் இருந்தன. ஆனால்,மனம்தான் தாராளமாக இருக்கவில்லை. ஆகவே, "சாப்பாடும் இல்லை. ஒன்றும் இல்லை. போ, போ!" என்று சொல்லி அவன் அவளை விரட்டினான்.

உடனே அமைதியாகத் தரையில் மேய்ந்து கொண்டிருந்த வெள்ளாடுகள் எல்லாம் பழையபடி வெண் புறாக்களாக மாறின. படபட வெனச் சிறகுகளை அடித்துக் கொண்டு ஆகாயத்தில் பறந்தன. இரண்டாவது சகோதரனுக்கு நிலைமை புரிந்தது. தன் தவறுக்காக மனம் வருந்தினான். மன்னிப்புக் கேட்டான்.

"அவசியம் நேரும்போது பிறருக்கு உதவி செய்ய மனமில்லாதவனுக்குச் செல்வம் எதற்கு? முதலில், மனமுவந்து பிறருக்கு உதவி செய்யக் கற்றுக் கொள். பிறகு சந்திப்போம்!" என்று சொல்லிவிட்டு வனதேவதை மறைந்தாள்.

வனதேவதை முதியவள் வேடமணிந்து மூன்றாம் சகோதரனின் குடிசைக்குப் போனாள். அவனும் அவனுடைய மனைவியும், அப்போது தான் உணவருந்த உட்கார்ந்திருந்தனர். மிகமிக எளிய உணவே அங்கே இருந்தது. ஆனால், அவர்கள் அந்த மூதாட்டியை இன்முகத்துடன் வரவேற்றனர். இனிய வார்த்தைகளைப் பேசினர். தங்களுடன் அந்த எளிய உணவைப் பகிர்ந்து கொள்ளுமாறு வேண்டினர். மூதாட்டி மிகவும் சந்தோஷமடைந்தாள்.

உடனே அங்கே மூதாட்டி மறைந்தாள். வனதேவதை தோன்றினாள்! மந்திரக்கோலை அசைத்தாள். உடனே, ஆச்சரியங்கள் பல மின்னல் வேகத்தில் நிகழ்ந்தன.

ஏழை இளைஞனின் குடிசை கோபுரமாக உயர்ந்தது. வறுமைக் கோலங்கள் மறைந்தன. இளைஞனும், மனைவியும் வனதேவதையை வணங்கினர்.

"சந்தோஷமாக இருங்கள். செல்வத்தின் பயனே மற்றவர்களுக்கு வழங்கிக் களிப்பதுதான். வறியவர்களுக்கு வற்றாது வழங்குங்கள்!" என்று அவர்களை வாழ்த்தி விட்டு, வனதேவதை மறைந்தாள்.



"முள்ளை முள்ளாலதான் எடுக்கணும்னு அந்தக் காலத்திலே பெரியவங்க சொன்னது ஏன் தெரியுமா?"

"அந்தக் காலத்திலே ஊசி எல்லாம் கண்டுபிடிக்கலே சார்!"

— செங்கமலன், வேடசந்தூர்.



முட்டாள் இளவரசன்

முன்னொரு காலத்தில் ஒரு மன்னன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரே ஒரு புதல்வன் இருந்தான். அவனும் சரியான முட்டாளாய் இருந்தான். மன்னன் முதுமை அடைந்ததும் தன் புதல்வனை எண்ணிப் பெரிதும் கவலை அடைந்தான். தனது மரணத்திற்குப் பின்னர் முட்டாள் இளவரசனால் இந்த நாட்டை எப்படி ஆள முடியும் என்ற கவலை பிடித்துக் கொண்டது. ஒரு நாள் இளவரசனை அழைத்து மன்னன் இவ்வாறு கூறினான்.

''நீ கட்டாயம் வெளியூர் பயணம் செய்ய வேண்டும். 10 வயது குட்டியையும், 20 வயது ஓநாயையும், 30 வயது குள்ள நரியையும், 40 வயது சிறுத்தையையும், 50 வயது நாயையும், 60 வயது ஒட்டகத்தையும் கண்டுபிடிக்க வேண்டும். அவற்றையெல்லாம் நீ கொண்டு வராவிட்டால், எனது அரியணைக்கு உன்னை வாரிசாக நியமிக்க மாட்டேன்.''

முட்டாள் இளைஞன் அங்கும், இங்கும் பயணம் செய்தான். சந்தை இருந்த இடங்களில் எல்லாம் நின்று கூவினான்.

எல்லோரும் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள். அவன் தெருவில் நடந்து சென்று கொண்டிருந்த போது ஒரு வீட்டிலிருந்து ஒரு பெண் வெளியே வந்து அவனிடம் இவ்வாறு விளக்கம் கூறத் தொடங்கினாள்.

''உன் புத்தி கூர்மையை சோதிப்பதற்காகவே உன் தந்தை இந்த வேலையை உனக்கு அளித்திருக்கிறார். குட்டி என்றால் ஆட்டுக் குட்டியைப் போல் குதூகலமாக ஓடியாடி விளையாடும் பத்து வயது மனிதக் குழந்தையாகும். இருபது வயதில் ஓர் இளைஞன் எப்போதும் பசியும், வேட்கையும்கொண்ட ஓநாயைப்போல்இருக்கிறான். முப்பது வயதில் மனிதன் ஒரு குள்ள நரியைப் போல் தந்திரசாலியாக இருக்கிறான். 40 வயதில் அவன் ஒரு சிறுத்தையைப் போல முழு பலத்தோடு விளங்குகிறான். 50 வயதில் தூக்கமின்றி ஒரு நாயைப் போல் தனது செல்வங்களை விழிப்புடன் பாதுகாக்கிறான். 60 வயதில் கண் பார்வை போனதும்ஒரு ஒட்டகத்தைப் போல் வழிநடத்தி செல்லப்பட வேண்டியவனாகிறான்.''

இளவரசன் மகிழ்ச்சியோடு அரண்மனைக்குத் திரும்பிச் சென்றான். இளம் பெண் கூறியதை வார்த்தைக்கு வார்த்தை விடாமல் திருப்பிச் சொன்னான்.


''உனக்கு யாரோ உதவியிருக்கிறார்கள். அவர்கள் யார்?''

''நான் சந்தித்த ஓர் இளம்பெண்.''

''அவள் விவேகமுள்ளவள் எனத் தோன்றுகிறது. உனக்கு இப்படிப்பட்டவள் தான் மனைவியாக அமைய வேண்டும்.''

இளம் பெண்ணைக் கண்டுபிடித்து அழைத்து வந்தார்கள். இளவரசன் அவளை மணந்து கொண்டான்.

— சி. கே. அரங்கநாதன், தொப்பூர்.



முதல் தீப்பெட்டி!

இந்தியாவில் முதன் முதலாக 1910ம் ஆண்டில்தான் தீப்பெட்டி தயாரிக்கப்பட்டது. கல்கத்தாவில் சில ஜப்பானியர் சேர்ந்து இந்தத் தீப்பெட்டிகளைத் தயாரித்தனர். 1928 இல் சிவகாசியைச் சேர்ந்த அய்ய நாடார், சண்முக நாடார் இருவரும் கல்கத்தா சென்று தீப்பெட்டி செய்யும் முறையை அறிந்து கொண்டு சிவகாசியில் தீப்பெட்டித் தொழிற்சாலையைத் தொடங்கினர். இன்று இந்தியாவில் சிவகாசியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மட்டும் சுமார் 70 சதம் தீப்பெட்டிகள் தயாராகின்றன.


உலகம் முழுவதும் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளில் மூன்றில் ஒரு பங்கு இந்தியாவில் தயாராகிறது. இன்னொரு பெருமைக்குரிய விஷயம் உலகிலேயே இந்தியாவில் தான் தீப்பெட்டியின் விலை குறைவு.

— ஆ. புகாரி, தக்கோலம்.


பத்ராசல
ராமதாஸ்
கொல்லகொண்ட
பள்ளியில் வசித்த
லிங்கன்னா
ராமபக்தர்.
கதை: ஆனந்தி
படம்: விஜு
கணவனுக்கேற்ற மனைவி.
இருவரின் செல்லக்குழந்தை
கோபன்னா.
ராமநாமம் போல் பாயசமும் இனிக்கும்!
குடிப்பா...
குழந்தைக்கு இதெல்லாம் புரியுமா?
என் பிள்ளை இராமபக்தியில்
இப்போதிருந்தே திளைக்கணும்.
உற்சவங்களுக்கு லிங்கன்னா
மகனையும் கூட்டிச் செல்வார்.


உபன்யாசம் ஹரிகதைகளுக்கும் அழைத்துப் போவார்... குழந்தையின் ராமபக்தி வளர்ந்தது.
"ஸ்ரீராம, ஜெயராம, ஜெயஜெய ராமா"
நேற்றுக்கேட்ட பஜனையை அப்படியே நடத்திக் காட்டுகிறான்!
உங்க பிள்ளைதானே.
"ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே ஸஹஸ்ர நாம தத்துல்யம் ராம நாம வரானனே"
ராமநாமம் விஷ்ணுவின் ஆயிரம் நாமங்களின் சாரம்.
தெலுங்கு, சமஸ்கிருதத்திலும் தோபன்னா தேர்ச்சி பெற்றான்.



தந்தையின் மறைவுக்குப் பின்—
"தந்தை, தாய் உறவு எல்லாம் நீயே ராமா..!"
ராம பக்தர்களுக்குத் தினமும் உணவளித்து மகிழ்ந்தான்.
கோபன்னாவின் மாமன்மார் அக்கன்னா மாதன்னா, கோல்கொண்டா சுல்தானின் அமைச்சர்கள்.
கோபன்னாவுக்குப் பெண் பார்த்திருக்கேன்.
சந்தோஷம் அண்ணா. நாம்தானே கல்யாணம் செய்து வைக்கணும்.
.... உ ....
காஞ்சேர்ல ...... ஜனகுமாரத்தி கமலாம்பாளைக் கோபன்னாவுக்கு பாணிக்கிரஹணம் செய்து கொடுக்க ......
....


கோபண்ணாவுக்கு ஏற்ற மனைவி கமலாம்பாள்.
இருவரும் பக்தர்களை உபசரித்து மகிழ்ந்தனர்.
அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது.
அப்பா மாதிரியே இருக்கிறான்!
ராமனை மறக்காதவனாக இருக்க வேண்டும்.
ராம பக்தர்களை உபசரிப்பதிலேயே கோபண்ணாவின் சொத்து கரைந்தது.
குழந்தையைப் பார்த்தீர்களா? எங்கும் காணோமே?
தேடினார்கள்...
கமலாம்பாள் மூர்ச்சித்தாள்... சிலர் தாங்கினார்கள்...
ஐயோ, என் குழந்தை... ராமா...


ராமா! ராமா!
இது என்ன கொடுமை?
அல்லும் பகலும் உன்னை வழிபட்ட ஜோதியும் இங்கே காலன் வந்து விட்டானே ராமா...!
ராமா, என் குழந்தையை எழுப்பிக் கொடு...
அப்பா!
கண்ணே!
ராமா! உன் கருணையே கருணை!
கருட கமன ராரா நனுநீ கருண நேலு கோரா"


ராமபக்தி தீவிரமாகி... ராமதரிசனமே இலட்சியமானது.
ஒரு நாள் தூங்கும்போது...
நான் கபீர்தாஸ். ராமநாம தாரகமந்திரம் உபதேசிக்கிறேன்.
எனக்கு ராமதரிசனம் கிடைக்குமா சுவாமி?
ராமர் உன்னைத் தேடி வருவார்!
மறுநாள் ராமர் வருவதை எதிர்பார்த்திருந்தார் கோபன்னா.
என்பிரபு இன்றாவது வருவாரா?
பிரபு வரும்வரை அவர் புகழைப் பாடுவோமே. ராமா ராமா...
ராமா, ராமா...


எப்படி மாடு வந்தது?
மெத்தையைத் தள்ளி விட்டதே!
விரட்டு!
போடு பலமா!
ஓட்டுங்க!
என் பிரபு ஏமாற்றி விட்டாரே!
பிரபு ஏமாற்றவில்லை. நீதான் அவரை விரட்டி அடித்தாய்!
காளை மாடாக வந்தவரா என் பிரபு! ஐயோ!
வருந்தாதே! உன் மனம் பக்குவ மடையும்போது ராமதரிசனம் கிடைக்கும்.
அறியாமையால் பகவானை விரட்டி விட்டதற்காக நொந்தார் கோபன்னா...
என் பிரபு என்னை மன்னிப்பாரா கமலா?
கண்டிப்பாக சுவாமி. நீங்கள் அவரது பரம பக்த -ரல்லவா?


ராம பக்தர்களை உபசரிப்பதில் செல்வம் கரைந்து விட்டது.
பக்தர் தொண்டே பரமனின் தொண்டு. அதுவே அழியாச் செல்வம்.
சுவாமி, இன்று உப்புக்குக் கூட வழியில்லை...
இன்று பார்த்து என் பிரபு வந்து விட்டால்?
மாமன்மாரிடம் போனால் சுல்தானிடம் ஏதாவது வேலை வாங்கித் தருவாங்களே...?
உடனே கிளம்புகிறேன்.
அக்கன்னாவும் மாதன்னாவும் அன்போடு வரவேற்றனர்.
வா கோபன்னா! இளைத்து விட்டாயே?
கமலா, குழந்தை வரலையா?
கோபன்னாவின் நிலையை அறிந்ததும்...
வேலை கிடைத்தால் ஒழுங்கா செய்வாயா?
கண்டிப்பா மாமா.
நாளைக்கே சபைக்குப் போகலாம்.



கோல்கொண்டா நவாப் அப்துல்லா தானிஷா மத வேற்றுமை இல்லாதவர்.
சலாம், நவாப் அவர்களே...
வாங்க அக்கண்ணா. பத்ராசலம் தாசில்தார் பதவிக்குச் சரியான ஆள் கிடைத்தாரா?
கிடைத்திருக்கிறார். இந்த இளைஞர் தான்.
நம்பிக்கையானவனா? கண்டிப்பா இருந்து கிஸ்தி வசூல் பண்ணுவானா?
என் தங்கை மகன்தான். பெயர் கோபன்னா.
அப்புறம் என்ன? உடனே அனுப்புங்க. கிஸ்தி வசூல்ல யாருக்கும் சலுகை காட்டக் கூடாது.
கண்டிப்பாக இருப்பேன் நவாப் அவர்களே!
இப்பவே கிளம்புங்க.


கோபன்னா பத்ராசலம் கிளம்பினார்..
வழியில்...
அது என்ன கோபுரம் தூரத்தில்?
புராதன ராமர் கோயில்!
முதல்ல அங்கே போகலாம்!
என் பிரபு! ராமா!
அந்த ராம மயம்!
அருவியாகப் பொங்கின பாடல்கள்!



யார் கட்டியது இது?
இடிஞ்சு கிடக்கே?
தம்மக்கா என்ற ஒரு பக்தை
ஒரு நாள்...
தம்மக்காவின் கனவில்...
தம்மக்கா! பத்ராசல
மலையில் நாளை
தரிசனத்திற்கு வா...
மறுநாள் பணியாளர்களோடு
மலையேறி வந்தாள் தம்மக்கா.
ராம ஜெபம் செய்யுங்கள்.
சிரமம் தெரியாது.
ராம ராம ராமா!
அம்மா அங்கே
பாருங்க!
தம்மக்காவும் அவரது மகளும்
ராமர் விக்ரகங்களைக்
கண்டனர்.
இங்கேயே ஓர் ஆலயம்
கட்டிவிடலாம். ராமர்
மகிழ்வார்.


இவங்க பத்ராசல மலையில் ராமருக்குக் கோவில் கட்ட ஆசைப்படறாங்க. முடிந்த உதவி செய்யுங்க. ஊருக்கே பெருமை.
அத்தனை பெருமையா இருந்த கோவில் இப்ப சிதிலமாயிருக்கு.
ராமா! இடிஞ்ச வீட்டில் இருக்கியே!
கோபன்னா தாசில்தாராகி நன்கு பணி செய்தார். வரிவசூலித்து நவாபுக்கு அனுப்பினார்.
அடிக்கடி கோவிலுக்கு வந்த கோபன்னா அதைப் புதுப்பிக்க எண்ணினார்.
பத்ராசலம் பூலோக வைகுண்டமாக வேண்டும்.
ராம பக்தி காரணமாக ஜனங்கள், பத்ராசல ராமதாசர் என்று கோபன்னாவை அழைத்து மகிழ்ந்தனர்.


கோவில் கட்ட மேலும் பணம் தேவைப்பட, ராமதாசர் வரிவசூல் பணம் ஆறு லட்சத்தையும் செலவழித்தார்.
கிரீடம் முடிந்து விட்டது.
சீதாபிராட்டி நகைகள் கூடத் தயார்.
நவாபுக்குச் செய்தி போயிருக்கிறது தெரியுமா?
கும்பாபிஷேகம் நடைபெற்றது.
கும்பாபிஷேகமெல்லாம் சரிதான். ராமதாசரை நவாப் அழைத்திருக்கிறாரே, என்ன பதில் சொல்லப்போகிறார்?
கிஸ்தி வசூலை ஏன் கஜானாவில் செலுத்தலே?
ராமருக்குக் கோவில் கட்ட எடுத்து விட்டேன்; மன்னியுங்கள்!
இந்தத் துரோகியைச் சிறை-யிலடைத்துத் தினமும் கசையடி கொடுங்கள்.


ஆசையால் செய்துவிட்டேன். பக்தர்களிடம் வசூலித்துக் கட்டி விடுகிறேன்.
என் அனுமதி பெறாது செய்ததை மன்னிக்க முடியாது. ஆறுலட்சத்தையும் கட்டும்வரை சிறைவாசம்தான்!
கோல்கொண்டா சிறையில் ராமதாசர் துன்பப்பட்டார்.
ஹேராமா! என் பிரபு!
பன்னிரண்டு ஆண்டுகள் சிறையில் வாடினார் ராமதாசர்.
ராமா! இரக்கம் காட்ட மனம் இன்னும் வரவில்லையா? தாயே சீதா? நீயாவது இரங்கலாகாதா?
சுவாமி! பக்தன் கோபன்னாவின் குரல் உங்களுக்குக் கேட்க -வில்லை? இப்படிச் சோதிப்பது நியாயமா?


கோபன்னா சிறுவனாயிருந்த போது— பன்னிரண்டு வருஷம் கிளியைக் கூண்டிலடைத்து வைத்த —தற்கான தண்டனைதான் இது!
கருணை காட்டும் நேரம் வந்து விட்டது. கிளம்பு லக்ஷ்மணா.
காவலாளிகள் வேஷத்தில் போகலாம் அண்ணா.
நவாப் முகம்மது தானிஷா... ...கொஞ்சம் விழித்துப் பாருங்கள்.
யார் நீங்கள்? இங்கே எப்படி வந்தீர்கள்?
நான் ராம்சிங். இது என் தம்பி லக்ஷ்மண் சிங். பத்ராசலத்திலிருந்து வருகிறோம். கோபன்னா தரவேண்டிய ஆறு லக்ஷம் இதோ.
உங்களைப் பார்க்கும்போதே மனசில் ஏதோ பரவசம்...!


கோபன்னாவை விடுவிக்க உடனே உத்தரவிடுங்கள். ஆறு லக்ஷத்திற்கு ரசீது கொடுங்கள்.
இதோ....
இருவரும் மறைந்து விட்டார்களே! கோபன்னா, உம் கடனைக் கட்ட ராம லக்ஷ்மணர்களே வந்தார்களோ! என்னை மன்னித்து விடும்!
என்னது! என் பிரபு உங்களுக்குக் காட்சி தந்தாரா! கடனைத் தீர்த்தாரா!
ஆம் கோபன்னா. உம்மால் எனக்குத் தரிசனம் கிடைத்தது!
ராமா! நவாபுக்குக் கிடைத்த பாக்கியம் எனக்கு இல்லையா?
பல ஆண்டுகள் பத்ராசலத்தில் ராமனைப் பாடி மனம் உருகி, பக்தி செய்தார் ராமதாசர்.
..ரா ரா... ராமையா...
இறுதியில் ராமர் தரிசனம் தந்து ஆட்கொண்டார். பக்திச் சுவை ததும்ப அவர் பாடிய பாடல்கள் பத்ராசல ராமதாசர் பாடல்கள் என்று இன்றும் மக்களால் பாடி மகிழப் படுகின்றன.

படம் இங்கே, பாடல் எங்கே?
போட்டியில் முதல் பரிசாக ரூ. 20/- பரிசு பெறுவது:

தாத்தா தவழ்கிறார்!



தம்பிப் பாப்பா ஊர்வலம்
 தாத்தா மேலே போகிறான்;
அம்பிப் பயலும் பீப்பீயை
 அழகாய் ஊதி அனுப்புறான்.

அண்ணன் தட்டும் டப்பாவும்
 அக்கா தட்டும் தட்டையும்
சின்னப் பெண்ணின் மேளமும்
 சீராய் இசைக்கச் செல்கிறார்.

வாயைப் பிளந்து ஜிம்மியார்
 வசமாய்க் குதித்து மகிழ்கிறார்;
காலைத் தூக்கிப் பூனையார்
 கவன மாக ஆடுறார்.

அம்மா வாயைப் பொத்தவும்
 அப்பா சிரிப்பை அடக்கவும்
சிப்பாய்த் தாத்தா யானைபோல்
 சிரித்துக் கொண்டே நகர்கிறார்.

தொப்பி போட்ட தாத்தாவும்
 தத்தித் தத்தித் தவழ்கிறார்.
சிப்பாய்த் தாத்தா சிரிக்கவும்
 சிறிதாய்ப் பாட்டி நகைக்கிறாள்.

— தெ. தமிழ்க்குமரன், பணகுடி.



தாத்தா யானை!

அன்பு கொஞ்சும் குடும்பமாம்
 ஆல மரம்போல் பெரியதாம்.
அருமைத் தாத்தா யானையாம்,
 அன்புப் பேரன் பாகனாம்.

அண்ணன் அடிக்க மத்தளம்,
தாத்தா போகும் ஊர்வலம்,
அக்கா போடும் தாளம்தான்,
அருமையாக இருக்குதாம்.

தங்கத் தம்பி குழலூத,
தங்கை சேர்ந்து தவிலடிக்க;
வெள்ளைப் பூனையும் ஆடுதாம்;
ஜிம்மி நாயும் கூடவாம்.

தாத்தா — பேரன் ஊர்வலம்;
அண்ணன் — அக்கா தாளமும்;
தம்பி — தங்கை ஊதவும்;
பார்க்கச் சிரிப்பாய் இருக்குதாம்.

அமர்ந்து கொண்டு அன்னையும்,
அன்னை யோடு தந்தையும்,
தந்தை யோடு பாட்டியும்,
சேர்ந்து ரசிக்கும் நாட்டியம்;


— இல. முரளீதரன், கோட்டூர்
மலையாண்டிப்பட்டணம்.



எத்தனை பல்லிகள் எண்ணுங்கள்!



— விடை: 36 பல்லிகள்.



இதோ ஓர் வீரா!

டாக்டர் பூவண்ணன்

“நீங்கள் எழுதும் சிறுவர் கதைகளைச் சிறுவர்கள் இனிப்பை விரும்புவதைப் போல விரும்பிப் படிக்கிறார்கள். உங்கள் கதைகள் சிறுவர்களுக்கு ஒழுக்கத்தையும், ஊக்கத்தையும் தந்து அவர்களைப் பண்பாளர்களாக உயர்த்துகின்றன. அதனால் உங்களுக்கு எங்கள் பள்ளியில் ஒரு பாராட்டு விழா நடத்தவிருக்கிறோம்...''

கடலூரிலிருந்து ஒரு தலைமையாசிரியர் எழுதிய கடிதத்தைப் படித்ததும் மனம் மகிழ்ந்தது; பெருமையடைந்தது. பாராட்டு விழாவில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்து, உடனே ஒரு பதில் எழுதினேன். அதை நானே அஞ்சலகத்தில் சேர்த்துவிட நினைத்துப் புறப்பட்டேன்.

அது மாலை நேரம்.

சுற்றுப்புறங்களிலிருந்த பள்ளிகளிலிருந்து மாணவர்கள் சீருடைகளுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த காட்சியை ரசித்தவாறு நடந்தேன். தெரு முடிந்து சாலையை அடைந்து வலப்புறம் திரும்பினால் அஞ்சலகம். திரும்பினேன்.

அஞ்சலகத்துக்கு அருகே ஒரு சிறு கூட்டம். அங்கே என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ளும் ஆவல் எனக்கு மட்டும் இருக்காதா? கூட்டத்தில் எட்டிப் பார்த்தேன்.

கூட்டத்தின் நடுவில் சுமார் பத்து வயதுள்ள சிறுமி நின்று தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள். அவள் காலுக்கு அருகே ஒரு எவர்சில்வர் தூக்கு. அதற்குச் சிறிது தூரத்தில் தூக்கின் மூடி. சாலையில் அவள் நின்ற இடத்துக்கருகே, உலகப் படத்தில் ஆஸ்திரேலியாவைக் காட்டுவதைப் போல எண்ணெய் படர்ந்து மினுமினுத்தது. வாசனையிலிருந்து அது தேங்காய் எண்ணெய் என்பது தெரிந்தது.

சிறுமி கால் கிலோ தேங்காய் எண்ணெய் வாங்கிக் கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்த போது, ஒரு சைக்கிள்காரன் அவள் மீது மோதிவிட்டு, நிற்காமல் போய்விட்டான். நிலை தடுமாறி அவள் விழ, கையிலிருந்த தூக்குக் கீழே விழ, மூடி திறந்து வெளிவந்த எண்ணெய் முழுதும் சாலையில் கொட்டிப் பரவிவிட்டது! அருகே இருந்தவர்கள் சிறுமியைத் தூக்கி நிறுத்தினார்கள். ஆனால் கொட்டிய எண்ணெயில் ஒரு துளியையும் எடுக்க முடியவில்லை.

கூட்டத்தில் நின்று வேடிக்கை பார்த்த ஒருவன் நடந்ததை விளக்கினான்.

''எண்ணெயில்லாம போனா அத்தை அடிப்பாரே...'' என்று கூறிக் கொண்டே சிறுமி அழுதாள்.

''அடிப்பாளாவது! கொன்னு போடுவா! எனக்குத் தெரியும். நான் இந்தப் பொண்ணு வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலேதான் இருக்கேன். கிராமத்திலிருந்து இந்தப் பொண்ணை அழைச்சுக்கிட்டு வந்து அத்தைக்காரி கொத்தடிமையா நடத்தறா. பத்துக் காசு கறிவேப்பிலை கடைக்காரன் குறைவாத் தந்தால், 'உனக்கு வாயில்லையா? திங்கற

னுக்கு மட்டும் பெரிசாத் நிறக்குதே? இன்னும் கொஞ்சம் கறிவேப்பிலை கொடுங்க ன்னு கேட்டு வாங்கறது தானே ன்னு சொல்லித் தலையிலே ரெண்டு கொட்டும் முதுகிலே நாலு அறையும் தரும் ராட்சசி, இவ அத்தை. இப்போ கால் கிலோ எண்ணெயைக் கொட்டிட்டாச் சும்மா இருப்பாளா? தோளாக் கொட்டிடுவா.'' என்று கூறிய ஒருவர், ''அம்மணி, கால் கிலோ எண்ணெய்தானே?'' என்று விசாரித்தார்.

சிறுமி, ''ஆமாங்க. கால் கிலோ தேங்காய் எண்ணெய். பன்னிரண்டு ரூபாய்ங்க'' என்று கூறிவிட்டு மீண்டும் கண்ணைக் கசக்கினாள்.

''மோதிட்டுப் போன சைக்கிள் காரனைத் தப்பிச் செல்ல விட்டிருக்கக் கூடாது.''

''இந்தப் புள்ளையும் கொஞ்சம் வழியைப் பார்த்து ஓரமா வந்திருக்கலாம்.''

''இவ மேலே குத்தமில்லே. சைக்கிள்காரன் மேலேதான் குத்தம். இவளை அடிக்காதீங்கன்னு இவ வீட்டுக்குப் போய் நாம நாலு பேர் சொல்லலாமா?''

ஆளுக்கு ஆள் கருத்துக்களை உதிர்த்துக் கொண்டிருக்க, மற்றவர்கள் ஏதோ பட்டிமன்றத்தை ரசிப்பதை போலப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, கூட்டத்திலிருந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பள்ளி மாணவன், பன்னிரண்டு பதின்மூன்று வயதுள்ளவன், ரெண்டடி முன்னே வந்து அழுகிற சிறுமிக்கு அருகே நின்றான். அவன் முதுகில் அவனது புத்தகப் பை கொலு வீற்றிருந்தது.

வந்த பையன் கொஞ்சம் உரத்த குரலில் ''ஐயா பெரியவங்களே! வேடிக்கை பார்த்து விமர்சனம் செஞ்சா இந்தத் தங்கையோட வேதனை போயிடுமா?'' என்று கேட்டான்.

உடனே கூட்டத்தில் நிசப்தம் ஏற்பட்டது. அழுது கொண்டிருந்த சிறுமி கூடத் தன் அழுகையை நிறுத்தி அந்தத் திடீர் அண்ணனைப் பார்த்தாள்.

''தம்பி, இப்ப நாங்க என்ன செய்யணும்னு சொல்றே?''

ஒருவர் கேட்டார்.

''இந்தத் தங்கையின் அத்தை பொல்லாதவங்கன்னு சொல்றீங்க. கால் கிலோ தேங்காய் எண்ணெயோட போகலைன்னா இவளுக்கு அடியும் உதையும் நிச்சயம் கிடைக்கும். அதனாலே இவளுக்குக் கால் கிலோ தேங்காய் எண்ணெய் கிடைக்க வழி செய்வோம்.''

''ரோடிலே கொட்டின எண்ணெயை வழிச்சுக் கூட எடுக்க முடியாது கண்ணா!'' — ஒருவர் கிண்டலாகக் கூறினார்.

''முடியாது! ஆனால் புதிதாக இன்னொரு கால் கிலோ தேங்காய் எண்ணெய் வாங்கிக் கொடுக்க முடியும்'' என்று சொன்ன மாணவன் தன் கால் சட்டையில் கைவிட்டு இரண்டு ரூபாய்த் தாளை வெளியே எடுத்தான்.

''இதோ எங்கிட்டே இரண்டு ரூபா இருக்கு. இதை நான் தர்றேன். இங்கே கூடியிருக்கிற நீங்க ஒவ்வொருத்தரும் உங்களாலே முடிஞ்ச காசை, ஒரு ரூபாய், ஐம்பது காசு இல்லே பத்துக் காசுன்னு கொடுத்தீங்கன்னா, ஒரு நிமிடத்திலே பன்னிரண்டு ரூபாய் சேர்ந்திடும். இந்தத் தங்கையோட கவலை பறந்திடும். கொடுங்க. இருக்கிறதை முடிஞ்சதைக் கொடுங்க.''

பெரிய வீட்டுப் பையனைப் போலத் தெரிந்த அவன், பிச்சைக்காரனைப் போலக் கூட்டத்தார் முன்னே கையேந்தினான்.

என்ன ஆச்சரியம்!

சிறுவனின் நீட்டிய கைகளில் மளமளவென்று காசுகள் விழுந்தன! ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய், பத்துக் காசு, ஐந்து காசு என்று பல வகை நாணயங்கள் அவன் கைகளில் 'கலகல' ஓசையுடன் குவிந்தன.

நான் திகைத்துப் போனேன்!

ஒரு சின்னப் பையன் சமூக சேவையை எவ்வளவு எளிதாகக் கூட்டுறவு





முறையில் செய்கிறான்! இதில் நாமும் பங்கு கொள்ள வேண்டாமா?

என் பர்சைத் திறந்து இரண்டு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினேன்.

அவன், "இருக்கட்டுங்க. இப்பவே பன்னிரண்டு ரூபாய் சேர்ந்திருக்கும்னு தோணுது" என்றபடி, காசுகளை எண்ணிப் பார்த்தான்.

"மொத்தம் பதினோரு ரூபாய் ஐம்பது காசு இருக்கு. இன்னும் ஐம்பது காசு கொடுத்தால் போதும். ரெண்டு ரூபாய் வேணாங்க."

பையன் என்னைப் பார்த்துச் சொன்னான். நான் மீண்டும் பர்சை எடுப்பதற்குள், என் பின்னே இருந்த ஒருவர் என்னைத் தள்ளிக் கொண்டு அவசர அவசரமாக முன்னே வந்து அந்தப் பையனின் கையில் அரை ரூபாய் நாணயத்தைப் போட்டார்.

பையன், "பன்னிரண்டு ரூபாய் சரியாய்ப் போச்சு" என்று கூறி விட்டான்.

ஓர் அருமையான அறப்பணியில் பங்கு கொள்ளும் வாய்ப்பை நான் இழந்தேன்.

அவன் அந்தத் தொகையை அப்படியே அந்தப் பெண்ணிடம் கொடுத்தான்.

"பன்னிரண்டுரூபாய்இருக்கு.கால் கிலோ தேங்காய் எண்ணெய் வாங்கிக் கொண்டு ஜாக்கிரதையாய் வீட்டுக்குப் போ தங்கச்சி."

பணத்தைப் பெற்ற சிறுமியின் முகம் அழகு நிலா உதயத்தைப் போல; அல்லி மலர்ந்ததைப் போல ஒளிர்ந்தது.

அந்த மாணவனே குனிந்து சாலையில் கிடந்த தூக்கையும் மூடியையும் எடுத்து அவளிடம் கொடுத்து விட்டு நடந்தான். அவள் எண்ணெய்க் கடையை நோக்கிச் சென்றாள்.

சிறிது நேரத்தில் கூட்டம் கலைந்தது.

நான் மட்டும் அங்கே தனியே நின்று கொண்டிருந்தேன்.

"உங்கள் கதைகள் சிறுவர்களுக்கு ஒழுக்கத்தையும் ஊக்கத்தையும் தந்து அவர்களைப் பண்பாளர்களாக உயர்த்துகின்றன" என்னும் தலைமை ஆசிரியரின் கடித வரிகள் காதில் ஒலித்தன.

பாராட்டு விழாவுக்குரிய குழந்தை எழுத்தாளரான நானும், வேடிக்கை பார்த்தேனே தவிர, சிறுமியின் வேதனையைத் துடைக்க வழிகாட்டவில்லையே!

என் கதைகளைப் படிக்காமலேயே பண்பாளர்களாக விளங்கும் சிறுவர்கள் மிகப் பலர் இருக்கிறார்கள். இதோ பன்னிரண்டு ரூபாய் வசூலித்துக் கொடுத்த மாணவன் அவர்களில் ஒருவன்.

அவன் யார்? அவன் பெயர் என்ன?

எனக்குத் தெரியாது!

ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். அவன்தான் என் அடுத்த கதையின் ஹீரோ!

படம் இங்கே பாடல் எங்கே? போட்டியில் 2 வது பரிசாக ரூ. 10/- பரிசு பெறுவது

புதுமை விழா!



எங்கள் குடும்பத் திருவிழா
இன்ப மான பெருவிழா
புத்தாண்டுப் புதுவிழா
புதுமையான பெருவிழா.

தாத்தா யானை ஆகவே,
தம்பி சவாரி போகவே
அண்ணன் மேளம் கொட்டவே
அக்கா தாளம் போடுறாள்.

தம்பி பீப்பீ ஊதவே,
தங்கை நடனம் ஆடவே,
தோதாய்ப் பூனை கூடவே
நாயும் சேர்ந்து ஆடுது.

சிறுவரின் கும்மாளக் கொண்டாட்டம்
பெரியோரின் மகிழ்ச்சிக் கொண்டாட்டம்
எல்லோரும் சிரித்து மகிழ்ந்திருக்கும்
இன்பக் காட்சி ரசியுங்கள்!

— எம். அபிராமி, இராஜபாளையம்.

சவாரியாம் சவாரி!

பட்டாள யானை முதுகிலே
பட்டுப் பையன் சிட்டுவே
சிட்டாய் மாறி ஏறியே
சிரிக் கின்றான் களிப்பிலே

சுற்றி நிற்கும் பட்டாளம்
சுழன்று சுழன்று ஆடிடும்.
குதித்துக் குதித்து ஆடியே,
கும்மா ளமும் போட்டிடும்.

தந்தம் இல்லா யானைமேல்
தங்கப் பாப்பா சிரிக்கவே
ஜிம்மி பூனை இருவரும்
சிங்கா ரமாய் ஆடின.

வாத்தி யங்கள் முழங்கவே
வாழ்த் தொலிகள் எழும்பவே
அம்மா அப்பா மகிழவே
அழகாய் ஊர்ந்து சென்றதே.

பாட்டி கூடச் சிரிக்கவே
பாப்பா வும்தான் குதித்ததே
பட்டாளத் தாத்தா முதுகிலே
குட்டிப் பேரன் சவாரியே!

— வி. நர்மதா, சென்னை — 28.



யானையாரைப் பாரு!





பட்டாளத்து யானை — அதன்
பக்கத்திலே பூனை
யானைமேல பாரு — சின்ன
குட்டிப் பாப்பா பாரு.
அண்ணன் தாளம் போட — அங்கே
அக்கா தட்டை தட்ட
தம்பி பீப்பீ ஊத — சின்னத்
தங்கை மேளம் கொட்ட
ஜிம்மி வந்து ஆட — பாட்டி
சிரித்து சபாஷ் போட
அப்பா பார்த்துச் சிரிக்க — அம்மா
அளவாய்ச் சிரித்து ரசிக்க,
இப்போ இந்தக் காட்சி — நல்ல
இனிய குடும்ப மாட்சி.

— எஸ். சிவகந்தரம், சென்னை — 1.



பெயரை மாற்றிக்கறேன்!

பழனிவேல் அந்த ஊர்ப் பணக்காரர் ராஜமாணிக்கத்தின் ஒரே மகன். பணம் இருக்கிறது என்ற அகந்தையுடன் மற்றவர்களைத் துச்சமாக நடத்தும் குணம் உடையவன். படிப்பிலும் நாட்டமில்லை. அந்த ஊரில் உள்ள பள்ளியில் பத்தாவது படிக்கிறான். அவனிடம் உள்ள பணத்திற்காக, அவன் சொல் கேட்டு நடக்கும் சில மாணவர்களே அவன் தோழர்கள்.

பழனிவேலின் வகுப்பாசிரியர் தான் விஜயராகவன். மிகவும் நல்லவர். அதே சமயத்தில் கண்டிப்பானவர். பழனிவேல் ஒரு வழியாகப் பத்தாம் வகுப்பு வந்த போது, மற்ற ஆசிரியர்கள் அவரை எச்சரித்தனர். அவனுக்கு அனுசரித்து நடந்தால் சிக்கல் இருக்காது என்றும் அறிவுரை

ஜமதக்னி

கூறினர்.

பழனிவேலால் விஜயராகவனுக்கு முதல் மூன்று மாதங்கள் வரை எந்தச் சங்கடமும் இல்லை. காலாண்டுத் தேர்வுகள் முடிந்து விடுமுறைக்குப் பின் பள்ளி திறந்தது. அன்று விஜயராகவன், திருத்திய விடைத்தாள்களை மாணவர்களுக்குக் கொடுத்தார். பழனிவேல் எல்லாப் பாடங்களிலும் முப்பத்தைந்து முதல் நாற்பது மதிப்பெண்கள் வரை வாங்கியிருந்தான். கணிதத்தில் மட்டும் முப்பத்திரண்டு


விஜயராகவன் அன்று மாலை ஆசிரியர்களின் ஓய்வறையில் புத்தகம் படித்தபடி தனியாக அமர்ந்திருந்தார். ''சார்'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தார். பழனிவேல் அவனுடைய விடைத்தாளுடன் நின்றிருந்தான். பொதுவாக அவர் அறைக்கு மாணவர்கள், பாடங்களில் எழும் சந்தேகங்களைப் போக்கிக் கொள்ள வருவார்கள். விடைத்தாளில், மதிப்பெண்களைக் கூட்டிப் போடும் போது, குறைத்துப் போடப்பட்டுள்ளது, சரியான விடைக்கு முழு மதிப்பெண்கள் போடவில்லை என்ற குறைகளுடன் மாணவர்கள் வருவதுண்டு. பழனிவேல் விடைத்தாளுடன் வந்து நின்றதால், அவனும் அதே போன்ற குறையோடுதான் வந்திருக்கிறான் என்று எண்ணி, ''வா, பழனிவேல், என்ன விஷயம்?'' என்றார்.

பழனிவேல் விடைத்தாளை அவரிடம் கொடுத்தான். ''முப்பத்தைந்தாக மாற்றுங்கள்'' என்று அவன் சொன்ன விதம் சரியாக இல்லாவிட்டாலும், விஜயராகவன் பதில் ஏதும் கூறாமல் அவனுடைய விடைத்தாளை வாங்கிப் பார்த்தார். எல்லா மதிப்பெண்களையும் கூட்டிப் பார்த்தார். முப்பத்திரண்டுதான் வந்தது. ''சரியாக இருக்கே'' என்றார் விஜயராகவன்.

''சரியாக இருக்கிறது என்று தெரியும். ஆனாலும் அதை முப்பத்தைந்தாக மாற்றுங்கள்'' என்றுதான் கேட்கிறேன். நான் இம்முறை தேர்ச்சி பெற்றே தீர வேண்டும்.''

''தேர்ச்சி பெற வேண்டும் என்று நினைப்பது நல்லதுதான். ஆனால், அதற்காக இதுபோன்ற குறுக்கு வழிகளைத் தேர்ந்தெடுப்பது முறையல்ல. இதற்கு நான் ஒத்துழைப்பேன் என்று கனவில் கூட நினைக்காதே!'' என்றார் விஜயராகவன் கடுமையாக. பழனிவேல் கடுகடுவென்று முகத்தை வைத்துக் கொண்டு முணுமுணுத்துக் கொண்டே வெளியேறினான்.

அன்று முதல் விஜயராகவனுக்குப் பழனிவேலால் தொல்லைதான். அவர் கரும்பலகையில் எழுதும் போது காகித அம்புகள் அவரை நோக்கிப் பறக்கும். அவர் வகுப்புக்குள் நுழையும் போது கரும்பலகையில் அவரைப் போல கேலிச் சித்திரம் வரையப்பட்டிருக்கும். இவைகளெல்லாம் பழனிவேலின் திருவிளையாடல்கள்தான் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும், விஜயராகவன் அவற்றைப் பெரிதுபடுத்த மாட்டார். ''வகுப்பில் இது போன்று செய்வது தவறு'' என்று பொதுவாகச் சொல்லி, விட்டுவிடுவார். பழனிவேலை அலட்சியம் செய்வதே அவ



''அமைதியாக உறங்குங்கள். இனி இந்தத் தவறு மீண்டும் நிகழாது.''

இவ்வாறு எழுதப்பட்ட சொற்கள் ஹிரோஷிமாவில் உள்ள பொதுக் கல்லறையில் காணப்படுகின்றன.

அணுகுண்டு வீச்சால் அழிவுற்ற ஹிரோஷிமா வாசிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் காணப்படுகிறது இந்த வாசகம்.

— நாகை. கே. ரவி.

னுக்குத் தரும் தண்டனை என்பதை உணர்ந்து, அவன் குறும்புகளை இலட்சியம் செய்யாமல் இருப்பார்.

தீபாவளிக்கு இரண்டு நாட்கள் இருந்தன. விஜயராகவன் வகுப்பில் ஆங்கிலப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். வகுப்பின் கடைசியில் ஏதோ புகைவது போலத் தெரியவே வேகமாக அங்கே சென்றார். ''படால்... டமார்'' என்று எலெக்டிரிக் பட்டாசுச் சரம் ஒன்று வெடித்தது. வெடி அவர் மேலும் தெறித்தது. அதை எதிர்பாராததால் விஜயராகவனுக்குச் சிறு காயங்கள் ஏற்பட்டன.

''மாணவர்களே! இந்த விபரீத விளையாட்டைச் செய்தது யார் என்று எனக்குத் தெரிய வேண்டியதில்லை. ஆனால்,அந்த மாணவனுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். வகுப்பறை விளையாட்டு இடமல்ல. அறிவை வளர்த்துக் கொள்ளுமிடம். இதைச் செய்தவன் படிப்பில் நாட்டம் இல்லாதவனாக இருக்கலாம். ஆனால், இது மற்ற நல்ல மாணவர்களின் கவனத்தைத் திசை திருப்பும் செயல். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்'' என்றார் விஜயராகவன். அவருக்கு உறுதியாகத் தெரியும், இதைச் செய்ததும் பழனிவேல்தான் என்று.

சில நாட்கள் கழிந்தன. இறுதித் தேர்வுகளுக்கு இரண்டு மாதம்தான் இருந்தது. ஒரு நாள் விஜயராகவன் வகுப்புக்குள் நுழையும் போது, பழனிவேல் அவரைக் கவனியாதவன் போல் ''நான் இந்தப் பள்ளியை விட்டுப் போனவுடன் பாருங்கள். இவரை ஒரு வழி செய்யா விட்டால் என் பேர் பழனிவேல் இல்லை! மாற்றிக்கிறேன்!'' என்றான். விஜயராகவன் அதைப் பொருட்படுத்தாமல் பாடம் நடத்த ஆரம்பித்தார்.

மாலை, விஜயராகவன் பழனிவேலைத் தம் அறைக்கு வரச் சொல்லியிருந்தார். காலையில் தான் கூறியதைப் பற்றி விசாரிப்பார் என்றும், அவர் அப்படி ஏதேனும் கேட்டால் தூக்கியெறிந்து பேச வேண்டும் என்றும் தீர்மானித்து மிதப்பாக அவன் வந்தான். ஆனால், விஜயராகவன் அவன் படிப்பைப் பற்றி விசாரித்தார்.



''என்னங்க, உங்க பையன் கிணத்துக் குள்ள போய்ப் படிக்கிறான்?''

''நான்தான் ஆழமாப் படிக்கச் சொன்னேன்!''

— ஏ. ஹரிகிருஷ்ணன், எலவனாசூர்.

பழனிவேல் அலட்சியமாகப் பதில் சொன்னான். ''நீ பெரிய பணக்காரன் என்பது எனக்குத் தெரியும். ஆயினும், படிக்காதவன் வாழ்க்கையில் முன்னேற முடியாது. குறிப்பாக இந்த ஆண்டு நீ வாங்கும் மதிப்பெண்கள்தான் உன் எதிர்கால வாழ்க்கையை நிச்சயிக்கும். நாளை முதல் தினமும் மாலை இங்கு வா. பாடங்களில்எழும்சந்தேகங்களைப்போக்குகிறேன்'' என்றார். ''சார், டியூஷன் வைத்துக்கொள்கிறஎண்ணம்எனக்கு இல்லை'' என்றான் பழனிவேல் திமிராக.

விஜயராகவன் சிரித்தார்.

''பழனிவேல்! நான் பணத்துக்காக உன்னை வரச் சொல்லவில்லை. உன் நன்மைக்காக, நம் பள்ளியின் பெயருக்காக — இலவசமாகச் சொல்லித் தருகிறேன். நாளை முதல் நீ வர வேண்டும். இது என் உத்தரவு'' என்று கடுமையாகச் சொன்னார்.

மறுநாள் முதல் பழனிவேல் வேண்டா வெறுப்பாகப் பாடம் கற்றுக் கொள்ளச் சென்றான். அவனைத் தவிர வேறு சில மாணவர்களும் வந்திருந்தனர். அவர்களுக்கு மிகவும் சிரத்தையாகச் சொல்லிக் கொடுத்தார் விஜயராகவன். அவருக்கு இருக்கும் ஆர்வத்தைக் கண்டு பழனிவேலும் கொஞ்சம்

கொஞ்சமாகப் பாடத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

தேர்வுகள் நடந்தன. கோடை விடுமுறை. அன்றுதான் பத்தாம் வகுப்புத் தேர்வுகளின் முடிவு வெளியாகப் போகிறது. பழனிவேலின் தந்தையின் கையில் நாளேடு. ''பழனிவேல் இங்கு வா. உன் தேர்வு எண்ணைச் சொல்'' என்றார். பயந்து கொண்டே சொன்னான் பழனிவேல். ''நீ தேறி விட்டாய். 100% தேர்ச்சி பெற்ற பள்ளிகளின் பெயரில் உங்கள் பள்ளியும் இருக்கிறது. உங்கள் ஆசிரியர் யார்?'' என்றார் அவர். ''விஜயராகவன்'' என்றான் பழனிவேல். ''நிஜமாகவே அவரைப் பாராட்ட வேண்டும். அதுவும் நீ அரையாண்டு வரை மிகக் குறைந்த மதிப்பெண்களே வாங்கியவன் இந்தவருஷம்நீகோட்டடிக்கப் போகிறாய் என்றுதான் நான் நினைத்து வந்தேன்!'' என்று வியந்தார் அவர்.

பழனிவேலுக்கு அதற்கு மேல் தாங்க முடியவில்லை. தான் அவரிடம் அலட்சியமாக நடந்து கொண்ட விதத்தை, அவர் தன்னிடம் நடந்து கொண்ட முறையால் தேர்வு நேரத்தில் தன்னை வலியுறுத்திப் படிக்கச் சொன்னதை எல்லாவற்றையும் தந்தையிடம் கூறினான். ''உன்னை என் மகன் என்று கூறிக் கொள்ளவே வெட்கப் படும்படி செய்து விட்டாய். அறிவு புகட்டும் ஆசானிடம் நடந்து கொள்ளும் விதமா இது! உடனே புறப்படு.... அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். உன்னைத் தேர்வு பெறச் செய்ததற்கு நன்றியும் சொல்ல வேண்டும்'' என்றார்.

பழனிவேலும் அவன் தந்தையும் விஜயராகவன் இல்லத்திற்கும் போன போது, அவர் அன்புடன் வரவேற்றார். பழனிவேலை வாழ்த்தினார். அவர் அப்பொழுது கூட அவன் செய்த குறும்புகளைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் புகார் சொல்லவில்லை. பழனிவேலின் தந்தை தன் மைந்தனின் செயலுக்காக மனம் வருந்தினார்.

''நீங்க அவன் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டீர்கள். ஏதோ என்னால் ஆனது'' என்று சொல்லி, கூடை நிறைய பழங்களையும் ஐநூறு ரூபாய் பணத்தையும் தட்டில் வைத்துக் கொடுத்தார்.

''பழனிவேல் திருந்திவிட்டான். தவறான பாதையில் போகும் ஒரு மாணவன் திருந்தி விட்டால், ஆசிரியருக்கு அதைவிட மகிழ்ச்சியளிக்கக் கூடியது ஏதும் இருக்காது. அவன் மேன் மேலும் நன்றாகப் படிக்க வேண்டும். எனக்குப் பள்ளியில் தரும் ஊதியமே போதுமானது. பழங்களை ஏழை, எளியவர்களுக்குக் கொடுங்கள். உங்க அன்புக்கு நன்றி'' என்று சொல்லி ஒரே ஒரு பழத்தை மட்டும் எடுத்துக் கொண்டார். பணத்தைத் தொடவில்லை. சிரம் தாழ்த்தி விம்மினான் பழனிவேல். அவன் கண்கள் குளமாயின. அவன் ஆணவம் மறைந்திருந்தது!



எண்களை எளிதாகக் கூட்ட, கழிக்க நாம் கால்குலேட்டரை பயன்படுத்துகிறோம். இந்த 'கால்குலேட்டர்' என்ற சொல் எப்படி வந்தது தெரியுமா...? பண்டைய காலத்தில், எண்களைக் கண்டு பிடிக்காத நிலையில், கூட்டவும், கழிக்கவும் கற்களையே பயன்படுத்தி வந்தார்கள். கல்லுக்கு 'கால்கியூல்' என்று பெயர். இந்த கால்கியூலிலிருந்து 'கால்குலஸ்' என்ற கணிதச் சொல் பிறந்தது. அதிலிருந்து பிறந்ததுதான் இந்த கால்குலேட்டர்.

— டி. வி. சுந்தரம், அரக்கோணம்.



அம்மா கேட்ட உறுதி மொழி

தன் பாட்டி கொடுத்த சீடை களைத் தவிர குமாருக்கு நொறுக்குத் தீனி தின்பதற்கு ஏதுமில்லை அந்த பட்டிக் காட்டில்.

பாட்டியின் காரை வீட்டுக்கு முன் பகுதியில் திண்ணை. அதன் மேலே கூரைச் சாய்ப்பு.

திண்ணையில் உட்கார்ந்து 'கடுக்', 'கடுக்'கென்று சீடைகளை ஒவ்வொன்றாய் உடைத்துப் பிளந்து உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான் குமார்.

சீடை ஒன்று தவறித் தாழ்வாரத்தில் உருண்டது. அது உருண்டோடித் தெருவில் விழுமுன் பிடித்து விட 'படக்'கென்று குனிந்து எடுத்தான்.

எதிரே தெருவில் அவன் சீடை தின்பதையே பார்த்துக் கொண்டு குந்தியிருந்த சிவப்பு நாய், 'விருட்'டென்று நாலு கால் பாய்ச்சலில் ஓடியது. குமார் சிரித்து விட்டான்.

அது மேலே எறிய, கல்லைத்தான் குனிஞ்சி எடுக்கேன்'னு ஓட்டம் பிடித்தது' என்று நினைத்துப் படியிறங்கி வெளியே கிளம்பினான்.

அலைமோதும் குளம். கரையில் காற்றில் அசைந்து உரசி ஓசை எழுப்பும் அரசமரம். அதற்கடியில் அகலமான மேடையில் அழகான பிள்ளையார். பிள்ளையாருக்குத் துணையாகக் குமார் உட்கார்ந்தான்.

இந்தக் கோடை விடுமுறைக்காக அம்மாவும் அப்பாவும் குமாரை இங்கே கிராமத்தில் பாட்டி வீட்டில் கொண்டு வந்து விட்டார்கள்.

எல்லோருக்கும் ஆச்சர்யம் குமார் பட்டணத்தை விட்டுவிட்டு விடுமுறையைக் கழிக்க இந்தப் பட்டிக் காட்டுக்கு எப்படி வந்திருக்கிறான் என்று.


அதைப் பற்றி அவன் கவலைப் படவில்லை.

கிராம வாழ்க்கையை அவன்

அழகி

நன்றாகச் சுவைத்தான்; மகிழ்ச்சி யோடு இருந்தான்.

பட்டணத்தில்தான் என்ன வாழ்ந் தது? காலையில் அவன் பள்ளி புறப் படும் போது அம்மாவும் அப்பாவும் புறப்பட்டு விடுவார்கள். மாலையில் அவன் வந்து வாசல்படியில் அமர்ந் திருக்கும் போதுதான் திரும்பி வருவார் கள். பல நாட்களில் அப்பா, அவன் உறங்கிய பின்பே அலுவலகத்தி லிருந்து வந்து சேருவார்.



அதோ கண்ணன் வந்து விட்டான். கையில் பச்சைக் கேழ்வரகுக் கதிர். அவன்தான் முதன் முதலில் குமாருக்கு அறிமுகமான கிராமத்து நண்பன். நான்காவது வீடுதான் அவனுடையது.

குமாரிடம் கதிரைக் காட்டி, ''வாட்டித் தின்போம், இரு'' என் றான் கண்ணன்.

கதிர்களை மேடையில் வைத்து விட்டு சுற்றிலும் கிடந்த செத்தை, சிதறுகளைச் சேகரித்தான் கண்ணன். கரையில் குவியலாக அதைப் போட் டான். பிள்ளையாருக்கு அருகே 'முனுக் முனுக்'கென்று எரிந்து கொண்டிருந்த விளக்குச் சுடரைக் கொண்டு சருகுக் குவியலைப் பற்ற வைத்தான். காய்ந்த சருகுகளில் 'தீ' பிடித்து மட மட வென்று எரிந்தது.

கேப்பைக் கதிர்களை எடுத்து தீக் கொழுந்தில் காட்டி வாட்டினான்



கண்ணன். கருகியும் கருகாமலும் இருந்த கதிர்களை உட்கார்ந்து தன் மடியில் விரித்த சட்டையின் முன் பகுதியில் கசக்கினான். மண மிக்க கேழ்வரகு உதிர்ந்து விழுந்து கைக்கு அள்ளும் அளவு சேர்ந்தது. அதை அள்ளி உமிபோக ஊதினான். குமாருக்குப் பாதியைக் கொடுத்தான்.

வாய் ஊறக் காத்திருந்த குமார், ஆறப் பொறுக்காமல், சிறிது அள்ளி வாயில் போட்டு விட்டு 'ஆ!' என்று அலறினான்.

இன்னும் இரண்டு பையன்கள் வந்து சேர்ந்தார்கள். ஒருவன் குணா. மற்றவன் சிவா. இவர்கள் பக்கத்துத் தெரு. ஐந்தாறு கல் தாண்டியுள்ள உயர்நிலைப் பள்ளியில் படிப்பவர்கள்.

''யார்டா வர்றீங்க கிணத்துல குளிக்க? தண்ணில ஒளிஞ்சி விளையாட?'' என்று குணா கேட்டான். யாரிடமிருந்தும் சரியான பதில் வரவில்லை.

''கண்ணா, நீ வர்றயாடா?''

''இல்லே, எனக்குத்தான் நீந்தத் தெரியாதுன்னு எவ்வளவு முறை சொல்லியிருக்கேன்? ஏண்டா திருப்பித் திருப்பி தினமும் என்னிடம் கேட்கிறே?'' என்றான் கண்ணன்.

''சரி. குமார் நீ வர்றயா?'' என்று கேட்டான் குணா.

சிவா, ''குமாரை ஏண்டா வம்புக்கு இழுக்கிறே? அவன்தான் பட்டணத்தில இருந்து வந்ததுமே சொல்லிட்டானே, 'நீந்தத் தெரியாது'ன்னு'' என்றான், குணாவிடம்.

''ரெண்டு நீந்தத் தெரியாதவர்களும் சோழி ஆடுங்க'' என்று கேலியாகச் சிரித்தபடி போனான் குணா.

''வீட்டுக்குப் போகலாம், வா'' என்றான் குமார் கண்ணனிடம்.

கண்ணன் ஏதும் பேசவில்லை — குமாருடன் நடந்தான்.

சிவப்பு நாய் எதிரே வந்தது.

சர்க்கரையை விட இனிப்பவை!

1879 – ஆம் ஆண்டில் "ஹாப்கின்ஸ்" என்ற அறிவியல் அறிஞர் தமது ஆய்வகத்தில் பல சோதனைகளை முடித்து விட்டுச் சாப்பிடப் போனார். அவர் எதை எடுத்துச் சாப்பிட்டாலும் இனிப்பாக இருந்தது! ஒரே ஆச்சரியம்! தன் கையில் ஏதோ ஒரு விசேஷப் பொருள் ஒட்டி இருப்பதைக் கண்டார்! ஆய்வு செய்யும் போது அது கையில் ஒட்டியிருக்கலாம் என எண்ணினார். அதை எடுத்து ஆராய்ந்தார். அதுவே "சாக்கரின்" ஆகும். இது சர்க்கரையைவிட 550 மடங்கு இனிப்பானது.

— சகா. ராஜ், மதுரை.

கண்ணன் விரைவாகக் குனிந்து கல்லை எடுத்து நாய் மேல் வீசினான்.

நாய் கல்லெறிக்குத் தப்பிக் குதித்து அப்பால் தாவி தூர ஓடிப் போய், நின்று, கண்ணனை நோக்கி ஆவேசமாகக் குரைத்தது.

அது குணாவின் நாய். மனத்தில் குணா ஏற்படுத்தியிருந்த எரிச்சல், அவன் நாயின் மேல் ஆத்திரமாகத் திரும்பியது. கண்ணன் மறுபடி கல்லைத் தேடினான்.

"கண்ணா, இதென்ன பழக்கம்? — கல், நாய், நீ — இதிலே கல்லுக்கு உயிரில்லை, நாய்க்கு அஞ்சறிவு — உனக்கு? குணா மேல கோபம்னா — பாவம் — நாய் என்ன பண்ணும்?" என்று கேட்டான் குமார்.

கண்ணன் அசந்து போனான்.

"சிறிது நேரம் வேர்ட்ஸ் பில்டிங் என்ற சொல் விளையாட்டை விளையாடி விட்டு இருவருமே அவரவர் வீட்டுக்குப் போனார்கள்.

வீட்டுக்குள் வந்த குமார் புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். அவன் புத்தகத்தில் அம்மாவின் சிரித்த முகம்தான் தெரிந்தது. அச்செழுத்துத் தெரியவில்லை!

அம்மா சென்னைக்குத் திரும்பிப் போகுமுன் அவனிடம் ஓர் உறுதி மொழி வாங்கிக் கொண்டு போனாள்.

"இங்கே கிணறு, குட்டை நிறைய இருக்கும். உனக்கு நீச்சல் நல்லாத் தெரியும். உங்க மாமா, சின்னப் பிள்ளையிலேயே இறந்துட்டார்னு சொல்வேனே — அவர்கூட நல்லாத் தான் நீஞ்சுவார். ஆனாலும் என்ன காரணமோ, அவர் ஆற்றில் நீந்தப் போய் இறந்து விட்டார். நான் முன்னூறு கிலோ மீட்டருக்கு அப்பால இருக்கேன். நான் மனசு கஷ்டப்படாம இருக்கணும்னா 'வீட்டிலேதான் குளிப்பேன்; ஆறு, கிணறு, குட்டைப் பக்கமே போக மாட்டேன்'னு உறுதி மொழி கொடு.

அம்மாவுக்குக் கொடுத்த உறுதி மொழிப்படியே இன்றுவரை குமார் நடந்து வருகிறான். அதனால்தான் தனக்கு நீந்தத் தெரிந்தும் அந்தப் பெருமையைத் தனக்குள் அடக்கி வைத்துக் கொண்டு, "நீச்சல் தெரியாது" என்று எல்லோரிடமும் சொல்லி விடுகிறான். இதுவும் அம்மாவின் யோசனைதான். 'தெரியும். ஆனா நா வரலே'ன்னா எவனும் விட மாட்டான். அப்புறம் நான் சொன்னபடி நீ நடக்க முடியாது — முதலிலேயே 'தெரியாது'ன்னுடு" என்று அம்மா குமாரிடம் சொல்லியிருந்தாள்.

அடுத்த ஞாயிறு.

குமாரும் கண்ணனும் காலையிலேயே வெளியே சுற்றப் போனார்கள்.

நாவல் மரங்கள் சூழ்ந்த ஒரு வயற்காட்டுக் கிணறு. அங்கே போனார்கள்.

அங்கே குணாவின் சிவப்பு நாய் நின்றது. அது கண்ணனைக் கண்டதும் சிட்டாய்ப் பறந்தது. இருவருமே சிரித்து விட்டார்கள்.

"இது எங்கே இங்கே வந்தது?" என்றான் குமார்.

கண்ணன், "குணா இங்க எங்கேயாச்சும் இருப்பான்" என்றான்.

கிணற்றங்கரையில் சட்டை இருந்தது. உள்ளே எட்டிப் பார்த்த குமார், "குணா குளிக்கிறான்" என்றான்; பின் உள்ளே இருந்த குணாவிடம் உரத்து, "என்ன குணா? தனியா. அதுவும் லீவுல இவ்வளவு

சீக்கிரம் குளிப்பு?'' என்று கேட்டான்.

''ஸ்பெஷல் கிளாஸ் — போகணும். அது யாரது — கண்ணனா?.... டேய் கண்ணா உள்ளே குதிடா,'' என்றான்.

கண்ணன் முகம் சினந்து சிவந்தது. ''பெரிய்ய நீச்சல் வீரன்தான் நீ! இந்தா உன் சட்டை. நடுக்கிணத்தில் போடுறேன் நீந்தி எடு'' என்றான் சட்டையைக் கையில் எடுத்து.

''டே டே போட்டுடாதே — போட்டுட்டுப் போக வேறே இல்லே ஸ்கூலுக்கு.....'' என்று குணா கூறி முடிக்கு முன் சட்டை கிணற்றுக்குள் விழுந்தது.

நனைந்து மூழ்குமுன் அதை நீந்தி எடுத்துக் கொண்டு படியேறி கோபத்துடன் குணா ஓடி வந்தான்.

கண்ணன் ஓட்டம்பிடித்தான். அதற்குள் மேலே வந்து விட்ட குணா அவனைத் துரத்தினான். தூரத்தில் நின்ற குணாவின் சிவப்பு நாய், குணாவுக்கு உதவியாகக் கண்ணனைக் கிணற்றுப் பக்கம் வளைத்துத் துரத்தியது.

கண்மண் தெரியாமல் ஓடி வந்த கண்ணன் நாயிடம் தப்ப வழியில்லாமல் கிணற்றுக்குள் பாய்ந்து விட்டான்.

எல்லாம் ஒரு நிமிஷத்தில் நடந்து விட்டது.

திகைத்துப் போய் நின்றிருந்த குமார் அடுத்த நொடியில் கிணற்றுக்குள் பாய்ந்தான். கண்ணனின் தலை முடியைப் பிடித்திழுத்துப் படிக்கட்டருகில் தள்ளிக் கரையேற்றி விட்டான்.

விஷயம் பரவி, அவன் வீட்டுக்குப் போகும் போதுதானா அம்மா சென்னையிலிருந்து வரவேண்டும்? குமார் அம்மாவின் முகத்தைப் பார்ப்பதற்குக் கூசி, பிள்ளையார் கோவிலுக்கு வந்து உட்கார்ந்து கொண்டான்.

அம்மாவிடம் கொடுத்த உறுதிமொழியை மீறிவிட்டோமே என்ற நினைப்பு அவனை வதைத்தது.

குமார், என்ற சத்தம் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். அம்மாதான் நின்று கொண்டிருந்தாள்.

''அம்மா, நான் ஆசைக்காக நீந்தணும்னு கிணற்றில் குதிக்கலேம்மா..'' என்று தடுமாறினான்.

அம்மா சிரித்தபடி அருகே வந்தாள். ''குமார், நான் உன்னிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்டது உன் மேல் உள்ள அன்பினால் உன் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடக் கூடாதே என்பதற்காகத்தான். என்னிடம் கொடுத்த உறுதிமொழியை எண்ணி, ஆபத்தில் சிக்கியிருந்த கண்ணனை நீ காப்பாற்றாது விட்டிருந்தால் அதுதான் முட்டாள் தனம். உறுதி மொழி உன்னை இழந்து விடக் கூடாது என்பதற்காகத்தான். நீ மற்றவர்களைக் காப்பாற்றக் கூடாது என்பதற்காக அல்ல. 'எப்பொருள் எத்தன்மைதாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற குறள் உனக்குத் தெரியாது? என்று அவனை அணைத்துக் கொண்டாள்.

கார் அனுபவம்



* மோட்டார் வண்டி புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட காலம். கார்கள் அப்போதுதான் விற்பனைக்கு வந்து கொண்டிருந்தன. செல்வந்தர் ஒருவர் ஓர் காரை விலைக்கு வாங்கி அதற்குரிய பணத்தையும் கொடுத்து விட்டு அந்தக் காரிலேயே ஊருக்குப் பயணப் பட்டார். அப்படிப் போனவர் உடனேயே திரும்பி வந்தார். வியாபாரி திகைப்புற்றவராய், ''என்ன செய்தி'' என்று கேட்டார்.

செல்வந்தர் ''இந்தக் காரிலே நான் போகும் போது வேலி நடைபாதைகளெல்லாம் என்னை நோக்கி ஓடி வருகின்றன. தந்திக் கம்பங்களும் லாந்தர் தூண்களும் இந்த வண்டியை நோக்கி ஓடி வருகின்றன. இந்தக் கோளாறுகளே இல்லாத வேறு ஒரு கார் எனக்குக் கொடுங்கள். இது வேண்டவே வேண்டாம்!'' என்றார்.

— அ. வெங்கடேசன், திண்டிவனம்.



சுதந்திர தேவியின் சிலை

சுதந்திர தேவியின் உயரம் 151 அடி! எடை 4½ லட்சம் பவுண்டு! கையின் முதல் விரல் 16½ அடி நீளமுள்ளது! கைவிரல் நகம் 13 அங்குலம் நீளமும் 10 அங்குலம் அகலமும் கொண்டது! இடுப்பின் சுற்றளவு மட்டும் 35 அடி!

யார் இந்தச் சுதந்திர தேவி என்று கேட்கிறீர்களா? அமெரிக்காவில், நியூயார்க் துறைமுகத்திலுள்ள 'பெட்லோ' எனப்படும் சுதந்திரத் தீவில் இருக்கிறது சுதந்திர தேவியின் சிலை. உலகத்திலேயே பெரிய சிலை.

பிரெஞ்சு நாட்டினர் அமெரிக்க ஐக்கிய நாட்டினருக்கு, இரு நாடுகளுக்குமிடையே உள்ள நட்பின் அறிகுறியாக 1884–இல் இச்சிலையை வழங்கினர். அமெரிக்கா விடுதலை அடைந்து நூறு ஆண்டுகள் நிறைந்த சமயம் அது. சிலையை 1886, அக்டோபர் 28 இல் திறப்புவிழாச் செய்தனர்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தின் சின்னமான இச்சிலை இன்று அமெரிக்காவில் குடியேற வருகிறவர்களுக்கெல்லாம் சுதந்திர ஒளியையும் நம்பிக்கையையும் ஊட்டும் அடையாளமாக உள்ளது.

இச்சிலையை அமைக்கத் திட்டமிட்டவர் 'பிரடரிக் ஒகைஸ்ட் பார்தால்டி' என்பவர் இத்திட்டம் 1865 இல் ஏற்கப்பட்டாலும், 1881 வரை இதற்கான வேலைகள் துவக்கப்படவில்லை.

இதைச் செய்ய 2½ லட்சம் டாலரும், இதைத் தாங்கி நிற்கும் பீடத்தை அமைக்க 3½ லட்சம் டாலரும் செலவாயின. வார்ப்பின் மீது உலோகத் தகட்டை வைத்துச் சம்மட்டியால் அடித்துச் சிலையை உருவாக்கும் முறைக்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. எஃகினாலான சட்டங்களின் மீது செப்புத் தகட்டை வைத்து

இதைச் செய்தனர். பாரீஸிலுள்ள 'ஐபெல்' கோபுரத்தைக் கட்டிய 'அலெக்ஸாண்டர் குஸ்டவ் ஐபெல்' என்பவரே இச்சிலையையும் செய்தார்.

88 டன் எடையுள்ள 300 செப்புத் தகடுகளை இதற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். சிலை நிற்கும் அடித்தளம் கருங்கல்லும் கான்கிரீட்டும் கொண்டு கட்டிய 142 அடி உயரமுள்ள கட்டுமானமாகும். கடல் மட்டத்திலிருந்து 305 அடி உயரத்தில் இது இருக்கிறது. பீடத்தை அமைக்க ஒரு இலட்சம் மக்கள் நன்கொடை வழங்கினர்.


சிலை 300 துண்டுகளாகக் கப்பல் மூலம் அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. கம்பீரமான ஒரு மங்கை, வலக்கையில் தீப்பந்தத்தை உயர்த்திப் பிடித்துக் கொண்டு, இடக்கையில் 1776 — ஆம் ஆண்டின் சுதந்திரப் பிரகடனத் தேதி செதுக்கப்பட்ட தகட்டை அணைத்து ஏந்தி நிற்பது போல் அமைந்துள்ளது இது. காலடியில் தகர்ந்த சங்கிலித் தொடர் உள்ளது. அடிமை விலங்கை உடைத்து மக்கள் சுதந்திரமடைந்ததை இந்த அறுந்த சங்கிலி குறிக்கிறது.

சிலையின் பாதத்தில் கவிதை எழுதப்பட்டிருக்கிறது. வலக்கையில் உயர்த்தியுள்ள தீப்பந்தம் இரவில் ஒளி வீசும். எனவே, இது கலங்கரை விளக்காகவும், விமானங்களுக்கு எச்சரிக்கை விளக்காகவும் பயன்படுகிறது. தீப்பந்தத்தின் சுடரைச் செய்யக் கண்ணாடியால் ஆன 600 சதுர அடி கண்ணாடி தேவைப்பட்டது. இந்தச் சுடர் சூரியன் மறையும் நேரத்திலிருந்து இரவு முழுவதும் பிரகாசிக்கிறது. தெளிவாகத் தெரியும் பொருட்டு, பார்க்கிறவர்களின் கண்ணில் ஒளி படாமல், சிலை மீது மட்டும் ஒளிவீசும் வகையில் பிரகாசமான விளக்குகளை 1917 இல் அமைத்துள்ளனர். தரையிலிருந்து பீடத்தின் உச்சி வரை லிப்ட் இருக்கிறது. அங்கிருந்து சிலையின் தலைக்கு ஒரே சமயத்தில் 50 பேர்கள் வரை, சுழன்று செல்லும் 350 படிகள் மூலம் ஏறிச் செல்லலாம். சிலையின் தலையில் மட்டும் 50 பேர்கள் தாராளமாக நிற்கலாம். அங்கேயுள்ள பெரிய ஜன்னல்கள் வழியே துறைமுகம், நியூயார்க் நகரம், அண்மையிலுள்ள நியூஜெர்ஸி முதலியவற்றைக் கண்டு களிக்கலாம். வலக்கையிலுள்ள தீப்பந்தம் வரையில் கூட உள்ளேயே போகலாம். ஆனால், பொது மக்க்ளை அனுமதிப்பதில்லை. இது சுமார் ஆயிரம் ஆண்டுகள் வரை உறுதியாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

முதலில் சிலை பொன்நிறமாகத்தான் காட்சியளித்தது. ஆனால், சுமார் 140 மைல் வேகத்தில் வீசும் கடல் காற்றினால் இப்போது பச்சை நிறமாகியுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் 5 இலட்சம் மக்கள் இச்சிலையைக் காண வருகின்றனர். வானம் நிர்மலமாக இருக்கும் நாட்களில் 15 மைல் சுற்றுவட்டாரத்தைக் கண்டு களிக்கின்றனர். 1924 — ஆம் ஆண்டில் இது அமெரிக்காவின் தேசிய நினைவுச் சின்னமாக்கப்பட்டுள்ளது.


— ஆர். ஜெயலட்சுமி,
திருநெல்வேலி.



''இது என் இரண்டாவது மகன். நல்ல பையன். பெரியவன் மாதிரி என்ன வாங்கி வந்தேன்னு அநாகரிகமாக் கேட்காம இருக்கான். ஆனால், போகும் போது ஐந்து ரூபாயாவது தரலேன்னா ஒளிச்சு வைச்சிருக்கிற உங்க செருப்பைத் தரவே மாட்டான்!''

— ஆர். இரத்தினசாமி, பி. புளியம்பட்டி.

புத்தியா சொல்ல வந்தே?





கொ.மா.கோதண்டம்

அந்த மலையடிவாரத்துக் காட்டாற்றில் மாணவர்கள் குளிக்கத் தயாரானார்கள். ஒரு காட்டு வாசிச் சிறுவன் இவர்களைப் பார்த்து விட்டு ஓடிவந்தான்.

''சாமி இங்க சமைக்கப் போறேகளா? வெறகு வேணுமா? பாத்திரங்க விளக்கணுமா, இல்ல கையில சாப்பாடு கொண்டாந்துட்டா சாப்பிட எல வேணுமா?'

அடுக்கடுக்கான கேள்விகளைக் கேட்டுவிட்டுத் தலையைச் சொறிந்து கொண்டு நின்றான் அவன்.

''இந்த வேலைகள் செஞ்சா ஒனக்கு எவ்வளவு கூலி வேணும்?'' மாணவன் மணி கேட்டான்.

''மிச்ச சாப்பாடு கொடுத்தா வாங்கிக்கிடுவேன்.''

''சாப்பாடு மிஞ்சலேன்னா?' வேலு கேலியாகக் கேட்டான்.

''அப்புறம் உங்க பிரியம்.''

''உன் பேரு என்னப்பா?'' — முருகன் கேட்டான்.

''ஏம்பேரு நீலனுங்க.''

''சரி நாங்க சாப்பாடு கொண்டாந்திருக்கோம். இல மட்டும் பறிச்சுட்டு வா!''

நீலன் ஓடி விட்டான்.

மாணவர்கள் ஆற்றில் குளித்து விட்டு எழுந்தனர்.

ஆற்றின் இடையிலும், ஓரங்களிலும், பாறைகளுக்கிடையிலும் தண்ணீர் அதிகமாக வந்த போது அடித்துக் கொண்டு வந்து தள்ளிய செத்தைகள் குவியல் குவியலாகக் கிடந்தது.

முருகன் குவியல்களைத் திரட்டி, தீப்பெட்டி எடுத்து, குச்சி உரசி 'தீ' வைத்தான். அது 'கப கப' வென்று எரிந்தும், காயாத பகுதி புகைகளும் மேகமூட்டம்போல்நின்றது.வனத்தை மறைத்தது புகை.

புகையால் அவர்கள் கண்களை கசக்கி விட்டுக் கொண்டார்கள். எரியும் தீயில் மேலும் செத்தைகளை அள்ளிப் போட்டார்கள். தேக்க இலைகளோடு வந்த நீலன் இலைகளை அவர்களிடம் தந்து விட்டு பதை பதைப்போடு பேசினான்.

''கும்புடுறேஞ் சாமி. வனத்துல தீ வெச்சா சில சமயம் வனமே அழிஞ்சு போயிடும் சாமி. மிருகங்க பயந்து ஓடுற போது நமக்கு ஆபத்துக் கூட வரலாம்.இல்ல,தீயில் கூட நாம அம்புட்டுகிடலாம்!'' என்று பணிவோடு கூறினான்.

''டேய், என்ன எங்கள பயமுறுத்துறியா?''

''வெளயாட்டுக்கு தீ வைச்சா அது காட்டையே எரிச்சிப் போடுமோ?''

''எரிஞ்சா நாங்க ஓடிப் போவமில்லே எங்களுக்கு என்னடா ஆபத்து வந்துடும்?'

மூவரும் மாறி மாறிக் கோபத்தோடு கேட்டனர்.

''இல்ல சாமி தீயில... வந்து விளையாடக் கூடாதுன்னு சொல்லுவாங்க அதான் சொன்னேன்.''

''ஏய்... கொஞ்சம் செத்தையில சின்னதா தீ வெச்சா என்னப்பா ஆயிடும்?''

''சாமி தீக்குச்சி சின்னதுதான். ஒரு மரத்துல கோடி தீக்குச்சி கெடைக்கும். ஆனா ஒரே ஒருதீக்குச்சி கோடி மரங் களை அழிச்சிடும். வனம் அழிஞ்சா எங்களுக்கு வாழ்க்கையே இல்லே. ஒங்களுக்கும் மழை பெய்யாம கஷ்டம். அதாஞ் சாமி சொன்னேன்.''

''டேய் ஒரு காட்டுப்பய புரொபசர் மாதிரி நமக்கு அறிவுரை சொல்ல வந்துட்டான்டா பாத்தியா?''

''டேய், இப்ப நீ எலய கொடுத் திட்டே இல்லே. உன் வேலயப் பாத் துட்டுப் போ. அனாவசியமா எங் களுக்குப் புத்தி சொல்ல வந்ததால; எல தந்ததுக்கு மிச்ச சாப்பாடு கூட இல்லே. போ போ.''

மூவரும் விரட்டியதும் நீலன் பேசாமல் போய்விட்டான்.

புகைமண்டலம் ஓய்ந்த பின் ஆற்றில் குளித்தார்கள். பின் பெரிய வாளியில் கொண்டு வந்த உணவை இலைகளில் போட்டு சாப்பிட்டார் கள்.

''அந்தக் காட்டுப் பயலுக்கு சாப்பாடு தர வேணுமா?''

மணி கேட்டதும் மற்றவர்கள், ''அதுதான் அவனை விரட்டிப்புட் டியே'' என்றார்கள்.

''சரி கொஞ்ச தூரம் அந்தப் பக்கமாவே போய் மலை ஏறிப் பார்த் திட்டு வருவோமே.''

''சரி வாங்க போகலாம்.''

அவர்கள் துள்ளிக் குதித்துப் பாறைகளில்தாண்டியவாறே ஆற்றின் வழியாக மலை ஏறினார்கள். ஓரிடத் தில் தண்ணீர் அருவியாக விழுந்து கொண்டிருந்தது. கீழே கேணியில் குளம் போல தண்ணீர் கட்டியிருந்தது.

அருவியல் குளித்தும் கேணியில் விழுந்து நீச்சலடித்தும் விளையாடி னார்கள.

குரங்குகள் மரங்களில் தாவிச் சென்றன. கல்லை விட்டு எறிந்து அவற்றைவிரட்டினார்கள். ஒருபாறை யில் ஏறி அமர்ந்து சுற்றிலும் பார்த் தார்கள்.

சிறிது தூரத்தில் சமதளமான புல் வெளி, இடுப்புயர போதைப் புல் காய்ந்த நிலையில் இருந்தது.



''டேய், இந்தப் புல்வெளி ரொம்ப நல்லாயிருக்கில்லே. சும்மா கொஞ்சம் தூரம் இப்படி போய் வருவோமே!''

வேலு கேட்டதும் அனைவரும் சம்மதித்தனர்.

கைகளால் புல்லை விலக்கியவாறே குதித்து ஓடினர். அந்த ஓரத்தில் ஒரு நெல்லி மரம் இருந்தது. அருகில் சென்று கல்லெறிய நெல்லிக்காய்கள் 'பொல பொல' வென்று கீழே விழுந்தன.

அவற்றை எடுத்துப் பைகளில் நிரப்பிக்கொண்டு திரும்பினர். மணி தீப்பெட்டியை எடுத்து ஒரு குச்சியை பெட்டியின் மருந்துள்ள பக்கத்தில் வைத்து பெருவிரலால் அழுத்தித் தட்டி விட்டான். எரியும் குச்சி அம்பாகப் பாய்ந்து சென்று புல்வெளியின் ஓரத்தில் விழுந்தது. சுற்றிலும் சதுரமான புல்வெளி. அதன் ஓரத்தில் இருந்தவை நன்றாகக் காய்ந்த புல் ஆதலால் தீ படபட வென எரிந்து கொண்டே புல்வெளியை வளைத்துக் கொண்டது!

ஓடிவந்த மாணவர்கள் இடையில் அகப்பட்டுக் கொண்டனர். நான்கு பக்கங்களிலிருந்தும் தீ மையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. தீயின் ஓங்கார சத்தமும், போதைப் புல் கணுக்கள் வெடிக்கும் 'சடசட...' சத்தமும் அதிகரித்தது.

''ஐயய்யோ. ஐயய்யோ'' என்ற மாணவர்கள் அலறல் சத்தம் அதையும் மீறித் தொலைவு வரை கேட்டது.

சலனமற்ற நீரில் கல்லெறிந்தால் வட்ட வட்டமாக அலைகள் வெளியே விரைவது போல இந்தக் காட்டில் வட்டமாக எரியும் தீ உள் நோக்கி வந்து கொண்டிருந்தது.

பன்றிகள், முயல்கள், மான்கள் போன்ற சிறு மிருகங்கள் வழி தெரியாமல் அலறலுடன் சுற்றிச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தன. மாணவர்கள் செய்வதறியாது கூக்குரலிட்டவாறு மையத்தில் நின்று கொண்டிருந்தனர்.

பாறையின் உச்சியில் நீலன் நின்று பார்த்தான். ஒரே பாய்ச்சலாக தீயில் புகுந்து ஓடி மையத்தை அடைந்தான்.

''நீலா, எங்களை எப்படியும் காப்பாத்துப்பா.''

மூவரும் அலறினார்கள். அவன் சுற்று முற்று பார்த்தான்.

''மொதல்ல சட்டை, குழாயி கால் சட்டையெல்லாம் கழட்டிடுங்க''

அவர்கள் ஜட்டிகளோடு நின்றனர்.

குறிப்பிட்ட ஒரு பகுதியில் பாதை போல புல்லைப் பறித்தான். அவர்களும் அவனைப் பார்த்து வேக வேகமாகப் புல்லைப் பறித்தனர். சின்ன இடைவெளி கிடைத்தது.

''கழட்டின சட்டைத் துணிகளே சுருட்டி இடுக்கி வையுங்க''

தீவட்டம் வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. தன் பின்னால் வருமாறு கூறி விட்டு நீலன் முதலில் ஓடினான். மாணவர்களும் பின்னால் ஓடினார்கள். புல்வெளியைக் கடந்து ஆற்றில் குதித்துக் கரை ஏறினார்கள்.

''நீலா நெருப்போட வெளயாடக் கூடாதுன்னு சொன்னே. சின்னத் தீயிதானேன்னு சொல்லி உன்னை வெரட்டிட்டோம். சின்னத் தீ பெருந் தீயாகி எங்க உயிரைப் பறிக்கப் பார்த்தது. நீ தான் தெய்வமா வந்து எங்களைக் காப்பாத்தினே. எங்கள மன்னிச்சிடுப்பா.''

மூவரும் நீலனைக் கட்டித் தழுவிக் கொண்டனர்.

''சுவற்றில் அடிக்க முடியாது. படங்களை மாட்டவும் முடியாத ஆணி ஒண்ணு சொல்லு!''

''மருதாணி!''

— ஏழ்வரைக்கடியான், சென்னை.





கேட்கட்டுமா டாக்டர்?

-க்டர். கு. கணேசன்

அ. நவ்சாத், மொரப்பூர்.

சளி எப்படி ஏற்படுகிறது?

சளி (Sputum) என்பது ஒரு அசுத்தப் பொருள். அது நம் சுவாசப் பாதையில் உண்டாகிறது. வைரஸ், பாக்டீரியா மற்றும் காச நோய்க் கிருமிகள் நம் உடம்புக்குள் புகுந்து மூக்கு, தொண்டை, சுவாசக்குழல், சுவாசப்பை ஆகியவற்றில் வாசம் செய்யும். பின்பு அங்குள்ள திசுக்களின் 'செல்'களைத் தின்ன ஆரம்பிக்கும். இச்சமயத்தில் நம் இரத்தத்தில் உள்ள வெள்ளையணுக்கள் படை போல் திரண்டு அவற்றொடு போராடும். இப்போராட்டத்தில் சளிக்கிருமிகள் வெற்றி பெற்றுவிட்டால் அவை நம் சுவாசப் பாதை முழுவதும் ஆக்ரமித்துக் கொள்ளும். இதனால், சுவாசப்பாதையில் புண் உண்டாகும். அப்போது சில அசுத்தங்கள் சேரும். ஏற்கனவே, சளிக்கிருமிகளுக்கும் வெள்ளையணுக்களுக்கும் நடந்த போராட்டத்தில் இறக்கும் செல்களும், கிருமிகளும் இந்த அசுத்தங்களுடன் சேர்ந்து 'சளி'யாக மாறும்! புரிந்ததா நவ்சாத்?

ஏ. எம். சர்தார், விருத்தாசலம்.

கொட்டாவி ஏன் ஏற்படுகிறது? மற்றவர்கள் கொட்டாவி விடும் போது நமக்கும் கொட்டாவி வருகிறதே, ஏன்?




கொட்டாவி என்பது சோம்பலுக்கு அடையாளம். சில சமயங்களில் உடல் மட்டுமல்ல; மூளையும் சோம்பலாய் இருக்கிறது. காரணம் மூளைக்குத் தேவையான பிராணவாயு (ஆக்ஸிஜன்) சில காரணங்களால் தற்காலிகமாகக் குறைந்து விட, 'எனக்குத் தேவை ஆக்ஸிஜன்!' என்று நம் சுவாச மண்டலத்திற்கு அறைகூவல் விடுகிறது. உடனே நாம் இழுத்து மூச்சு விடுகிறோம். அதிகமான காற்றை சுவாசிக்கிறோம். அதன் மூலம் அதிகமான ஆக்ஸிஜன் நமக்குக் கிடைக்கிறது. பின்னர் சுவாசப் பைக்குள் நுழைந்த அதிகக் காற்றை வெளியேற்ற வேண்டுமல்லவா? அதனால், எப்போதும் போல் இல்லாமல் வாய் திறந்து மூச்சை வெளியேற்றுகிறோம்! இதுதான் கொட்டாவி! இதை, சிலர் கெட்ட ஆவி என்றும் சொல்வார்கள். உண்மைதான்! கொட்டாவியில் நமக்குத்தேவையில்லாத கார்பன்—டை—ஆக்ஸைடைத்தானே அதிகமாக வெளியேறுகிறது!

ஒருவர் கொட்டாவி விடும் போது அருகிலிருப்பவருக்கும் கொட்டாவி வருவது இயல்புதான். இதற்குச் சரியான காரணம் தெரியவில்லை. உளநிலை சார்ந்தது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

சிலர் கண்களுக்குக் 'காண்டாக்ட் லென்ஸ்' பொருந்திக் கொள்வதாக அறிகிறேன். அதுபற்றி விளக்கமாகச் சொல்லுங்கள், டாக்டர்!

— எஸ். ரவீந்திரன், சென்னை — 41.



முதலில் நம் கண்ணில் உள்ள லென்சைப் பற்றிய சிறு அறிமுகம்.. கண்ணில் சதையாலான ஒரு லென்ஸ் உள்ளது. இதுதான் நாம் பார்க்கும் பொருள்களை விழித்திரையில் ஃபோகஸ் செய்து பார்வையை உண்டாக்குகிறது. உடம்பில் ஏற்படும் நோய்களின் காரணமாகவோ, வயதின் காரணமாகவோ, இந்த லென்ஸ் தெளிவற்ற நிலையை அடையும் போது, நமக்குப் பார்வை குறைகிறது. இதற்கு ஒரே மருந்து வம் லென்ஸை எடுத்து விடுவதுதான். அப்படி எடுத்து விட்டால் பொருள்களை ஃபோகஸ் செய்ய மாற்று லென்ஸ் தேவைப்படுகிறதல்லவா? அதற்குத்தான் முதலில் கண் மருத்துவர்கள் மூக்குக் கண்ணாடியை சிபாரிசு செய்தார்கள். அதில் பல அசெளகரியங்கள் இருந்தன. அதைத் தவிர்க்கக் கண்ணிலேயே ஒட்டிக் கொள்ளக் கூடிய — தேவையில்லா சமயங்களில் வெளியே எடுத்துக் கொள்ளக் கூடிய — ஒரு வகை லென்சைக் கண்டுபிடித்தார்கள்.

இதற்கு 'காண்டாக்ட் லென்ஸ்' (Contact Lens) எனப் பெயரிட்டார்கள். தமிழில் இதற்கு 'விழிதொடு ஆடிகள்' என்று அழகான பெயருண்டு. மூக்குக் கண்ணாடியுடன் ஒப்பிடும் போது, காண்டாக்ட் லென்சின் விலை குறைவு; முகத்தின் அழகும் கெடுவதில்லை; மூக்குக் கண்ணாடி அணிவதை விடத் தெளிவான பார்வை கிடைக்கிறது; லென்சில் அழுக்கு ஒட்டுவதில்லை; இவை எல்லாவற்றையும் விட, நாமே சொன்னால் தவிர, நாம் காண்டாக்ட் லென்ஸ் அணிந்திருப்பது மற்றவர்களுக்குத் தெரியாது! இதனாலேயே காண்டாக்ட் லென்ஸ் பிரபலமாகி விட்டது!


ஜெயஸ்ரீ ராஜகுமார், மதுரை — 2.

போலியோ நோயை முற்றிலுமாகக் குணப்படுத்த முடியுமா?

போலியோ (Poliomyelitis) எனப்படும் இளம்பிள்ளை வாதநோய் வந்த பின்பு அதை முற்றிலுமாகக் குணப்படுத்துவதற்கு வாய்ப்புகள் குறைவு. ஆனால், இளம்பிள்ளைவாதத் தடுப்பு சொட்டு மருந்தை **(Oral Polio Vaccine)** சிறுவயதிலேயே முறையாக உட்கொண்டிருந்தால், போலியோ நோய் வரவே வராது என்பது மட்டும் உண்மை! எதையும் வரும் முன் காப்பதே சிறப்பல்லவா ஜெயஸ்ரீ?

ஒருவர் இரத்தம் இன்னொருவருக்குப் பொருந்துமா, பொருந்தாதா என்பதை இரத்தப் பிரிவை வைத்துத் தீர்மானிக்கிறீர்கள் அல்லவா? அம்மாதிரி சிறுநீரகத்தைப் பொருத்தும் போது எதை வைத்துத் தீர்மானிக்கிறீர்கள்?

— எம். கே. சக்திவேல், சேலம்.



நல்ல கேள்வி. சிறுநீரக மாற்றுச் சிகிச்சைகள் இப்போது அதிக அளவில் நடைபெறுகின்றன. இச் சமயத்தில் இக் கேள்விக்கு விடை தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமே! ஒருவருக்கு மற்றொருவரின் சிறுநீரகத்தைப் பொறுத்துமுன், இருவரின் உடம்பிலிருந்தும் சிறு துண்டுகளாக திசுக்களை எடுத்து 'டிஷ்யூ கல்ச்சர்' முறையில் பொருத்தம் பார்க்கிறார்கள். இருவரின் திசுக்களின் உயிர்ம அணுக்கள் ஒன்று போலிருந்தால்தான் சிறுநீரகத்தைப் பொறுத்த முடியும்!

தலைவலி வருவதற்குக் காரணம் என்ன?

— வி. ராஜா, மதுராந்தகம்.
— சிவ. மணிகண்டன், கருங்குழி.




தலைவலிக்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றை இரு வகைகளாகப் பிரிக்கலாம். மண்டைக்கு வெளியில் ஏற்படும் கோளாறுகளால் வரக் கூடிய தலைவலி; மண்டைக்கு உள்ளே உண்டாகும் கோளாறுகளால் வரக் கூடிய தலைவலி. இதில் முதல் வகைத் தலைவலிக்கு, கீழ்க்கண்ட காரணங்களைச் சொல்லலாம். பசி, கண் அயர்வு, பார்வைக் கோளாறுகள், மூக்குக் குழியில் நீர்ச் சேர்க்கை, மன உளைச்சல், மன இறுக்கம், கவலை, தலைத்தசை அழற்சி, உயர் இரத்த அழுத்தம், காய்ச்சல் போன்றவை. இரண்டாம் வகைத் தலைவலிக்கு மண்டையில் அடிபடுவது, காயம், விபத்தில் மண்டை ஓட்டில் முறிவு, மூளையில் இரத்தக் கசிவு, மூளையில் தோன்றும் கட்டிகள், மூளைக் காய்ச்சல் போன்றவை காரணங்களாகின்றன. பொதுவாக சாதாரண காரணங்களினால்தான் தலைவலி வரும். இருப்பினும் காரணமறிந்து மருந்து உட்கொண்டால் பூரண குணம் கிடைக்கும்!


ஒரு மனிதனுக்கு விபத்தால் மனநிலை பாதிக்கப்பட்டு பின்பு அதேபோன்ற விபத்து மீண்டும் ஏற்படும் போது மனநிலை குணமடைகிறது என்று திரைப்படங்களில் காண்பிக்கப்படுகிறது. இது அறிவியல் முறைப்படி சரியா?


— வி. லட்சுமி, மதுராந்தகம்.

முள்ளை முள்ளால் எடுக்கிற மாதிரி, விபத்தினால் ஏற்பட்ட மனநிலை பாதிப்பு மீண்டும் ஒரு விபத்தினால் குணமாகிறது என்ற கூற்றுக்கு அறிவியலில் இடமில்லை! உன்னை மாதிரி சிறுவர் சிறுமிகளுக்குத் தவறான கருத்துக்களைக் கற்பிக்கும் இம்மாதிரியான திரைப்படக் காட்சிகளை திரைப்படம் எடுப்பவர்கள் தவிர்த்தால் நல்லது!


காட்டில் மகிழ்ச்சி!
அமைப்பு 'ரே' ஓவியம் ரஜினி..
கருத்து: மு. இராஜேந்திரன்.
காட்டில் பொல்லாத நரி ஒன்று வசித்தது.
அது ஏதாவது தந்திரம் செய்து விலங்குகளை சிங்கத்திடம் சேர்க்கும்.
சிங்கம் அதைப்பாய்ந்து கொல்லும்.
இதில் நரிக்கும் பங்கு கிடைக்கும்.
ஒரு நாள் – எந்த விலங்கை ஏமாற்றலாம் என்று நரி கிளம்பியது.
1


அப்போது எதிரே ஒரு காட்டுப் பன்றி வந்தது-
சிங்க ராஜா உன்னை அழைக்கிறார்!
பன்றிக்கு புரிந்து விட்டது- அது யோசித்தது.
சிங்க ராஜாவுக்கு இரையாவது பற்றி மகிழ்ச்சியே.. ஆனால்..
சிங்கம் என்னை இரையாக்கி உண்ணும் போது என் ஆன்மா சாந்தியடைய யார் பிரார்த்திப்பார்கள்!
நான் பிரார்த்திக்கிறேன்.
இரண்டும் கிளம்பின.
குகை வாசல்..
நீ உள்ளே போ! நான் இங்கேயே இருந்து பிரார்த்திக்கிறேன்!


ஏன் இத்தனை தாமதம்?
நரி உங்களை கேவலமாய்ப் பேசியது மகாராஜா!
ஆமாம்.. உங்களுக்கு வீரமே இல்லையாம்!
அப்படியா சொன்னது!
சிங்கம் ஆத்திரம் அடைந்தது.
எல்லாம் அவர் ஜெபத்தால் தானாம்! இப்பக்கூட ஜெபம் பண்ணிக்கிட்டிருக்கார் குகை வாசல்ல...
வா! என் வீரத்தைக் காட்டுகிறேன்!
குகை வாசலில் நரி இருப்பதைக் கண்ட சிங்கம் கோபத்தோடு அதன் மீது பாய்ந்தது.
எனக்கா வீரம் இல்லை!
பன்றி தப்பித்துக் கொண்டது.
நரி ஒழிந்தது. எல்லா விலங்குகளும் மகிழ்ச்சியாக இருந்தன.



○ **ஆ. கமலவல்லி, நெற்குன்றம்.**

கண்களைச் சிமிட்டுவதால் என்ன நன்மை?

இதற்கு மருத்துவ அடிப்படையிலான பதிலை டாக்டர்தான் கூற வேண்டும். ஆனால், இந்த அனிச்சைச் செயலால் கண்களில் சேரும் தூசு துப்புகள், வெளியேற்ற வசதியாக கண்களின் ஓரத்திற்குத் தள்ளப்படுகின்றன என்பது அனுபவ உண்மை.

○ **வ. செல்வி, திருவண்ணாமலை.**

வேடிக்கை, சாகுபடி இரண்டும் தமிழ்ச் சொற்களா?

இரண்டுமே தெலுங்குச் சொற்கள்.

○ **எப். கலைமான், வந்தவாசி.**

முதல் துணைக் கோள் எது?

முதல் துணைக் கோள் சந்திரன்தான்! செயற்கைக் கோள்களில் முதலாவது ஸ்புட்னிக் — 1. சோவியத் ரஷ்யா இதை 1957 ஆம் ஆண்டு அக்டோபர் 4ல் ஏவியது. இது 92 நாட்கள் பூமியைச் சுற்றியது.

○ **மு. கமலநாதன், விக்கிரவாண்டி.**

இடி எவ்வளவு உயரத்தில் இடித்தது என்பதைக் கணக்கிட முடியுமா?

முடியும். மின்னல் மின்னிய நேரம், இடிச் சத்தம் காதில் விழும் நேரம் ஆகிய இரண்டுக்கும் இடைப்பட்ட நேரத்தைக் குறித்துக் கொண்டு, ஒலி வேகத்தின் அடிப்படையில் கணக்கிடுகிறார்கள்.

○ **ஓா. செடைமுத்து, பாளையம்கோட்டை.**

பாம்புச் சட்டையைக் கையில் தேய்த்துக் கொண்டு அடித்தால், அடி பலமாக விழும் என்பது உண்மையா?

அறிவியல் அடிப்படையில் இதற்கு ஆதாரம் இல்லை. பேனா மூடியை வழுக்காமல் கழற்ற, விரல்களைச் சுவற்றில் தேய்த்துக் கொள்கிறோம் இல்லையா? அதே போலத்தான் இருக்கும்.

○ **மு. சபேசன், கோவை — 4.**

கோளரங்கங்களை முதலில் அமைத்தவர்கள் யார்?

முதல் கோளரங்கம் 1923 ஆம் ஆண்டில் ஜெர்மெனியில் அமைக்கப்பட்டது. அமைத்தவர் ஆஸ்டர் மில்லர்.

○ **பி. பாஸ்கரன், கரூர்.**

பத்தாவது கிரகம் என்கிறார்களே, இதைப் பற்றிச் சிறிது விளக்குங்களேன்?

இதைப் பற்றி சேரநம்பியின் விளக்கமான கட்டுரை விரைவில் கோகுலத்தில் வர உள்ளது. சிறிது காத்திரு தம்பி.

○ **மு. உலகநாதன், நாகர்கோவில்.**

ஜேம்ஸ்பாண்ட் என்ற உலகப் புகழ் பெற்ற கதாபாத்திரத்தைப் படைத்த ஆசிரியர் யார்?

இங்கிலாந்தைச் சேர்ந்த இயான் ஃபிளமிங்தான் இந்தக் கதாபாத்திரத்தை உருவாக்கினார். ராய்ட்டர் நிறுவனத்தில் ரிப்போர்ட்டராக இருந்து, பிறகு உலகப் புகழ் பெற்ற துப்பறியும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய இவர்தான் புகழ் வாய்ந்த 'ஜேம்ஸ் பாண்டைப்' படைத்தவர். இவர் குழந்தைகளுக்காக எழுதிய 'சிட்டி சிட்டி பாங் பாங்' நாவலாகி, திரைப்படமாகவும் வெளிவந்து அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த நாவலின் கதாநாயகன் ஒரு ஓட்டைக் கார்!

○ **எப். ஜார்ஜ், மேட்டுப்பாளையம்.**

தபால் தலைகளில் தமிழ்ப் பெரியார்கள் இடம் பெற்றிருக்கிறார்களா?

வள்ளுவர், கம்பர், பாரதி, அருணகிரி நாதர் இப்படிப் பல தமிழ்ப் பெரியார்களது

உருவம் அச்சிட்ட தபால் தலைகள் வந்துள்ளனவே. இலங்கையில் ஆறுமுக நாவலரின் உருவம் கொண்ட தபால்தலை வந்துள்ளதே.

o **எப். விக்டர், மயிலாடுதுறை.**

நோபல் பரிசு வழங்கப்படாத துறை ஏதாவது இருக்கிறதா?

கணிதத் துறைக்கு இன்னும் நோபல் பரிசு சேர்க்கப்படவில்லை. அப்படிச் சேர்த்திருந்தால் சீனிவாச ராமானுஜத்திற்குக் கிடைத்திருக்குமே.

o **இ. சலீம், ஆடுதுறை.**

'காமன் வெல்த்' அமைப்பில் உறுப்பினராகாத நாடு ஏதாவது இருக்கிறதா?

இருக்கிறதே. பர்மா இன்னும் சேரவில்லையே.

o **டி. பாஸ்கரன், பொன்மலை, திருச்சி.**

கலைமாமணி பட்டம் பெற்ற குழந்தை எழுத்தாளர்கள் யாராவது இருக்கிறார்களா?

அமரர் புத்தனேரி ரா. சுப்ரமணியன், சுப்பு ஆறுமுகம், திருச்சி பாரதன் ஆகியோர் கலைமாமணி பட்டம் பெற்றவர்கள். குழந்தை இலக்கியத்திற்காக இது இவர்களுக்கு வழங்கப்படாவிட்டாலும், இவர்கள் குழந்தைகளுக்காக எழுதியவர்கள் அல்லது எழுதி வருபவர்கள்.

o **கு. முத்துமணி, பொன்மலை, திருச்சி.**

உலகின் முதல் பெண் மருத்துவர் யார்?

அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி எலிசபெத் பிளாக்வெல். டாக்டர் பட்டம் பெற்ற ஆண்டு 1849. இதில் வேடிக்கை என்ன தெரியுமா? அவர் டாக்டருக்குப் படிக்க ஏற்பட்ட எதிர்ப்புகளை விட, டாக்டர் வேலை கிடைக்க அவர் பட்ட துன்பம் பெரிய கதை! அடுத்து வரும் கோகுலத்தில் இவரைப் பற்றிய கட்டுரை ஒன்று வெளிவர உள்ளது.

o **வ. ரத்தினசாமி, குன்றக்குடி.**

'ஆர்.வி.' என்று குழந்தைகளுக்காக எழுதியுள்ள அதே ஆர். வேங்கட்ராமன் தான் நமது குடியரசுத் தலைவரா?

இல்லை. 'ஆர். வி.' என்ற ஆர். வேங்கட்ராமன், பெரியவர்களுக்காகவும் அதை விட அதிகமாகக் குழந்தைகளுக்காகவும் எழுதியுள்ளவர். 'கண்ணன்' பத்திரிகையின் ஆசிரியராக இருந்தவர். குழந்தை எழுத்தாளர் சங்கத்திற்குத் தலைவராகக் கூட இருந்து, குழந்தை இலக்கிய மாநாட்டில் கேடயம் வழங்கிப் பாராட்டும் பெற்றவர். 'ஜனா' என்ற பெயரில் கூட இவர் குழந்தைகளுக்காக எழுதியுள்ளார்.

o **து. பிச்சைமுத்து, ஜெயங்கொண்டான்.**

குழந்தைகளுக்காக எழுதுவோரில், பெண்கள் இருக்கிறார்களா?

ஏராளமானோர் இருக்கிறார்களே. கோகுலத்தில் எழுதிய ஆர். பொன்னம்மாள், தேவி நாச்சியப்பன், மதிஒளி, அ. திலகவதி, த. ஜானகி என்று இந்தப் பட்டியல் விரிந்து கொண்டே போகும் அளவுக்கு இருக்கிறார்கள். இன்று பெரியவர்களுக்காக எழுதிப் பிரபலமாகியுள்ள 'ஜோதிர்லதா கிரிஜா' கூட முதலில் குழந்தைகளுக்காக எழுதியவர்தான்.

o **ப. சாமிநாதன், ப. கலியபெருமாள், சீர்காழி.**

கோகுலத்திற்கு ஆசிரியராகு முன் குழந்தைக் கவிஞர் வேறு ஏதாவது பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறாரா?

1944 முதல் 1951 வரை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த 'பாலர் மலர்' 'டமாரம்' 'சங்கு' ஆகியவற்றிற்கும், 1951 முதல் 1954 வரை சென்னையிலிருந்து வெளிவந்த 'பூஞ்சோலை'க்கும் ஆசிரியராக இருந்தவர் குழந்தைக் கவிஞர்.

o **மு. தமிழரசி, கடலூர்.**

குழந்தைகளுக்காகத் தமிழில் கார்ட்டூன் படம் ஏதாவது வெளிவந்திருக்கிறதா?

கல்வி கோபால கிருஷ்ணன் எழுதிய 'மிட்டாய் பாப்பா' ஒரு முழு நேர கார்ட்டூன் படமாக தமிழில் வெளிவந்து பிறகு ஏழு மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

o **க. விருத்தகிரி, அருப்புக்கோட்டை.**

இந்தியாவில் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஸ்போர்ட்ஸ் டெல்லியில்தானே அமைந்துள்ளது? இல்லை என்கிறான் என் நண்பன். சரியான இடத்தைக் கூறவும்.

பாட்டியாலாவில் அமைந்துள்ளது.

o **வ. கண்ணப்பன், தாராபுரம் — 2.**


மிளகாய் நமது நாட்டைச் சேர்ந்ததா?

மிளகுதான் நம் நாட்டுப் பொருள். மிளகாயின் தாயகம் ஜாவா. இங்கிருந்து தான் அது உலகமெங்கும் பரவியது.

— **சேரநம்பி**

ஸ்போர்ட்ஸ் — 1

வளர்ந்து வரும் வாலிபால்



வாலிபால் என்ற கைப் பந்தாட்டத்தைத் தோற்றுவித்த பெருமை அமெரிக்காவைச் சேர்ந்தது. தோற்றுவித்தவர் வில்லியம் ஜி. மார்கன். இவர் ஹோல் யோக் வட்டாரத்தின் ஒய். எம். சி. ஏ. வில் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர். இது தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு 1895. முதலில் இது 'மின்பேனட்' என்ற பெயரில் சற்று வித்தியாசமான முறையில் வர்த்தகப் பெருமக்களால் ஆடப்பட்டு வந்தது. வாலிபால் என்று இதன் பெயரை மாற்றியவர் ஸ்பிரிங் ஃபீல்டைச் சேர்ந்த டாக்டர் ஹால் ஸ்டெட். வலைக்கு மேல் பந்தைப் பலமுறை பறக்க வைப்பதால் சூட்டப்பட்ட பெயர்.

சர்வதேச வாலிபால் கழகம் 1947ல் உருவாக்கப்பட்டது. இந்தக் கழகத்தில் பதினான்கு நாடுகள் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொண்டன. சர்வதேச வாலிபால் கழகத்தின் தலைமையகம் பாரீஸில் அமைக்கப்பட்டு, பிரான்சைச் சேர்ந்த பால் லிபாட் அதன் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்! 1949 ஆம் ஆண்டுதான் முதல் உலக வாலிபால் போட்டி செக்கோஸ்லோவேக்கியாவிலுள்ள பிரேக்கில் நடைபெற்றது.

அமெரிக்காவில்தான் வாலிபால் உருவானது என்றாலும் அதன் வளர்ச்சி ஐரோப்பாவில்தான் ஏற்பட்டது. ரஷ்யர்கள் தங்கள் திறமையான ஆட்டத்தினால் வாலிபாலை ஒரு இன்றியமையாத சர்வதேச ஆட்டமாகப் பரிமளிக்க உதவினார்கள். 1964 ஆம் ஆண்டு ஜப்பானிலுள்ள டோக்கியோவில் நடந்த ஒலிம்பிக்கில்தான் முதன் முதலாக வாலிபால் சேர்த்துக் கொள்ளப் பட்டது!

1970 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் நடத்திய புள்ளி விவரக் கணக்குகள் சில புதிய உண்மைகளை அறிவித்தன. வாலிபால் பிரபலமான விளையாட்டாக 110 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களை உறுப்பினர்களாகப் பெற்றுள்ளதும், உலகில் 65 மில்லியன் வாலிபால் திறமையாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதும் தெரிய வந்தது! இது இன்று மேன்மேலும் பல்கிப் பெருகியுள்ளது. இன்று உலகெங்கும் 144 சர்வதேச வாலிபால் சங்கங்களும் 105 மில்லியன் வாலிபால் கலைஞர்களும் இருக்கிறார்கள் என்ற தகவல் பிரமிப்பை ஊட்டுகிறது.

ஐரோப்பிய நாடுகள் தவிர ஆசிய நாடுகளில் ஜப்பான், தென் வட கொரியாக்கள், சீனா ஆகியவை

வாலிபால் ஆட்டத்தில் சிறப்போடு ஆடும் வல்லமை பெற்றுள்ளன. ஒலிம்பிக் வாலிபால் போட்டி நான்கு வருஷங்களுக்கு ஒருமுறை நடைபெறு வதோடு உலகக் கோப்பை வாலிபால் போட்டியும் உருவாக்கப்பட்டு அதில் உலகெங்கிலும் உள்ள எட்டு குழுக் களின் திறமைகளைச் சோதித்துப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் வாலிபால் விளை யாட்டு ஒய். எம். ஸி. ஏ. கழகத்தின் வாயிலாக, இராணுவத்தினரின் பொழுதுபோக்குக்காக அறிமுகப் படுத்தப்பட்டு வளர்ந்துள்ளது. இந்த விளையாட்டில் இரு குழுக்கள்; குழு வுக்கு ஒன்பது என்ற விதத்தில் ஆடின.

இந்திய வாலிபால் ஆட்டக்காரர் கள் ரஷ்யாவுக்குச் சென்று ஆடிய தோடு, முதல் காமன்வெல்த் வாலி பால் போட்டியிலும் பங்கேற்றனர். இந்தப் போட்டியில் இந்தியக் குழு வெண்கலப் பதக்கம் பெற்றது பெருமைக்குரிய நிகழ்ச்சி. நெடி துயர்ந்த கனாடாவின் ஆட்டக்காரர் கள் இந்தச் சாம்பியன் போட்டியில் விருது பெற்றார்கள்.

சுவிட்சர்லாந்தில் லூசேன், செஞ் சிலுவைச் சங்கத்தின் பிறப்பிடம் மட்டுமல்ல சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இருப்பிடமும் ஆகும். இது அமைந்துள்ளது அழகிய ஏரிக்கரை யில். இங்குதான் சர்வதேச வாலிபால் ஃபெடரேஷனின் தலைமையகம் உள்ளது. தலைமைய கத் திறப்பு விழா 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 14ந் தேதி நிகழ்ந்தது. சர்வ தேச வாலிபால் பெடரேஷனின் தலைவர் ரூபன் அகோஸ்டா உலக வாலிபால் சங்கக் கொடியை ஏற்றி வைத்தார்!

1984 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் வாலிபால் பந்தயத்தில், அரசியல் காரணங்களால் ரஷ்யா, பல்கேரியா, போலந்து, க்யூபா, செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி ஆகிய நாடுகள் பங்கேற்கவில்லை.

தமிழக வாலிபால் ஆட்டக்காரர் கள் 1989 ஆம் ஆண்டு திருச்சியில் பெடரேஷன் கோப்பையை வென்று சாதனை படைத்தார்கள். அதன் பிறகு 1991 ஆம் ஆண்டு ஜனவரியில் தேசிய வாலிபால் போட்டியில் இவர் கள் வெற்றி வாகை சூடியது தமிழகத் துக்குக் கிடைத்த மாபெரும் பெருமை.



* வாலிபால் வெற்றியாளர்கள் பரிசு பெறுகிறார்கள். பரிசளிப்பவர் திரு சிவந்தி ஆதித்தன்.

'முதியவர்களுக்குச் சளைத்தவர்களில்லை நாங்கள்' என்று கூறுவது போல் தமிழக வாலிபால் இளைஞர் அணி 'ஹாட்ரிக்' வெற்றி பெற்றது. அதோடு மேற்கு வங்காள பான்ஸ் பெரியாவில் தனது மூன்றாவது வெற்றியை நிலைநிறுத்தித் தமிழர்களைத் தலைநிமிர வைத்துச் சாதனை படைத்தது. அடுத்து தமிழ்க மகளிர் அணியினரும் தங்கள் திறமையை வெளிப் படுத்தியுள்ளனர். தேசியப் போட்டியில் ரன்னர் கோப்பையை இவர்கள் பெற்றது பாராட்டப்பட வேண்டிய செயல். இந்த மூன்று சாதனைகளுக்காக பார்க் ஷெர்டன் ஹோட்டலில் மிகப் பெரிய பாராட்டு விழா நடைபெற்றது! தமிழகத்தில் வாலிபால் ஆட்டம் சிறப்பான முறையில் வளர்ந்து வருவதை அனைவருமே நன்கு உணர்ந்து மகிழ்ந்தனர். வாலிபால் பயிற்சி முகாம்களை நடத்தி ஆட்டக்காரர்களின் திறமையை வளர்க்கப் பாடுபட்டு வரும் தமிழக வாலிபால் சங்கமும் அதன் காப்பாளர் — தலைவர் திரு. சிவந்தி ஆதித்தனும் பெரிதும் பாராட்டுக் குரியவர்கள்.

தமிழக வெற்றிக் குழுவின் காப்டன் ஜி. அந்தோணி சந்திரசேகரன் ஒரு பட்டதாரி. சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த இவர் மத்திய சுங்கத் துறையில் பணிபுரிகிறார். தமிழக வாலிபால் குழுவுக்காக நான்கு ஆண்டுகளாக ஆடி வரும் இவருக்கு 1991 ஆம் ஆண்டு காப்டன் பதவியில்தான் தேசிய விருது கிடைத்துள்ளது. தமிழகக் குழுவில் 'டீம் ஸ்பிரிட்' பிரமாதமாக இருப்பதோடு, சிவராமன், சுந்தரம் போன்ற தலைசிறந்த ஆட்டக்காரர்களின் திறமையும் வெற்றிக்கு உதவியுள்ளது. எர்னஸ்ட் அமீர்பாபுவுக்கு இது முதல் பிரவேசம். தொடக்க ஆட்டமே வெற்றி ஆட்டமாக அமைந்து விட்டது இவருக்கு!

1991 ஜனரி 1 ஆம் தேதி தமிழக வாலிபால் குழு பெற்றுள்ள வெற்றியில் கோச் ஆர். மனோகரனின் பங்கு அளவிடற்கரியது. தனபால் அவருக்கு 'கோச்சிங்'கில் உதவியாளராகப் பணிபுரிந்தார்!

ஹாட்ரிக் வெற்றி கண்ட இளைஞர் வாலிபால் அணியின் காப்டன் சீனிவாச மூர்த்தி. பாளையங்கோட்டையிலுள்ள இவர் செயிண்ட் சேவியர் கல்லூரி மாணவர். தேசியப் போட்டியில் இவர் இரண்டாவது முறை கலந்து கொள்கிறார்! இளைஞர் அணியின் சிறப்பான ஆட்டங்கள், வருங்காலத்தில் ஸீனியர் போட்டிகளுக்கு இவர்கள் இப்போதே சிறப்பாகத் தயாராகிறார்கள் என்பதைக் காட்டி வருகிறது.

மகளிர் பிரிவில் வருங்காலத்தில் புகழோடு திகழக் கூடியவராக கில்ஸ்டாஸ்வீட்லைன் ராஜா ஆடி வருகிறார். பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய ஜூனியர் சாம்பியன் போட்டியில் இவரது ஆட்டத் திறமை பளிச்சிட்டது! இவரது குடும்பத்தினரும் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டவர்கள் என்பது இவருக்குள்ள பிளஸ் பாயிண்ட்! இவர் அழகப்பா உடற் பயிற்சிக் கல்லூரி மாணவி. வருங்காலத்தில் வாலிபால் ஆட்டத்தில் மகளிர் அணிக்குப் பல வெற்றிகளைத் தேடித் தரும் வல்லமை பெற்றுள்ள திறமையாளர் இவர்.

தமிழக வாலிபால் ஆட்டத்துக்கு ஒரு அதிர்ஷ்டம் சர்வதேச அளவில் 'கோச்' ரமணராவ் கிடைத்திருப்பது! இவர் தற்சமயம் திருப்பூர் டெக்ஸ்டைல் ஆலையில் விளையாட்டுத் துறை அதிகாரியாகப் பணிபுரிகிறார். திருச்சியில் 1976 ஆம் ஆண்டு தேசியப் போட்டியில் வெற்றி பெற்ற குழுவின் காப்டன் இவர்தான். பயிற்சித் துறையிலும் இவர் ஒரு பட்டதாரி. இந்தியா முழுதும் பல பயிற்சி முகாம்களை நடத்திப் பெருமை பெற்றவர். உலக வாலிபால் கழகத்தில் ஒரு பயிற்சி ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்! டோக்கியோவில் நடைபெற்ற ஆசிய வாலிபால் கருத்தரங்கில் பங்கேற்கும் பெருமை இவருக்குக் கிடைத்துள்ளது. அர்ஜுன் விருதும் பெற்றுள்ளார்.

வாலிபால் ஆட்டத்துக்காக அர்ஜுன் விருது பெற்ற ஸ்ரீதர் 1976ல் தேசியப் போட்டியில் வெற்றி பெற்ற குழுவில் இடம்பெற்றவர். ஆல்ரௌண்டரான ஸ்ரீதர் உதக

மண்டலம் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலையில் வெல்பேர் ஆபீசராகப் பணியாற்றுகிறார்! 1986 ஸியோல் ஆசியப் போட்டியில் வெண்கலப் பதக்கம் பெற்ற குழுவில் இடம்பெற்ற பெருமையும் இவருக்கு உண்டு.

இப்படித் தமிழகம் வாலிபால் ஆட்டத்தில் பெருமையோடு விளங்கும் போது சென்னைத் தலைநகரில் வாலிபால் ஆட்டத்துக்கான ஓர் இண்டோர் ஸ்டேடியம் இல்லையே என்று வாலிபால் நிர்வாகிகளுக்கு ஏக்கம். இந்த ஏக்கத்தைத் தீர்த்து வைத்து அதிசயத்தில் ஆழ்த்த தமிழக விளையாட்டுத் துறை இயக்குநர் திரு. ரவீந்திரநாத் ஒரு நற்செய்தியைத் தெரிவித்துள்ளார். பூந்தமல்லி நெடுஞ்சாலையில் நேரு பூங்காவுக்குப் பின்னாலுள்ள மைதானத்தில் இரண்டு கோடி ரூபாய் மத்திய அரசின் நன்கொடையோடு இண்டோர் ஸ்டேடியம் உருவாகப் போகிறதாம்!

ஸ்போர்ட்ஸ் — 2

2 கோடியில் ஒரு ஸ்டேடியம்

கூடைப் பந்தாட்டத்தில் இந்தியக் குழுவுக்குப் பல வெற்றிகளைப் பெற்றுத் தந்துள்ள பெருமைக்குரியவர் பாண்டா. அவரது திறமை எந்த அளவுக்கு வளர்ந்துள்ளதோ அந்த அளவுக்கு அவரது உருவமும் உயரமானது! ஆமாம். அவரது உயரம் ஆறடி பத்து அங்குலம்!

வெளியூர் போனால் அவரது உயரத்திற்குக் கட்டில் கிடைப்பது கடினம்! அதனால், தான் தூங்கும் கட்டிலுக்கு அருகே அதே உயரத்தில் ஒரு மேசையை இழுத்துப் போட்டுக் கொண்டுதான் படுப்பார். வேறு வழி?

அவரது உயரம், முகப்பொலிவு, ஆட்டத் திறமை, ஆகியவற்றைப் பார்த்து அவரைச் சினிமாவில் நடிக்க வைக்கப் பல முயற்சிகள் நடந்தன. பல சான்ஸ்கள் அவரைத் தேடி வந்தன. ஆனால், பாண்டா அவற்றை ஏற்க மறுத்து விட்டார். எவ்வளவு மாறுபட்ட விளையாட்டு வீரர் இவர்?

மற்ற விளையாட்டுகளைப் போலவே கூடைப் பந்தாட்டத்திற்கும் நீண்ட வரலாறு உண்டு. பத்தாவது நூற்றாண்டில் மெக்சிகோவிலுள்ள ஒல்மெக்குகள் 'போக்டி — போக்' என்ற ஆட்டத்தை ஆடியிருக்கிறார்கள். இது சுற்றிலும் சுவர் எழுப்பப்பட்ட மைதானத்திற்குள் ஆடப்பட்டது. ஒவ்வொரு பகுதியிலும் ஒரு கோல். ஒரு வட்ட வடிவமான கல்லின் நடுவில் துளையிடப்பட்டு அது ஒரு பக்கச் சுவரில் பதிக்கப்பட்டிருக்கும். மைதானத்தைச் சுற்றிலும் கொடிகள் பறக்க விடப்பட்டிருக்கும். மைதானச் சுவர்களில் தெய்வ வடிவங்கள் பொறிக்கப்பட்டிருக்கும். இந்த விளையாட்டு மத தொடர்பான திருவிழாக்களில் விளையாடப்பட்டு வந்தது. இந்த 'போக் — டு — போக்'

ஆட்டமே இன்றைய கூடைப் பந்தாட்டத்தின் அம்மா என்று குறிப்பிடுகிறார்கள். இருப்பினும் இதை அப்படியே ஏற்க முடியாது. காரணம், இந்த ஆட்டத்திற்கான பந்தை விளையாட்டுக்காரர்கள் தங்கள் கால், கை, மூட்டு, தொடை ஆகியவற்றினாலேயே தள்ளித் தள்ளி ஆடியிருக்கிறார்கள். அதனால் இதுவே கூடைப் பந்தாட்டத்தின் தாய் என்பதை அப்படியே யாரும் ஏற்பதில்லை.

விளையாட்டுக் கலைக் களஞ்சியம் (அதலெடிக் என்சைக்ளோபீடியா) இன்னொரு புதிய தகவலைத் தருகிறது. பிளாரிடாவில் உள்ள ஒரு சிலர் 1818 ஆம் ஆண்டில் ஒரு கம்பத்தின் உச்சியில் வளையமொன்றைப் பொருத்தி, பந்தை அதில் வீசியெறிந்து விழச் செய்யும் விளையாட்டு ஒன்றை ஆடியிருக்கிறார்களாம். இதையே நவீன கூடைப் பந்தாட்டத்தின் அம்மா என ஏற்கிறார்கள்.

இன்றைய கூடைப் பந்தாட்டத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர் நேம்ஸ் நெயிஸ்மித். 1891 ஆம் ஆண்டில் ஒய். எம். சி. ஏ. பயிற்சிப் பள்ளியில் இவர் இந்த நவீன ஆட்ட முறையைத் தோற்றுவித்தார். இதை அவர் தானாகத் தோற்றுவிக்கவில்லை. உடல் பயிற்சிப் பள்ளியின் தலைமைப் பயிற்சியாளர், மக்களை அதிகமாகக் கவர்ந்துள்ள பழைய விளையாட்டுக்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு விளையாட்டைத் தோற்றுவிக்கும்படி இவரைக் கேட்டுக் கொண்டார். இந்த உத்தரவின் காரணமாகவே நேம்ஸ் நெயிஸ்மித் புதிய ஆட்டம் ஒன்றைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். கால் பந்து, ஹாக்கி என்ற வலைகோல் பந்தாட்டம் போன்ற பல ஆட்டங்களின் நுட்பங்களைப் பரிசீலித்து அவற்றின் அடிப்படைகள் சிலவற்றை ஏற்று, கைகளினால் தட்டி வலைக்குள் பந்தைப் போடும் இந்தக் கூடைப் பந்தாட்டத்தைத் தோற்றுவித்தார் நெய்ஸ்மித். இதிலும் ஒரே குழப்பம் ஏற்பட்டது. ஆட்டம் தோற்றுவிக்கப்பட்டவுடன் ஏகப்பட்ட பேர்கள் அதில் பங்கு கொள்ளவே, எப்படி வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது என்ற பிரச்னை எழுந்தது. அதற்குப் பிறகுதான் ஒரு அணிக்கு ஐந்து பேர் என்று முடிவு செய்யப்பட்டது.

ஸ்பிரிங் பீல்டில் 1959 ஆம் ஆண்டில் கூடைப் பந்தாட்டத்தைத் தோற்றுவித்த நெய்ஸ்மித்தின் நினைவாக 'ஒரு புகழரங்கம்' அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய கூடைப் பந்தாட்டத்தில் ஒரு அணிக்கு ஐந்து பேர் வீதம் பங்கு கொள்கிறார்கள். விளையாட்டின் நோக்கம் பந்தைத் தட்டித் தட்டிச் சென்று கூடைக்குள் போடுவது. இதற்கு எண்ணிக்கை [பாயிண்ட்ஸ்] உண்டு. அதிக எண்ணிக்கை பெற்ற குழு வெற்றி பெற்றதாகக் கருதப்படும். இந்த ஆட்டத்தை வெளியரங்கிலும் ஆடலாம். உள்ளரங்குகளிலும் ஆடலாம்.

கூடைப் பந்தாட்டத்தில் புரொபஷனல் ஆட்டம் 1890 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. டிரென்டன் நியூ ஜெர்சிக் குழு ஒரு புரொபஷனல் ஆட்டத்தைத் தொடங்கி இலாபத்தையும் சம்பாதித்துக் காட்டியது. 1898 ஆம் ஆண்டில் நேஷனல் கூடைப் பந்தாட்டக் குழு முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டது. 1920 ஆம் ஆண்டுகளில் 'செல்டிக்ஸ்' ஆட்டக்காரர்கள் இந்த ஆட்டத்தில் தனித்திறமை காட்டித் தோல்வியடையாத சாம்பியன்களாகத் திகழ்ந்தனர். 1931 ஆம் ஆண்டு வாக்கில் இவர்கள் தங்கள் பெயரை நியூயார்க் செல்டிக்ஸ்' என்று மாற்றிக் கொண்டு பந்தயப் பயணங்களை மேற்கொண்டனர். இவர்களை வெல்லக்கூடிய அணி இல்லவே இல்லை என்னும் அளவுக்கு இவர்கள் கொடிகட்டிப் பறந்தனர்.

முழுக்க முழுக்க நீக்ரோ ஆட்டக்காரர்களைக் கொண்ட அணியை உருவாக்கிய பெருமை ராபர்ட் டக்ளஸ்ஸைச் சாரும். இந்த அணிக்கு ரென்ஸ் என்று பெயர். கூடைப் பந்தாட்டத்தில் உலகப் புகழ் பெற்ற ஹார்லம் குளோப் டிராட்டர்ஸ் குழுவினரைத் தோல்வியடைய வைத்த சாதனையை இவர்கள் செய்து காட்டினர். உலக



* கூடைப் பந்தாட்டம் — மகளிர் அணி — துடிப்பான ஆட்டம்.

புரோபஷனல் பதவியைக் கைப்பற்றினர்.

ஒலிம்பிக் பந்தயங்களில் கூடைப் பந்தாட்டத்தைச் சேர்க்க வைத்த பெருமை அமெரிக்காவுக்கு உண்டு. இதற்கான முயற்சிகள் 1904 ஆம் ஆண்டு செயின்ட் லூயி ஒலிம்பிக்கில் எடுக்கப்பட்டன. 1924 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் பிரிட்டன், அமெரிக்கா, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் 'எக்சிபிஷன்' பந்தயங்கள் நடைபெற்றன. அமெரிக்கா கூடைப் பந்தாட்டத்தில் அளவில்லாத ஆர்வத்தைக் காட்டி அதை நன்கு வளர்த்து வருகிறது. கூடைப் பந்தாட்டக் குழுக்கள் இல்லாத பள்ளிகளே அமெரிக்காவில் இல்லை. நியூ ஜெர்ஸியில் உள்ள பாஸிக் பள்ளி மட்டும் 159 வெற்றிகளைப் பெற்றுள்ளது.

கூடைப் பந்தாட்ட சர்வதேசக் கழகம் 1932 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சர்வதேசப் போட்டிகளை இதுவே நிர்வகிக்கிறது. ஸ்வீடனைச் சேர்ந்த போபோர்டுதான் இதன் முதல் தலைவர். 1936 முதல் 1972 வரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் எல்லாம் அமெரிக்காவே வெற்றி பெற்று வந்துள்ளது. 1972 ஆம் ஆண்டில் இந்த வெற்றி ரஷ்யாவிடம் கை மாறியது. ஆனாலும், 1976ல் மறுபடி அமெரிக்காவே இதைக் கைப்பற்றியது.

உலகக் கூடைப் பந்தாட்டக் கழகத்தின் விதிகளின்படி பந்தாட்ட மைதானம் 85 அடி நீளம், 46 அடி அகலம் உள்ளதாக இருக்க வேண்டும். மைதானம் இரு பாதிகளாகப் பிரிக்கப்பட்டு நடுக்கோடு வரையப்பட வேண்டும். பந்தாட்ட வளையமுள்ள பகுதியில் 'ப்ரீத்ரோ' கோடு வரையப்பட வேண்டும்.

தமிழகத்திலுள்ள கூடைப் பந்தாட்டக்காரர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. தமிழகக் கூடைப் பந்தாட்டக் கழகம் கீழ்ப்பாக்கம் தோட்டக் காலனியில் ஓர் அருமையான உள் அரங்கத்தை இரண்டு கோடி ரூபாய் செலவில் உருவாக்கி வருகிறது. இங்கு ஏற்கெனவே இரு கான்கிரீட் தள மைதானங்கள் கூடைப் பந்தாட்டத்திற்காக உள்ளன. சர்வதேச அளவில் பந்தயங்களை நடத்த ஏற்றவாறு உருவாகி வரும் புதிய விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டு வருகிறது.



வைகறைப் பொழுதின் வசந்தங்கள்

(வசந்த நாயகன் — பக். 128, ரூ. 16/—, ஹிந்துமதி பப்ளிகேஷன்ஸ், 5, கொசத் தெரு, ஆலங்காயம், 635 701. வ. ஆ. அம்பேத்கார் மாவட்டம்.)

பெரியவர்களுக்கான நூல் போல் தலைப்பு இருந்தாலும், இந்தச் சிறுகதைத் தொகுப்பின் பத்துக் கதைகளும் வளர்ந்த குழந்தைகளுக்கானவையே. பிச்சையெடுப்பதைக் கண்டிக்கும் 'சூரியோதயம்,' 'சந்தனக் கட்டை கடத்தும் சமூக விரோதியைத் துணிந்து காட்டிக் கொடுக்கும் 'தங்கப் பதக்கம்,' செல்வ நிலையிலிருந்து திடீரென்று வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டாலும் இரவுப் பள்ளியில் படித்து முன்னேறும் 'அன்பின் ஆழம்' என்று இப்படி அருமையான பத்துக் கதைகள் இதில் உள்ளன. கதைகள் குழந்தைகளுக்கே என்பதால் இன்னும் எளிமைப்படுத்தியிருக்கலாம்.

எல்லோரும் வாழ்க

சௌந்தர் — பக். 70, ரூ. 8.50, பழனியப்பா பிரதர்ஸ், பீட்டர்ஸ் சாலை, சென்னை — 14.

முன்கோபக்கார ரவி, எதுவுமே தனக்குத்தான் என்று புரண்டு பிடிக்கும் ராமு, தங்கமான குணங்களடங்கிய எழிலரசி ஆகிய மூவரும் அண்ணன் தங்கைகள். ஒரு தேவதை ஐந்து மந்திரக் கற்கண்டுக் கட்டிகளைக் கொடுத்து, அவற்றை வாயில் போட்டுக் கொண்டு நினைக்கும் எதுவும் நிறைவேறும் என்று சொல்லி மறைகிறது. கோபக்கார ரவி, பேராசைக்கார ராமு, இருவரும் கற்கண்டுக் கட்டிகளை வாயில் போட்டுக் கொள்கின்றனர். அதற்குமேல் நடந்ததைக் கூறினால் சுவை போய்விடும். எல்லோரும் வாழ்க என்ற இந்த நாடகத்தின் இறுதியில் ரவியும் ராமுவும் மாறுகிறார்கள். இதோடு கூட மூன்று நல்ல நாடகங்களும் இருக்கின்றன. இந்த நூல் ஏவி எம். அறக்கட்டளையின் வெள்ளிப்பதக்கம் பரிசு பெற்றது. படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்ற நாடக நூல்.

காணாமல் போன மணியார்டர்

ஹூர்து எஸ். ராஜ் — பக். 87 — ரூ. 9/— வானதி பதிப்பகம், சென்னை — 600 017.

கல்வியறிவில்லாத ஒரு ஏழைக் கிழவி மணியார்டரில் அனுப்பும் ரூ. 500/—ஐ, மிகத் திறமையாக மோசடி செய்துவிடும் மோசக்காரக் கும்பலை இரண்டு இளைஞர்கள் சவாலாக எடுத்துக் கொண்டு அலைந்து திரிந்து கண்டுபிடித்துக் கொடுக்கிறார்கள். இதுவரை யாருமே தொடாத கதைக்களம். படிக்கத் தொடங்கி விட்டால் முடிக்காமல் வைக்க முடியாதபடி மிகச் சுவையாக நாவல் ஓடுகிறது. கோவை பெருந்தகையாளர்கள் எல்லப்பா — ரங்கம்மா அறக்கட்டளையினரின் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுப் போட்டியில் முதற் பரிசு பெற்ற தரமான நாவல்.

ஒரு தேசத்துப் பறவைகள்

சிற்பி சோமு — பக். 80 — ரூ. 10/—, சரவணா பிரசுரம், தெற்கு ராஜ வீதி, புதுக்கோட்டை — 1.

பண்பட்ட எழுத்தாளர் சிற்பி சோமுவின் ஒன்பது மணியான சிறுகதைகளைத் தாங்கிய நூல்.

தேசிய ஒருமைப்பாட்டின் அவசியத்தை மிக அழகாக மனத்தில் பதிய வைக்கிறது 'ஒரு தேசத்துப் பறவைகள்' கதை. டி.வி. பார்க்கும் குழந்தைகளுக்குப் புதிய சிந்தனையைத் தர வல்லது 'பரிசு கிடைத்தது' கதை. ஒவ்வொரு கதையும் புதிய கோணத்தில் நல்ல குணத்தை; நல்ல சிந்தனையைச் சுவையாக விதைக்கிறது. நல்ல தரமான தொகுப்பு.


— ரே

மதிப்புரைக்கு நூல் அனுப்புவோர் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். முகவரி: ஆசிரியர், 'கோகுலம்,' ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 32.


கருமியன் கஞ்சி
அமைப்பு: ரே
ஓவியம்:
கருத்து: பி.பாலமுருகன் அகிம்சாபுரம்.
விறகுவெட்டி முனியன் ஏழை. ஆனால் நல்லவன். ஒரு நாள்
இதுல கொஞ்சமா கஞ்சி இருக்கு எடுத்துட்டு காட்டுக்குக் கிளம்பு.
காட்டில் முனியன் மரம் வெட்டிக் கொண்டிருந்தான்..
தேவதை ஒன்று வந்தது...
பசி மிகுதியால் கஞ்சியைக் குடித்தது —
கலயம் நிறையப் பொற் காசுகளைப் போட்டது —
முனியன் மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான் —
எல்லாம் மாரியாத்தா கருணை!


முனியன் பணக்காரனான கதையை கருமி சோமு அறிந்தான் —
இப்பவே கஞ்சி எடுத்துக் கிட்டு நானும் போறேன்!
தேவதை வந்து கஞ்சியைக் குடித்தது —
எதையோ கலயத்துள் மூடி வைத்தது —
வீடு திரும்பிய சோமு ஆசையோடு கலயத்தைத் திறந்தான் —
கலயத்திலிருந்து —
ஐயோ! பாம்பு... பாம்பு!
எல்லோரும் ஓடினர் —
கருமிப் பயலின் பொறாமைக்கு ஏற்ற தண்டனை!

தானத்தில் கட்டிய மாளிகை!



இப்ராகிம் அடில்ஷா என்ற மன்னர், 1820 ஆம் ஆண்டில், பீஜப்பூரை ஆண்டு கொண்டிருந்தார். அவருக்குச் சில நாட்களாக மரணத்தைப் பற்றிய அச்சம் ஏற்பட்டு, மன அமைதியைக் குலைத்துக் கொண்டிருந்தது. தனது ஆஸ்தான சோதிடனைக் கலந்து ஆலோசித்தார்.

அச் சோதிடன், சாதுரியத்தில் மிகவும் வல்லவன். மன்னனின் மரண பயத்தைப் பயன்படுத்தி ஏராளமான செல்வத்தைப் பெற திட்டமிட்டான்.

சோதிடன், அதன் பிறகு, தனது நண்பன் ஒருவனை அழைத்துத் தான் மன்னனிடம் கூறியுள்ள நாளில், விடியற்காலையில் அரண்மனை முன் காத்திருந்து, மன்னன் வந்ததும், முதலாவதாக அவன் முன் எதிர்ப்பட வேண்டும் என்றும் மன்னர் கொடுக்கும் பணத்தில் தனக்குப் பங்கு தர வேண்டும் என்று ஏற்பாடு செய்து கொண்டான்.

சோதிடன் திட்டத்திற்கு மாறாக விதி முந்திக் கொண்டது! சோதிடனின் நண்பன், குறிப்பிட்ட நாளுக்கு முதல் நாள் திடீரென்று இறந்து விட்டான்!

மன்னர் முன், தெருப் பெருக்கும் துப்புரவாளரான ஒருவன் எதிர்ப்பட்டான். மன்னன், அவனுக்கு ஐந்து லட்சம் ரூபாயைத் தானம் கொடுத்தான். அவன் அந்த ரூபாயைக் கொண்டு ஓர் அழகிய மாளிகை கட்டினான். அந்த மாளிகையின் பெயர் 'மிக்தார் மகால்' என்பது. அந்த மகால், பிரம்மாண்டமான தோற்றம் உடையது.

மன்னர் அடில்ஷா அதன்பின், பல ஆண்டுகள் வாழ்ந்து இறந்தார்.

— தாராபுரம் கருணிமகன்.

நிலாவை எடுத்தவன்!



முல்லா நசிருத்தீன் சிறுவனாக இருந்த போது ஒரு நாள் இரவில் தன் வீட்டுக் கிணற்று நீரில் நிலாவின் உருவம் தெரிவதைத் தன் நண்பனுக்குக் காண்பித்தார். "நிலா கிணற்றில் விழுந்து விட்டது. அதைக் கிணற்றிலிருந்து எடுப்போம் வா" என்று தன் நண்பனிடம் கூறினார்.

உடனே வீட்டிலிருந்து கயிற்றை எடுத்து ஒரு முனையில் 'பாதாளக் கரண்டி'யைக் கட்டி, மற்றொரு முனையை இருவரும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கிணற்றுக்குள் போட்டனர்.

பாதாளக் கரண்டியின் முனை எதிர்பாராதவிதமாக கிணற்றுச் சுவரில் இருந்த ஒரு கல் இடுக்கில் சிக்கிக் கொண்டது.

இருவரும் சேர்ந்து பலங்கொண்ட மட்டும் கயிற்றை இழுத்தார்கள். பாதாளக் கரண்டி கல் இடுக்கிலிருந்து விடுபட்டதால் இருவரும் தரையில் மல்லாந்தபடி விழுந்தார்கள்.

அப்போது இருவரும் தற்செயலாக வானத்தைப் பார்த்தனர். நிலா வானத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். 'தாங்கள் வேகமாக இழுத்த இழுப்பினால் தான் நிலா கிணற்றிலிருந்து எடுக்கப்பட்டு ஆகாயத்திற்குச் சென்று விட்டது' என்று கூறி சிறுவன் முல்லா பெருமைப்பட்டான்.

— தா. ஷேக் உசேன்.

சார் தபால்!



எப்படிப் பாராட்டுவோம்!

* 'இனாலி ராமன்' கதையும், 'கரடியண்ணன் கலியாணம்'' பாட்டும், 'சிரிப்' பக்கமும் படித்து விலா நோகச் சிரித்தேன்.

பொகலூர், ஆர். அனிதா.

* இனாலி ராமன் படக்கதை அருமை. வாய் விட்டு சிரித்தேன்.

மகிழஞ்சேரி, கே. கணேசன்.

* 'மலை ஏறும் ரயில்! மனம் கவரும் எழில்!' — அட்டைப் படம் கண்ணைப் பறிக்கிறது. திருஷ்டி சுற்றிப் போடுங்கள்!

சங்கமங்கலம், எஸ். மனோகரன்.

* 'சதுரங்க ஆட்டம்' பற்றியும், சதுரங்கத்தில் உலக சாதனை புரியவிருக்கும் 'தமிழ் நாட்டின் ஆனந்த்' பற்றியும் அறிந்து கொள்ள — தெரிந்து கொள்ள — வாய்ப்பளித்த 'கோகுலத்தை' எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்?

ஸ்ரீமுஷ்ணம், சா. கிருஷ்ணசாமி.

* ஏப்ரல் ஃபூல் தோன்றிய விதத்தையும், அதைப் பற்றிய அனைத்து விவரங்களையும் இந்த மாத கோகுலத்தில் அறிந்து கொண்டேன்.

மொரப்பூர், ஏ. செந்தில்.

* மந்த புத்தி; துஷ்ட புத்தி; தர்ம புத்தி; நல்லறிவு புகட்டும், சுவையான படக் கதை!

கும்பகோணம், கே. என். பாலகிருஷ்ணன்.

* ''திருமணமாம் திருமணம்'' வெகு அருமை!

பழையனூர், ரு. சம்பந்தம்.

* பாவேந்தர் குழந்தைப் பாடல்களும் எழுதியிருக்கிறார் என்பதை கோகுலம் மூலம் அறிந்தோம். பாடல்களையும் ரசித்தோம்.

மகிழஞ்சேரி, கே. கணேசன்.

* மந்தபுத்தி, துஷ்டபுத்தி, தர்மபுத்தி கதையை படித்தால் வரும் நல்ல புத்தி!

திருவள்ளூர், கே. பி. மதன்மோகன்.

* நீயே போதும், அன்பின் பங்கு, இரும்மா இரு கதைகள் நெஞ்சைத் தொட்டன. ''கோகுலத்தைக் கையில் வைத்திருந்தாலே பெருமை'' என்பதில் ஐயமேது?

அரியூர், டி. சிவக்குமார்.

* கோகுலம் அட்டைப் படம் சூப்பர். ஊட்டியில் நின்றது போல் ஒரு உணர்வு தோன்றியது.

நாகர்கோவில், ஆர். மணிவர்மன்.

* மந்திரச் சங்கு படிக்கப் படிக்க இனிமை.

ஆனைகல் மேடு, சி. மாதேஸ்வரன்.

* ஏப்ரல் ஃபூல் எப்படி வந்தது என்பதற்கு ஓர் அழகான, விரிவான, தெளிவான விளக்கத்தினைத் தந்தமைக்கு நன்றிகள்!

குத்தாலம் — 1. ஆர். வேங்கடேஷ்.

* 'பாவேந்தரின் குழந்தை இலக்கியப் பாடல்கள்' உரையாடல் பல புதிய பயனுள்ள செய்திகளைத் தந்தது.

குத்தாலம், பி. பிரசாத்.

* தேனீக்கள் பற்றிய செய்திகளைப் படித்த போது தேன் குடித்தது போன்று இருந்தது.

குத்தாலம், ஜி. வெங்கி.

* மாதா மாதம் அறிவியல் உண்மைகளைப் புகட்டி எங்கள் அறியாமையை போக்கும் ரேவதி அவர்களுக்கு நன்றி. இசையைக் கேட்குமா பாம்பு அற்புதம்.

ஆரணி, ஆர். பாஸ்கரன்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர் வி. முரளி. ஆசிரியர்: ஸி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 234414; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.


அறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-; விமானத் தபால்: ரூ. 135/-.

ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-; விமானத் தபால் ரூ. 270/-.



நீங்கள் கட்டிடக்கலை நிபுணராக விரும்பினால்
எல்லாவிஷயங்களும் கனகச்சிதமாக இருக்க வேண்டும்.

மிகச்சிறந்த கட்டிடக்கலை நிபுணராக வேண்டும் என்பதையே மாபெரும் இலட்சியமாகக் கொண்டவள் இவள்.
தான் செய்யும் மாடல்களை அளப்பது, வரைவது, நிர்மாணிப்பது, உருவாக்குவது என அனைத்தையும் செய்பவள்.
செய்யும் அனைத்து வேலைகளையுமே வெற்றிகரமாக முடிக்க நினைப்பவள்
ஆகையால் இவள் தேர்ந்தெடுப்பது, மிகச் சிறந்த ஜியாமெட்ரி செட்.
கோரஸ் சக்ஸஸ் : ப்ரொட்ராக்டர், டிவைடர், காம்பஸ், ஸ்கேல்— அனைத்துமே ஆண்டுக் கணக்கில் தொல்லையின்றி நுட்பமான செயல் திறனை அளிக்கவென்றே மிகவும் கச்சிதமாக உருவாக்கப்பட்டவை.
நீடித்துழைக்கும் சிவப்பு-வெளுப்பு மெட்டல் பாக்ஸில் வருகின்றன.
எந்தத் துறையிலும் சிறப்பாக செயலாற்ற உங்களுக்குத் தேவை உன்னதமானவை. வெற்றிக்கு அடிகோலுபவை.



கோரஸ் சக்ஸஸ் ஜியாமெட்ரி செட்
வெற்றிக்கு கருவியாக திகழ்பவை

கோரஸ் (இந்தியா) லிட். பம்பாய்-400 018 இந்தியாவெங்கும் கிளைகள் உள்ளன.

REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

